ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆனி-மீ 6-உ (19—6—1932) | மலர் 8.

பலமுள்ளவீரபுருடனுகை

குமரனுகை, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மோத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையேன வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 21-நாளைக்கு ரூ. 10.

மாதர்களுக்கு

இதுதான்வேணடியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயின்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் சேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

ரோஜா முத்தையா

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலே அல்லது ஜீவாத்மா இல்லே (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னே லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலேகள்.

குடி அரசு மாலேகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களேத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலே கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலே பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

Read.
The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலே ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்ப் அனுப்பினல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசாரத்தினல் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V. Chalam.

ஆண், பெண் அனுபவிக்க அனுபவத்தில் முதன்மை பெற்றது. 7 நாள் 14 மாத்திரை உபயோகிப்பவர்களுக்கு, விபசார கடத்தையில் ஜெனித்த சர்வ ரோகங்களேயும் சங்கரித்து திடதைரிய தேஜஸ்ரூபியாய் திகழச்செய்யும் அன்பு தொண்டன்.

கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1க்கு ரூ. 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

உதவி டாக்டர், T. K. V. Chalam. } டாக்டர் B. A. எதிராஜ். (காலரா பைரி)
கோஷாயி வைத்தியசாலே,
தென்னூர், திருச்சி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களேப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலே,
221, தங்கசாலே வீதி,
சென்னே.

இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0

ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.

மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

கூட்டு.

அருளும், ஆதரவும்காட்ட வேண்டிய இடத்தில் காட்டவேண்டும்.

4-ம் பாகம்.

[கைவல்யம்]

என்னருமை அண்ணா! உங்கள் புத்தியில் பதியும்படியான சில நியாயங்களை நேற்றுச் சொன்னேன்; கோவில்களில், நதிகளில் பெண்களைத் துன்புறுத்தும் அக்கிரமங்களை இன்று சொல்லுகிறேன்.

பாம்புக் காவடிகளைப் பற்றிப் பத்திரிகைகளில் நீங்கள் படித்ததை நானும் படித்தேன். சிறு வயது முதற் கொண்டு திருவருளைப் பற்றிக் கேட்டு வருவதில் பாம்புக்காவடியும் ஒன்றாகும். பங்குனி, உத்திரம், தைப்பூசம் முதலிய நாட்களில்காவடி செலுத்துகிறவர்கள் அநேகர். அதில் பலர் கூலியாள் மூலமாகப் பழனிக்குக் காவடி கொடுத்தனுப்புவார்கள். கூலிக்குக் காவடி எடுப்பவர்கள் வேறு சிறு கோவில், மடம் முதலியவைகளில் காவடி எடுத்து வருகிறபூசாரிகள், வேஷம் போட்டுப் பொருள்சம்பாதிக்கக் கர்வடி எடுப்பவர்கள் இவர்களெல்லாம் காவடிகளின் மகுத்துவத்தைப் பற்றியும், முருகனின் திருவருளைப் பற்றியும் பிரபலப் படுத்துவது அவர்கள் தொழில். இவர்கள் பலப்பொய் கதைகளைக் கட்டியும், பேசியும் இவர்களைப் போன்றவர்கள் சொனதைக் கேட்டும், பழய கதைகளின் ஆதாரங்களை இணைத்தும் சொறபனமாய் பால்காவடி வந்தது, கோழிக்காவடி, மச்சக்காவடி குதித்தது. பாம்புக் காவடி போயிற்று என்று அவரவர் ஊர்களில் விளம்பரப்படுத்துவார்கள். இவர்கள் வேண்டுமென்றே ஆலோசனையுடன் பொய்யைப் பரப்புகிறவர்கள் மட்டுமன்று இவர்களுடைய புத்யும், பழக்கமும் அப்படியேஅமைந்து போயிருக்கிறது. இவர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் சமயப் பற்றுடையவர்கட்குப் பொய்யென்று தெரிந்திருந்தாலும் புன்சிறிப்போடு அதற்கு ஆசீர்வதிப்பார்கள். படித்த பண்டிதர்கள் அங்கிருந்தாலோ கடவுள் சக்திக்கும். கருணைக்கும் அளவுண்டா? அவர் பெருமையை யாரால் சொல்ல முடியும்? என்று பேசி விடுவார்கள். குருக்கள் புரோகிதனிருந்தால் கலியுகத்தில் இது ஒன்றே காட்சியாக விருக்கிறது. அவரில்லாவிட்டால் என்ன தான் நடக்கும்? என்கிற வார்த்தையோடு அவர்கள் நின்று விடுவார்கள். காவடி வழிபாட்டில் சிறத்தையுடைய சனங்களும், சாதாரண சனங்களும் சிறத்தையோடு கேட்டு ஆச்சரியப்பட்டு அரகரா! வென்பார்கள். மச்சக்காவடி, கோழிக்காவடி, பாம்புக்காவடியின் உண்மைகளைத் தெரிந்து கொள்ள நினைப்பவர்களுமில்லை. உண்மைக்குப் பரிந்து பேசுகிறவர்களுமில்லை. இப்படியே அநேக காலமாக நடந்து கொண்டே வருகிறது.

காவடிகளைக் கண்டதாகச் சொல்லுவான் கேட்டால் பார்த்தவர்கள் சொன்னார்களென்பான் அது யார் என்றால் தான் சொன்ன வார்த்தையை நிலை நிறுத்த எங்கள் ஊரார் பார்த்தார்கள், என்னிடம் வாத்தியாரே சொன்னார் எங்களூர் கணக்குப் பிள்ளையின் தம்பியும், மணியகாரரின் மைத்துனரும் போயிருந்தார்கள் என்பான். அதோடு கேசும் ஏக தேசம் ருசுவாய் விடுகிறது. இப்படியே நம் விவகாரங்களெல்லாம் நடந்து வருகின்றன. அதனால் விஷயத்தைத் தெரிந்து கொள்ள புத்திக்குச் சக்தியில்லாமல் போய்விட்டது, பாம்புக்காவடி, பால் காவடிகளின் புரட்டு வெளிப்பட்டு அடிபட்டு ஒடிப் போனவர்களுமுண்டு.

பாம்பாட்டிகள் பழயபாம்பை வீடு, தோட்ட முதலியவைகளில் விட்டு நாகபாம்பிருப்பதாகவும், அதைப் பிடிப்பதாகவும் சொல்லி தன் ஊது குழாயை ஊதி தன்னால் விடப்பட்ட பழய பாம்பைப் புதுப்பாம்பு போலப் பிடித்துப் பணமும் வாங்கிப் போனதைப் பார்த்துமிருக்கிறோம். பாம்பாட்டிப் புது பாம்புகளைப் பிடிப்பதுமுண்டு. நாம் பத்திரிகையில் படித்ததை உண்மையாகவே வைத்துக் கொள்ளுவோம். சர்வ சக்தியுடைய கடவுளுக்கு அந்தப் பெருமை அவ்வளவு போதுமானதுமல்லவே. சர்வ சக்தியும், வல்லமையும் உடைய கடவுளைப் பாம்பாட்டிக்குத் தலைவனாக நிருத்தினால் அவர் பெருமைக்குத் தாழ்வல்லவா? மலையாளத்தில் பாம்பு மனையென்று ஒரு ஒரு நம்பூதரி வீடிருக்கிறதாம். அந்த வீட்டில் அநேக பாம்புகளிருக்கிறதாம். கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சப்பாத்திக் கள்ளியையெல்லாம் ஒரு சிறு பூச்சிகள் நாசம் செய்து விட்டதால் அங்கிருந்த பாம்புகள் இருக்க இடமில்லாமல் வெளிப்பட்ட அநேகம் பாம்புகள் கொல்லப்பட்டன. அமெரிக்காவில் பாம்புகளை வளர்க்கும் ஒரு சாஸ்திரி பாம்புகளையே சமைத்து ஒரு விருந்து செய்தாராம். அந்த விருந்தில் 20 விருந்தாளிகள் பாம்புகளையே சாப்பிட்டார்களாம் என்று சில நாளைக்கு முன் பத்திரிகையில் படித்தேன். நமது முருகக் கடவுள் திருச்செந்தூர், பழனி இவ்விடங்களில் வாசம் செய்து கொண்டு வருஷத்திற்குஒன்றோ, இரண்டோமுறை ஒன்றிரண்டு விஷப்பாம்புகளைத் தருவித்துக் கொண்டதினால் அவருக்குத் தான்என்னபெருமை? நமக்குத்தான் என்னலாபம் கோழிக்காவடியும், மச்சக்காவடியுமான பெருமைகளை விட்டு நமது கடவுளின் அருட்சக்திகளும் அதையுங்காணமல் கண்டதாகச் சொன்னதைக் கேட்டதாகக் கேட்டுக் கடவுள் சக்தியைக் கொண்டாடும் நமது புத்தியும் அநேக வருஷங்களாகியும் அதை விட்டு ஒரு அடிகூட முன்னெடுத்து வைக்கவில்லை.

கோழியும், முட்டையும் மேனாட்டாருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நமக்கும் வந்து கொண்டிருக்கிறது. நோயால்அவஸ்தைப் படுகிறவர்களுக்கும், மெலிந்தவர்களுக்கும் முட்டையும், கோழிக்குஞ்சு சூப்பும் கொடுப்பதல்லாமல் இளைத்தவர்களெல்லாம் கோழி முட்டை சாப்பிடவே டாக்டர்கள் சொல்லுகிறார்கள். சாப்பிடுகிறவர்கள் குணமும் காண்கிறார்கள். பழகிவிட்டால் ருசியான சாதனமாகவுமிருக்கிறது கோழிமுட்டை சாப்பிடுவது பாவம், இழிவு, ஜாதிப்ரஷ்டம் என்கிற விவகாரங்கள் இப்பொழுதில்லை. மூளை வேலையால் தேகநிலை கெடுகிறவன் தின்று கொழுக்க வேண்டிய பணக்காரன் வியாதியால் மெலிந்து போகும் நோயாளி இவர்கட்கெல்லாம் முட்டை வேண்டியிருக்கிறது வைதீகனின் மகன் பணக்காரனாகவுமிருக்கிறான். சனாதன தருமியின் மகன் வக்கீல் ஜட்ஜியாகவுமிருக்கிறான். சைவப் பண்டிதர்கள் பந்துக்களுக்கு நோயும் வந்து விடுகிறது ஆனதால் கோழிமுட்டையைப் பற்றின விவகாரமில்லை. விவகாரம் ஒழிந்தாலும் இத்தனை பேருக்கும் கோழி முட்டை வேண்டுமே நமது நாட்டில் கோழி வளர்ப்பு கவனிக்கப்படுவதில்லை, கோழிப் பண்ணையில்லை கோழி பத்துப் பன்னிரண்டு முட்டை போட்டாலே அடைகிடக்கிறது. அதில் பாதிமுட்டை அழுகிப் போகிறது. முட்டை ஒரு அணாவானாலும் உள்ளவன் வாங்கி விடுகிறான். மேனாட்டில் பல கோழிப்பண்ணை இருக்கிறது. கோழி ஒன்று வருஷத்திற்கு மூன்னூறு முட்டை போடுகிறது அதில் ஒன்றும் அழுகாமல் வைப்பதைத் தெரிந்திருக்கிறார்கள். தாயில்லாமல் குஞ்சு தானே உண்டாகி வளர்கிறது. இப்பொழுது ஒரு கோழி நாளொன்றுக்கு இரண்டு முட்டை போட ஏற்பாடு செய்கிறார்களாம். கோழிக்காகவே தனியாகப் பத்திரிகைகளுமிருக்கின்றன. நமது முருகன் திருவருளாலும், நம்முடைய பக்திகளாலும் ஒன்றிரண்டு கோழி உயிர் பெற்றாலும் முட்டை வேண்டுமே இப்பொழுது வேண்டாதவர்களுக்கு நாளை வேண்டி வந்தாலும் வருமே. ஒவல்டின்னில் முட்டை இருக்கிறதென்று சோம்பேரி பணம் சுருசுருப் புடையவனுக்கும் புத்தியில்லாதவன் பொருள் புத்தியுடையவனுக்கும் என்பது போல எத்தினை நாளைக்கு ஒவல் டின்னை வாங்க முடியும்?

கடவுள் அருளுக்காக பால்காவடியும், பாம்புக்காவடியும் எடுக்காமலும், பார்க்காமலும் மற்ற நாட்டு சனங்கள் பல துறைகளில் வெகு அற்புதங்கள் செய்து விட்டார்கள். ஒரு குண்டு போட்டால் கோவில் குளமாகிவிடுகிறது. ஒரு விஷப் புகை விட்டால் மரம், செடி, புல் பூண்டு எல்லாம் சாம்பலாக போகிறது. இரும்பு மனிதன் பேசுகிறான் வியாபாரம் கற்றுக் கொண்டான். பெருங்காற்று, பூமி அதிர்ச்சி, எரிமலை முதலியவைகள் உண்டாகும் சமயத்தை இயந்திரம் சொல்லுகின்றன. ஒரு மனிதன் ஒரு இடத்தில் ஆடினாலும், பாடினாலும், பேசினாலும் அதை ஒரு இயந்திரம் உலகமெல்லாம் ஆடியும், பாடியும், பேசியும் காட்டுகின்றன. சமுத்திரத்திலிருப்பவன் ஆகாசத்திற்கு; ஆகாசத்திலிருப்பவன் மலைக்கு; மலையிலிருப்பவன் மந்திரிக்கு, மந்திரி மன்னனுக்கு மன்னர் அதகாரிகளுக்கு; அதிகாரிகள் சனங்களுக்கு எல்லாவற்றையும் சொல்லி இயந்திரம்சொப்பனம் சாதித்து விடுகிறது. இன்னும் பல நம் புத்தியால் நினைக்க முடியாத அற்புதங்கள் நடக்கும். இந்தக்காலத்தில் பாம்புக் காவடி பத்தாயிரம் போனாலும் பிரயோஜனமென்ன? பாம்புக்காவடியில் திருவருள் காட்டுவதை விட கோவிலுக்கு வந்து சந்நதியில் தெரிசனம் செய்யும் பெண்களிடம் கருணை செலுத்தினால் முருகன் சக்தியும், கருணையும் விசேட முடையதேயாகும். அதன் விபரத்தைக் கீழே சொல்லுகிறேன்.

என்னருமை அண்ணா! பல கோவில்களைப் பற்றிச் சொல்ல வேண்டியிருந்தாலும் இப்பொழுது பாம்புக்காவடி மகுத்துவமென்று சொல்லப்படும் பழனி முருகன் சன்னதியைப் பற்றிச் சொல்லுகிறேன் உற்சவகாலங்களைப் போலப் பெருங் கூட்டங்களில்லா விட்டாலும், சாதாரணமாக சன்னதியில் கூட்டமாகவேயிருக்கும். தெரிசனம் செய்யப் போகும் கூட்டத்தில் ஆணும், பெண்ணும்கலந்தேயிருக்கும். பக்தர்களும், பாவிகளும் போவது போலவே பெண்களைத் தொந்திரவு கொடுக்கப் போகிறவர்களும்போவார்கள்சன்னதியில் வெளிச்சமிருக்காது. ஒன்றிரண்டு எண்ணை விளக்கிருந்தாலும் சரியாய் எரியாது. பக்தர்கள் தீபாராதனையை நோக்கி நிற்பார்கள். குருக்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

மதமென்பதென்ன?

(முன் தொடர்ச்சி)

அமெரிக்க ஆசிரியர், இங்கர்சால்

பாஸ்டன் நகரத்தில் 1899ம் வருஷத்தில் அமெரிக்க மதச்சுதந்திர சங்கத்தில் செய்த சொற்பொழிவு,

பொதுவாக மக்கள் இயற்கைக்கு மாறுன. அற்புதமான விஷயங்களையே விடாது பிடித்துக்கொள்ளுகிறார்கள், ஒரு கடவுளை ஒழித்தால் மற்றொரு தெய்வத்தை மனதில் கொள்கிறார்கள், காரியு மாரியுமில்லா தொழியின் பிள்ளையாரும், முருகனும் முன் வந்து நிற்கின்றார்கள். இவர்களையும் தாண்டினால் சிவனையும், விஷ்ணுவையும், பிடித்துக்கொள்ளுகிறார்கள். இவற்றையும் விட்டால் அறங்காக்கும் ஒரு சக்தியைப்பற்றிப்பேசுகிறார்கள்.

இத்தகைய சக்திதான் என்ன?

மனிதன் முன்னேற்றமடையவே செய்கிறான். ஆனால் எப்படி? தன்னுடைய அனுபவ முதிர்ச்சியினாலல்லவா? ஓரிடத்திற்குப்போகவேண்டிய ஒருவன் தெருவானது இருகிளைகளாகப்பிரிகிற இடத்திற்கு வருகிறான் சரியான பாதையென்ற நம்பிக்கையோடு இடதுபக்கம் போகிறான் பின்னால் தப்பிதமென்று தெரிந்தவுடன் திரும்பவும் வந்து வலது பக்கமாய்ப்போய் குறித்த இடத்தைச் சேருகிறான். அடுத்தநடவைபோகும் பொழுது ஞாபகமாய் இடது பக்கப் பாதையில் போகாமல் வலது பக்கமாகவே போகிறான் ஏனெனில் தனது அனுபவத்தால் அது சரியானபாதையல்ல வென்று அவனுக்குத் தெரியும் ஆனால் சமயபித்தர்கள் உடனே மக்களைச்சரியான வழியிற் செலுத்தும் ஒரு சக்தி இருப்பதாக அதை கூவுகின்றார்கள்.

சுடர் வீசி எரியும் நெருப்பின் அழகைக்காணும் ஒரு குழந்தை அதைப்பிடிக்கத்தனது கையை நீட்டுகிறது. நெருப்பு கையைச்சுட்டுவிடவே வேதனைப்படுகிறது. அதன் பிறகு தீயை அணுகுவதில்லை. உடனே சரியான வழியிற்செலுத்தும் ஒரு சக்தி அக்குழந்தைக்கு ஒரு பாடம் கற்பித்ததாகக் கருதப்படுகிறது.

இவ்வுலக அனுபவத்தையெல்லாம் திரட்டினால் அதை சரியான வழியிற்செலுத்திவிக்கும் ஒரு சக்தியென்றே சொல்லலாம் இச்சக்திக்குத்தன் உணர்வேனும், புத்தியேனும் அறிவேனும் கிடையாது. இன்னு மதற்கென நோக்கமேனும், தீர்மானிக்கும் புத்தியேனும் கிடையாது. அது நமக்கு கிடைக்கும் ஒருவித பயன்.

ஆனால் ஆயிரக்கணக்கானவர்கள் நமக்கு ஒழுக்க உணர்ச்சியிருக்கும் ஒரு தன்மையின் மூலம் கடவுள் இருக்கிறாரென்பதை நிலை நாட்ட முயற்சிக்கிறார்கள்.

மதாச்சாரியர்களும், இன்னும் தத்துவசாஸ்திரிகள் என்று சொல்விக் கொள்ளும் பலரும் இந்த ஒழுக்க உணர்ச்சி யென்பது அறம் அல்லது கடமையை உணரும் மனப்பாங்கானது நமக்கு எங்கேயோ இருந்து தோணர்ந்து கொடுக்கப்பட்ட ஒரு சக்தியென்றும், நமது மனச்சாட்சி நமக்குப்புறம்பாய் அல்லது அன்னியமான ஒரு பொருளென்றும் வற்புறுத்துகின்றனர் அது தானாக இங்கே யேற்படவில்லையாம். மனிதனால் உண்டாக்கப்படாமையாலும், அதை அமைத்திருக்கும் ஒரு கடவுள் உண்டெனக்கொள்கிறார்கள்.

மனிதன் சமூக உணர்ச்சியுடையவன். நாம் குடும்பங்களிலும் இனத்தாருள்ளும் சமூகத்திலும்தான் வாழ்கிறோம். ஒரு குடும்பத்தை அல்லது இனத்தை அல்லது தேசத்தைச் சேர்ந்தவன் எவனாவது அக்குடும்பத்திற்கு அல்லது இனத்திற்கு அல்லது தேசத்திற்கு சந்தோஷத்தை அல்லது சுகத்தை அதிகரிப்பானாயின் அவன் நல்லவனாகக்கருதப்படுகிறான் அவனைக்கண்டு மற்றவர்கள் அதிசயிக்கிறார்கள். அவனை வாழ்த்துகிறார்கள் அவனை கௌரவம் செய்கிறார்கள் அவனை நல்லவனாக அதாவது ஒழுக்கமுடையவனாகக் கருதுகிறார்கள் தமது குடும்பத்திற்கு அல்லது இனத்துக்கு அல்லது தேசத்துக்கு துயரமிளைப்பவர்கள் கெட்டவர்களாக கருதப்படுகிறார்கள். அவர்களைக்குற்றஞ்சாட்டி அவமதித்து தண்டனை செய்கிறார்கள் அவர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இகழப்படுகிறார்கள்.

குடும்பத்தவரும், இனத்தவரும், சமூகத்தார்களும் ஒரு விதமான செயலை அல்லது ஒழுக்கத்தை பின்பற்றி நடக்கவேண்டிய முறையாக விதிக்கிறார்கள். இதில் ஒரு விதமான அற்புதமுமில்லை. மனிதர்களுள் மேம்பட்டவரான ஒருவர் அன்பினின்று அற உணர்ச்சி (மனசாட்சி) பிறக்கிறது' என்றார். கடமையைப்பற்றிய அல்லது அறத்தைப்பற்றி உணர்ச்சி இயற்கையாக ஏற்பட்டதாகும்.

நாகரீகமில்லாதவர்களும் அரக்கர்களும்(Savages) தங்கள் செயல்களினால் உடனே விளையும் பயன்களை மட்டுமே கவனிக்கிறார்கள். மக்கள் முன்னேற்றமடையுங்காலத்தில் பின் வரப்போகும் பலாபலன்களையும் சிந்திக்கிறார்கள். ஒழுக்கத் திட்டங்களும் உயருகின்றன. மனிதன் தன்னுடைய மனோரதத்தையும் (Imagination) வளர்க்கிறான். தன்னுடைய சௌகரியங்களைப்போலவே பிறருடைய சௌகரியங்களையும் கருதுகிறான். அற உணர்ச்சி அதிக பலமடைகிறது. மனிதன் தன்னைத் தானே பரிசோதித்துத்தனது செயல்களைப்பற்றி தீர்மானிக்கிறான்.

அவன் அன்புடையவனாகிறான்- அன்பே முக்கியமானதும், பிரதானமானதுமான ஒழுக்கங்களுக்கெல்லாம் ஆரம்பமாகவும், அடிப்படையாகவும் இருக்கிறது. தனது அன்பிற்குபாத்திரமான ஒருவருக்குத் தீங்கு செய்கிறான். இதன் மூலம் அவனுக்கு மனக்கஷ்டமும், பச்சாதாபமும், துக்கமும் தோன்றுகின்றன. இவற்றிலெல்லாம் அற்புதமென்னவிருக்கிறது.

மனிதன் தன்னைத்தானே ஏமாற்றி கொள்ளுகிறான். இயற்கையானது மனிதனுடைய சாயலையே திரும்பக் காட்டும் ஒரு நிலைக்கண்ணாடியாக இருக்கிறது. இந்த நிலைக்கண்ணாடியினுள்ளேதெரிகிற ஒருதோற்றத்தைப் பிடித்து விட்டதாகக் கொள்ளுகிற ஒரு போலிக்கொள்கையிலேயேஇந்த அற்புதமான மதங்களெல்லாம் தொங்குகின்றன. சமய வழிப்படும் பிளேட்டோ (Plato) முதற்கொண்டுள்ள எல்லா வேதாந்திகளும் தங்களுக்கு வேண்டிய விஷயங்களை தாங்களே உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். எல்லா மத ஸ்தாபகர்களும் இவ்விதமே செய்திருக்கிறார்கள்.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவனிருக்கிறான் என வைத்துக்கொள்வோம், அவருக்கு நாம் என்ன செய்யக்கூடும்.

அவர் யாவற்றையும் கடந்தவராதலின் அவர் எதினின்றும் பிறந்தவரென்றாவது, எவ்வித கட்டுப்பாடுகள் உடையவரென்றாவது சொல்வதிற்கில்லை எனவே அவருக்கு நன்மையேனும், தீங்கேனும்செய்யமுடியாது. அவருக்கு வேண்டுவதொன்றில்லை. அவர் முழுதும் நிறைந்தவர்.

எனவே யாவற்றையும் கடந்த ஒரு கடவுள் தன்னுடைய புகழ்ச்சியை விரும்புகிறாரென்று நம்புகிற ஒரு மனிதனின் அகங்காரத்தைஎன்னென்றுரைப்பது?

நமது மதம் என்ன செய்திருக்கிறது? கிருஸ்தவர்கள் பிற மதங்களெல்லாம் பொய்யென ஒத்துக்கொள்ளுகிறார்கள். எனவே கிறிஸ்துவ மதத்தைமட்டும் பரிசீலனை செய்வோம்.

கிறிஸ்தவமதம் நன்மை பயந்திருக்கிறதா? மனிதர்களை உயரிய குணமுடையவர்களாக. தயாள சிந்தனையுடையவர்களாக, மேலும் மேலும் உண்மையானவர்களாகச் செய்திருக்கிறதா? கிருஸ்தவ ஆலயங்கள் ஆதிக்கமுடைய காலங்களில் மனிதர் சுகமாகவும், மேன்மையாகவு மிருந்தார்களா?

இத்தாலியா, ஸ்பெயின், போர்ச்சுகீசு, அயர்லாந்து தேசங்களில் கிறிஸ்துவ மதத்தால் விளைந்த தென்ன? இன்னும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் செய்த நலங்களென்ன? யதார்த்தத்தை விரும்புவோம். நெஞ்சின் மேல் கையை வைத்து கேட்போம். இம்மதமில்லாவிட்டால் இந்நாடுகள் கேடடைந்திருக்குமா? கிருஸ்துவ மதமின்றி வேறு மதம் பரவியிருந்தால் இந்நாடுகளுக்கு ஏதேனும் கேடு சூழ்ந்திருக்குமா?

இன்னும் Puritans என்று சொல்லப்படும் வீர, சுத்த கிறிஸ்துவப் பகுதியாரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு கிருஸ்துவ மதம் செய்த தென்ன? அவர்கள் இன்பத்தை வெறுத்தனர் அவர்கள் வாழ்க்கையின் வாசலில் இறப்பெனும் கரிய திரையைத் தொங்கவிடுகிறார்கள். சந்தோஷ முழக்கங்கள் எழாதவாறு வாயைப் பொத்தி மூடிவிடுகிறார்கள் அவர்களுக்கு வருஷம் பூராவும் துக்கம் தான். பாலியமும் இளமையும், குழந்தைகளின் மழலையும், காலை சங்கீதமும், அவர்கள் உலகினின்றுஒழியும்படியாக உழைத்தார்கள். இத்தகைய வீர கிறிஸ்தவர்களின் மதம் ஓர் கலப்பற்ற துன்பக்களஞ்சியம். அவர்கள் தங்கள் வேதாகமத்தை [Bible] வேதவாக்காகக் கொண்டனர். இக்கொள்கை அவர்களைக்கொடியவர்களாகவும், இழிதன்மையாளர்களாகவுமே யாக்கியது. அவர்கள் வட அமெரிக்க இந்தியர்களது மதத்தைத் தழுவி இருப்பினும் இதனினும் கேடான நிலைமையிலிருக்கமாட்டார்கள்.

தங்கள் வேதத்தைப்பற்றிய கொள்கை மக்களிடத்து எத்தகைய பலனை தந்ததென்பதற்கு ஒரு உதாரணம் தருகிறேன். எலிஜபெத் என்ற ராணிக்கு முடி சூட்டிய திருநாளில் காலம் என்பதற்கு பிரதிநிதியாகத் தோன்றிய ஒரு கிழவன் சத்திய மென்ற ஒரு குழந்தை தன் பக்கம் நிற்க ஒரு வேதப்புத்தகத்தை அம்மகாராணிக்குப் பரிசாகக் கொடுத்தான். அம்மகாராணியும் உடனே அதை பணிவோடு வாங்கி தனது கண்களில் ஒற்றி அதைக் கவனமாக வாசிப்பதாக வாக்களித்தாள். அவ்வேதத்தை உரிமையாக்கும்பாகத்தில் போப் கக்ஷியைச் சேர்ந்தவர்களை யெல்லாம் தலையை வாங்கிவிடும்படியாக அம்மகாராணி வேண்டிக் கொள்ளப்பட்டாள். இந்தச் சம்பவத்திலிருந்து போப் கக்ஷிக்கு எதிராக வேதத்தை மதிக்கும் புனிதர்களுடைய உண்மையான மனப்பாங்கை அறிந்து கொள்ளலாம். அது தங்களுக்கு எதிர்கக்ஷியாருடைய மனப்போக்கைப் போலவே அவ்வளவு கேவலமானதாயும்,

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

"கடவுளும், பிரபஞ்சமும்"

சந்தேகத்தெளிவு.

நமது நிருபர்களுக்குப்பொதுவிடை.

:0:

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

சென்ற இரண்டொரு வாரங்களாக, பல ஊர்களிலிருந்து (ஈரோடு, சாக்கோட்டை, திட்டகுடி, கொமாரபாளையம், துட்டிக்குளம், கோயமுத்தூர்) பல நிருபர்கள், "குடி அரசில்" கடவுளும், பிரபஞ்சமும் என்று மகுடமிட்டு எழுதிய கட்டுரையில் எழுந்த தங்கள் சந்தேகங்களை விளக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றார்கள். ஆனால் இவர்கள் கேட்கும் சந்தேகங்களில் ஒரு விஷயம் வருந்தத்தக்கது. அதாவது, தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பலதிருக்க, அற்ப சொற்ப விஷயங்களைக் குறித்துப் பல கேள்விகள் கேட்கப் புகுந்தனர். பேயுண்டா? பிசாசுண்டா? என்று கேட்கின்றார் ஒருவர். மரம் முந்தியதா? விதை முந்தியதா? என்கின்றார் மற்றொருவர். இவர்கள் "குடி அரசை" படிப்பதாகவும் எழுதுகின்றார்கள். இந்தக்கேள்விகளுக்கு நமக்குத்தோன்றியவரை முன்பே ஒருவாராக விடையளித்துள்ளோம். அதற்கு மேல் நமக்குத் தெரியவாராது. எழும் எவ்வித கேள்விகளுக்கும் விடை பகற நாம் சக்தியுடையோமென முன்வரவில்லை. விஞ்ஞான விதியின்படி நமது பகுத்தறிவையுபயோகப்படுத்திப்பார்க்கையில் நமதுநாட்டில் கொண்டிருக்கும் பல பொய் நம்பிக்கைகளுக்கு (Superstitious Beliefs. ஆதாரம் இல்லையென்று நாம் சொல்ல வந்தோம். முக்கியமாக நமது நாட்டார் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமென்னவெனில், நமது நாட்டில் தெரியாமையாலும், அறிவு விளக்காமையாலும், காட்டுமிராண்டிகள் கொண்டுள்ள பல நம்பிக்கைகள்நமது நாட்டாரில் அனேகர் கொண்டுள்ளார். இவ்வித நம்பிக்கைகளுக்கு primitive beliefs, புராதீன நம்பிக்கை என்று வழங்குவார்கள். இவ்வித நம்பிக்கைகள், விசாரணை முதிர முதிர, பொய் நம்பிக்கை யென்று ஏற்படும். விசாரிக்காதவரை, இந்த நம்பிக்கைகள், உண்மை எனவே கொள்ளுவது சகஜம். கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம், பேய் பிசாசு, மணி மந்திரம், பூசை நைய்வேத்தியம், பிரார்த்தனை, பலி இவைகளைப் போன்ற நம்பிக்கைகள், மனிதன் குழந்தைப்பருவத்தை அடைந்து இருந்த காலையில் எழுந்த எண்ணங்களாகும். அந்தக் காலங்களில் பிரகிருதங்களில் (Nature) நடக்கும் சம்பவங்களுக்குத்தன்னைப்போன்ற கர்த்தா இருக்கலாமென்று எண்ணுவான். இதற்கு Anthropomorphism [அதாவது மனிதனைப் போன்ற கர்த்தா ஒருவனோ, பலரோ உளதாக எண்ணுவது] என்று பெயர். இந்த மனப்பான்மை நமது நாட்டில் ஒவ்வொருவருடைய மனதில் குடி கொண்டுளது. இந்த மனப்பான்மையால்தான் நோய்கள் மந்திரத்தால் போகுமெனவும், தங்கள் கோரிக்கைகள் கடவுள், தெய்வம், பேய் பிசாசுகளால், பூசை, நைவேதனம், பிரார்த்தனை, பலி முதலிய காரியங்களால் கை கூடி வருமெனவும் எண்ணிவருகின்றார்கள். இவ்வித எண்ணத்தால் சரியான காரண காரிய முறைப்படி சிகிச்சை செய்து கொள்ளாமல் வாந்திபேதியால் 6,00,000 (ஆறு லட்சம்) பேரும், சுரத்தால் 10,00,000 (பத்து லட்சம்) பேரும், பாம்பு கடியால் 6,000 (ஆராயிரம்) பேரும் வருஷா வருஷம் சாகின்றார்கள்! ஒரு காலத்தில் அம்மை குத்துவதற்கு முந்தி [Vaccination] அம்மையால் சாவும் மாந்தருக்குக் கணக்கே இல்லை. அம்மை குத்தியவுடன், எந்த அம்மாவும், உடுக்கை, சிலம்பு, வேப்பிலை, விளக்கு வைத்துப்பார்த்தால் முதலிய பயனற்ற காரியங்கள் யாவும் பரந்தோடிப்போயின. இன்றைக்கும் நமது நாட்டில், பாமர மக்கள் வாந்தி பேதி [Cholera] மகாமாரி என்று வழங்கும் கொள்ளை நோய் [Plague] விஷசுரம் [Malaria] இன்னும் பல கொடிய நோய்கள், மாரியாத்தாவால், வெள்ளை சேலைக்காரியால், உப்பாடைக்காரியால், பச்சை அம்மனால், பேயாண்டியால், அண்ணமார், கன்னிமாரால், இருளன், வீரன் காட்டேரியால் உண்டாக்கின்றனவென எண்ணி வருகின்றார்கள். இந்த எண்ணத்தை வளர்க்கவும் பாமர மக்கள் சாகவும், பூசாரிகள், என்றும், களிப்பு எடுக்கின்றவர்களென்றும், மந்திரக்காரர்களென்றும், சூன்யக்காரர்களெனவும் சகலவித Mountebanks, Charlatans, Humbugs, Frauds, மோசக்காரர்களும், தந்திரவாதிகளும், பித்தலாட்டக்காரர்களும் தோன்றி, நமது நாட்டு மக்களை வதைத்து வருகின்றனர். நமது நிருபர்களில்பெரும்பான்மையோர், இந்த பித்தலாட்டமோசங்களை அறியாமல், பாம்புகடி, மந்திரத்தால் நீங்கியதைப் பார்த்தேன், பிசாசைப்பார்த்தேன், பேயை பார்த்தீர்களா, என, பலவித உபயோகமற்ற கேள்விகளைக் கேட்கப்புகுகின்றார்கள். இவர்களை ஒன்று கேட்கின்றேன், பாம்புக்கடி, மந்திரத்தாலும்' மாலை இடுவதாலும் தீர்ந்ததென்றால், என் இந்த பாம்பு கடியால் 6000 ஏழை மக்கள்வருஷா வருஷம் சாகின்றார்கள்? வைசூரி அதாவது அம்மை, மாரியாத்தாள் (இவள் ஓர் பேய்) உண்டாவதென்றால், ஏன் ஜர்மனியில் ஒருவருக்காகிலும் அம்மை பலவருஷங்களாக வருவதில்லை? நமது நாட்டிலும், அம்மைக் குத்திக்கொண்டவர்களுக்கு ஏக தேசமாக அம்மை வருகிறது?

நமதுநாட்டில் குழந்தைபருவத்தில் உள்ள ஆண்மக்களும் பெண்மக்களும் அனந்தகோடி இருந்து வசிக்கின்றார்கள். இவர்களுடைய அறியாமை நீக்கி, இவர்கள் அகால மரணமடையாமல் காப்பாற்றமுயலாமம், 'பேயுளதா?" "பிசாசு உளதா?" வெனும் வீண் கேள்விகளை நமது நிருபர்கள் கேட்பது வருந்தத்தக்கதேயாகும்! சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளைப் போல் பாமர மக்கள் நம்பி மோசம் போகும் விஷயங்களைத்திரும்பத்திரும்ப கேட்பதில் பயனென்னை? நமது நிருபரை யொன்று கேட்கின்றேன். யூரோப்பிலும் Europe அமெரிக்காவிலும் America சுமார் 50 கோடி மனிதர் வாழ்கிறார்கள். நமது நாட்டில் 35 கோடி இருக்கின்றார்கள். இவ்விருதிறத்தாரில், மந்திரத்திலும், மாயத்திலும், தந்திரத்திலும் நம்பிக்கை இல்லாத 50 கோடி மக்களில், 1000 பேருக்கு வருஷமொன்றுக்கு 10, 12 பேர் சாவானேன்? நமது 35 கோடியில் வருஷமொன்றுக்கு 1000 பேரில் 30, 40, 50, 60, வது சாவானேன்? இது ஒன்றே போதும், மந்திர தந்திரங்கள், பேய் பிசாசு, சூன்யம், கெட்ட நாள், நல்ல நாள், தீயநாள் என்பதெல்லாம் பொய் என்பதற்கு இந்த பொய் நம்பிக்கைகளும் [False beliefs] தப்பு எண்ணங்களும் [Wrong Thoughts] என் நமது நாட்டில் தெரிந்தவர்களுக்கும் கூட இருந்து வருகின்றதென்றால், விசாரணை இன்மையாலென அறிக. சம்பவங்களின் [Phenamena] காரணகாரிய முறையை அறியாமையால், நமது நிருபர்களுக்கு நம்மை கேட்கும் கேள்விகள் பலவும் எழுகின்றன. இதன் விஷயமாக நாம் அறிந்து கொள்ளவேண்டியதென்னவெனில், சம்பவங்கள் நிகழ்வது சாதாரண காரண காரிய முறையால் [cause and effect] உண்டாகின்றன என்ற எண்ணத்தைப்பெறவேண்டும். மழை, காற்று, புயல், பனி, வெளிச்சம், இருள், பிறப்பு, இறப்பு, நோய், தள்ளாமை, வயது போன்ற பிரகிருத சம்பவங்கள் யாவும் [Natural Phenamena] எந்த காரணங்களால் உண்டாகின்றனவோ, அவைபோன்ற காரணங்களால், நமக்கு விளங்காத சம்பவங்களும் உண்டாகின்றன என்ற மனப்பான்மையை வளர்க்கவேண்டும் —காக்கை "கா" என்றதாம், அப்பாவென்று கணவனை கட்டிக்கொண்ட மாதிரி, விசாரிக்காமல், மற்ற தந்திரங்களில் நம்பிக்கை வைப்பதாகும். பாம்புகடி, மந்திரத்தால் தீருவதாக நமது பாமரமக்களுக்கு ஓர் நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கைக்குக் காரணம் விசாரிக்காத தோழர்கள் என அறிக. இதனை சற்று விளக்கிக்காட்டலாம். பாம்பு கடித்தது உண்மை. மந்திரித்தது உண்மை. கடித்தவன் சாகாமல் பிழைத்ததும் உண்மை எனவும் வைத்துக்கொள்வோம். ஆனால், கடித்த பாம்புக்கு அந்த வேளையில், சாகவைக்கப்போதுமான விஷம் அதன் வாயில் இருந்து கடித்த இடத்தில் இறங்கிற்றென்பதற்கு அத்தாட்சி என்ன? பாம்பால் கடிக்கப்பட்டவர்களில் 100-க்கு எத்தனை பேர் மந்திரத்தால் பிழைத்தவர்கள் எத்தனை? 100-க்கு 70-தா? 60-தா? 50-தா? 30-தா? பத்தா? இந்த கணக்கு ஏற்படுகின்றவரை, மந்திரத்தால் பிழைத்ததாகச் சொல்வது அபாயமே யாகும். இன்னொரு விஷயம் இது சம்பந்தமாகக் கவனிக்கத்தக்கது. மந்திரக்காரனே, அவன் பாம்பால் கடியுண்டு, இறந்தும் இருக்கின்றான். விஷம் பாம்பின் வாயில் இல்லை என்று நம்பி, கடிக்கப் பட்டவன், இறந்து மிருக்கின்றான். பல நாளாக விஷமுண்ட சந்நியாசி, ஒரு நாள் இறந்து மிருக்கின்றான். இந்த திருஷ்டாந்தங்களால், பாம்பு கடியும் விஷம் உண்ணுவதும், மந்திரத்தாலும், யோக அப்பியாசத்தாலும் நீங்கியதென்பது விசாரணை இன்மையாதெழும் மருளென விளங்குகிறது— இந்த காட்சிகளெல்லாம், Cellusion என்ற பித்தலாய் இருந்தும் இருக்கலாம்—நமது நிருபர்களை ஏமாற்ற, அறவு தீண்டினவனும், மந்திரக்காரனும் கடித்த மாதிரியாகவும், பிழைத்த மாதிரியாகவும் நடித்திருக்கக்கூடும். அல்லது, Fleight-of hand என்னும் கைசாலையால், விஷமுண்டது போய், சந்நியாசிகள் ஜாடை காட்டியும் இருக்கலாம். இந்த ஜாடைகளை தெரிந்துகொள்வது, மெஞ்ஞானிகளுக்கும் கஷ்டமென்றால், நமக்கு நேரு கஷ்டத்தைச்சொல்லமுடியுமா? Hudin—டடின் என்ற ஜாலக்காரன் செய்துவந்த ஜாதிவேடிக்கைகளை, இன்னும் சிலவற்றை அறியக் கூடவில்லை என்றால், தந்திசாலிகளின் சாமர்த்தியத்தை தெரிந்து கொள்வது லேசான காரியமாகுமா?

ஒரு நிருபர் இப்னு [illegible] மெஸ்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

கடவுள் காட்சி.

[தோழர் டி. கே. எம். சாமி]

நம் பாரதநாட்டில் கடவுள் ஒப்பற்ற அரிய செயல்களைச் செய்ததாகவும், செய்வதாகவும் நமது நாட்டுச் சாஸ்திரங்களும், புராணங்களும் வைதிகக் குடுக்கைகளும், ஆஸ்திக மடிசஞ்சிகளும் முறையிடுகின்றன. ஆற்றுக்குச் சென்றயானையின் காலை முதலை பிடித்திழுக்கயானை ஆண்டவனை நினைந்துக்கதற உடனே ஆண்டவன் அங்கு பிரசன்னமாகி தனது சக்ராயுதத்தால் முதலையைச் சம்மாரம்செய்ததாகவும் இரணியனது கொடுந்தண்டனைகளிலிருந்து பிரஹலாதனை தப்புவித்ததுடன் கற்களாலோ, கட்டையினுலோ இரும்பாலோ செய்யப்பட்ட தூணிலிருந்து அதிர்வேட்டுகளுடன் ஆண்டவன் தோன்றி இரணியனை சம்மாரம் செய்ததாகவும், மார்க்கண்டேய னென்ற ஓர் பக்தனை எமதூதர்கள் நெருங்கி அவனது உயிரைக் கொண்டுப் போக முயல அவன் அருகிலுள்ள சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதற அதிலிருந்து ஆண்டவன் தனது சூலாயுதசமேதராய்த் தோன்றி எமதூதர்களைத் துரத்தி அவனை ஆட்கொண்டதாகவும் நவாப்பின் பொருளை யெடுத்து இடிந்து கிடந்த பத்ராசலம் கோவிலைக் கட்டினதால் நவாப்பால் சிறை வைக்கப் பட்டு சிறையிலிருந்த ராமதாஸ் என்னும் பக்தனை நவாப்புக்குச் சேர வேண்டிய பொருளை ஆகாயத்திலிருந்து கொட்டி விட்டு ராமதாஸை மீட்டதாகவும் இன்னும் இது போன்ற லட்சக்கணக்கான அரிய திருவிளையாடல்களைச் செய்ததாகவும் நமது புராண இதிகாசங்களில் எழுதி வைத்து அதைப் பாமர மக்களை நம்பவைத்து அதனால் ஒரு கூட்டத்தார் காலங் கடத்தி வந்ததை நமது சுயமரியாதை இயக்கம் தோன்றி அவைகளை பகுத்தறிவால் ஆராய்ந்து அவை பாமர மக்களை மோசம் செய்து கடவுள் என்றும், தெய்வமென்றும், சாமியென்றும் அவதார மென்றும் திருவிளையாட லென்றும் அடிமைப் படுத்தி அதனால் ஒரு கூட்டத்தார் கஷ்டமின்றி இன்பமாகக் காலங் கழிக்க ஏற்படுத்தப்பட்டவை யென்றும் தெள்ளத் தெளிய உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஒவ்வொரு மக்களும் தங்கள் பகுத்தறிவால் ஆராய்ந்து ஒப்புக் கொள்ளக்கூடிய முறையில் அதன் மோசங்களையும், அதை எழுதி வைத்தோரின் தந்திரங்களையும் வெளிப்படுத்தி அதனால் மக்கள் ஏமாந்து மோசம்போகாதபடி செய்து விட்டனர்.

ஆனால் இன்னும் சில தந்திரங்களால் வயிறு வளர்த்து வந்த கூட்டத்தார் அவைகளுக்கெல்லாம் தற்கால மக்கள் தங்கள் பகுத்தறிவால் ஆராய்ந்து ஒப்புக் கொள்ளும் முறையில் சமாதானம் சொல்லி தங்களையும், தங்களை ஆட்கொள்ளும் கடவுளையும் அவரின் அவதாரச் செயல்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போயினும் பாமர மக்கள் நம்பும் முறையில் இன்னும் சில கடவுள் சக்தி நிறைந்த செயல்களைப் பிரசாரம் செய்து அதன் மூலம் தங்களது தந்திரமான வயிற்றுப் பிழைப்பை நிலை நிறுத்திக் கொள்ள முயல்கின்றனர்.

தென்னிந்தியாவில் பல இடங்களில் அம்மன் சந்நதிக்கு முன்னிலையில் திருவிழாக்காலங்களில் பெரிய தீக்குழி வெட்டி அதில் தீ வளர்த்து நெருப்பையுண்டாக்கி அதில் (அவ்வாறு தீக்குழியிலிறங்குவதாகவும் தங்களது குறைகளை தீர்க்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்ட) ஜனங்கள் இறங்கி எவ்வித தகிப்புமின்றி வெளியேறுவதாகவும் குண்டுமணியத்தனை நெருப்பின் தகிப்பை மனிதனது தேகம் தாங்க முடியாமலிருக்க அவ்வாறு பெருந்தீயில்குதித்து தப்பி வருவது கடவுள்அருளின்றி அம்மன் சக்தியின்றி எவ்வாறு முடியுமென்றும் அவ்வாறேசெடல் குத்திக் கொள்வதாக வேண்டிக் கொண்டோர்கள் 40 50 அடி உயரம் ஓர் மரத்தை நட்டு அதிலிருந்து ஓர் சங்கிலியைத் தொங்க விட்டு அதன் நுனியில் ஓர் கொக்கியை மாட்டி அக்கொக்கியில் மனிதனது தேகத்தைக் கோர்த்து அந்த சங்கிலியை மேலே இழுத்துக் கொள்ள கோக்கப்பட்ட மனிதன் அந்தரத்தில் தொங்குவதாகவும் கடவுளருளின்றி எவ்வாறு அவன் உயிருடன் தொங்க முடியுமென்றும் இன்னும் இது போன்ற காரியங்களை நடத்துவதனுலும் கடவுள் தன் சக்தி உலகில் பரிணமிப்பதாகவும் கூறுகின்றனர். பாமர மக்களில் பலர் இதை நம்பி இதிலிருந்து புராண இதிகாசங்களை நம்பவும், வைதீகக் கூட்டத்தாரின் கூற்றை நம்பவும் அவர்கள் சூழ்ச்சியில் விழவும் ஏதுவாகிறது.

இது குறித்து கோலாலம்பூரில் உள்ள ஒரு நண்பர் தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி.. எல். அவர்களை எழுதிக் கேட்டதாகவும் அதற்குத் தோழர் 29—5—32 தேதி குடி அரசில் விடை யிறுத்திருக்கிறார். பாமர மக்களிடையே இத்தியாதி சந்தேகங்களுண்டாகும் போது அவற்றைத் தக்க ஆராய்ச்சியுடனும், ஒப்புக் கொள்ளக் கூடிய முறையிலும் தீர்த்து வைக்க வேண்டுவது ஒவ்வொரு சுயமரியாதைத் தொண்டரின் கடமை என்பதோடு மேல் கண்ட விஷயங்களுக்கு நாமும்நமது ஆராய்ச்சிக் கெட்டிய வரையில் சமாதானம் கூற விரும்புகிறோம். முதலாவதாக செடில் குத்திக் கொள்ளல் என்பது தென்னிந்தியாவில் அநேக இடங்களில் நடை பெறுவதாகத் தெரிகிறது. இந்த மகத்துவத்தைக் காண பாமர மக்கள் திரள் திரளாகச் செல்வதையும் சென்று திரும்பும் போது ஆண்டவனின் மகத்துவத்தை வாயாரப் புகழ்ந்துகொண்டு செல்வதையும் காண்கிறோம். இதன் ரகசியத்தை ஆராயின் உண்மை புலனாகும். மனிதனுடைய தோல் தடிப்பமும் உறுதியுமானது மனிதன் தோலுக்கு அம்மனிதனைப் போல இரண்டத்தனை இடையைத் தாங்கும் வல்லமை உண்டு. ஆகையால் செடில் கொக்கியிலிருந்து மனிதன் அறுந்து விழாமலிருப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஆனால் அம்மனிதனுக்கு அதனால் உபத்திரவம் உண்டாகிறதா? என்பதே ஆராய்ச்சிக்குறியது. ஆம் நிச்சயமாய் உண்டாகிறது. ஆயினும் செடில் குத்திக் கொள்ளு முன்பு அம்மனிதன் தன்மனதில் ஆண்டவனுக்கு யாவராலும் செய்யமுடியாத ஓர் உதவியை பெருந்தியாகத்தை தான் செய்யப் போவதாகவும் அதனால் இனி தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் தனது சந்ததியாருக்கும் தனது சுற்றத்தாருக்கும் என்னும் கடவுள் அருள் கிருபை சுரந்து அதனால் எவ்வித குறைவுமின்றி சௌக்கிய மாக வாழலாமென்னும் ஒரு பெரும் நம்பிக்கையினாலும் செடில் குத்தி தொங்கி இரங்கிய பின்னர் அவனுக்கேற்படும் உபசாரங்களாலு, ம்கடவுள் அருள் பூரணமாய் நிறைந்தவனாக பாமரமக்கள் நினைக்கவேண்டுமென்ற மனோ உறுதியாலும் செடில்குத்திக் கொள்ள முற்படுகிறான். அதன்பிறகு அவனுக்குத்தான் ஏதோ அபாரமான ஓர் பெரிய காரியத்தைச்சாதித்து விட்டதாக உணர்வேற்பட்டு மயக்கமடைகிறான். பின் எந்த உபத்திரமும் உணர்ச்சியும், அவனுக்குத் தோன்றுவதில்லை. ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்குக்குளோர்பாம்என்ற மயக்க மருந்தைக்கொடுத்து அவனை மயங்கிவிழச்செய்து முக்கியமான இடங்களிலெல்லாம் ஆபரேஷன் செய்கின்றனர். அதனாலுண்டாகும் உபத்திரவமோ வேறு எந்த உணர்வோ அவனுக்கு ஒரு சிறிதும் தோன்றுவதில்லை அது போலவே செடில் குத்திக்கொள்வோன்மயக்கத்திலேயே தொங்குகிறான் இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை ஆனால் அத்தகைய் பயங்கரமான ஒரு காரியத்தைச் செய்ய ஒருவன் மனம் ஒருப்படுமா? என ஒருசிலர் வினவுகின்றனர்.

திடீரென்று மூட்டப்பட்ட ஆத்திரத்தினாலோ குடிவெறியினாலோ ஒரு கொலை செய்துவிட்ட ஒருவன் பின் தன் சுய உணர்வையடைந்து தான் செய்த காரியத்திற்காக தனக்குக்கிடைக்கப்போகும் தண்டனையை உணர்ந்து அக்கொலைக்குற்றத்திற்குப் போதிய சமாதானம் கூறுவதற்காகத்தானே தனது தேகத்தில் படுகாயம் உண்டாக்கிக்கொள்வதையும் தற்கொலை செய்து கொள்வதையும் யாவரும் உணர்ந்த விஷயமே. ஆதலால் இத்தகைய காரியங்களுக்கு பெருத்தபலனடையப்போகிறோமென்ற மனோ உறுதியே காரணமின்றி கடவுள் சக்தியும், ஆண்டவன் அருளும் காரணமல்ல.

இரண்டாவதாக தீ குதித்தல் என்பது பூ மிதித்தல் என்ற பெயருடன் தென்னிந்தியாவில் அநேக மாரியம்மன் கோவில்களில் திருவிழாக்காலங்களில் இன்றும் நடத்தப்படுகிறதென்பது உண்மையே. ஆனால்இதில் தெய்வ சக்தியாவது ஆண்டவனருளாவது உண்டா? யென்பதே ஆராய்ச்சிக்குறியதாகும். ஒவ்வொரு வருஷமும் கோவில்களில் உற்சவம் நடத்தப்படும் காலங்களில் பூ மிதிப்பதற்காகவே குறிப்பிட்டநாளுக்கு ஒரு வாரமோ, இரண்டு வாரங்களுக்கோ முன் இருந்தே பலவித விரதங்களாலும் அநுஷ்டானங்களாலும் தங்களை தயாராக்கிக்கொள்கின்றனர். இதுவெல்லாம் உலகை மயக்கும் தந்திரம் தீ குதித்ததிலுள்ள முக்கிய ரகசியம் என்னவெனில் கட்டியுமுட்டியுமாக இருந்த நெருப்பை நன்றாகத் தட்டி விட்டு சமமாகச்செய்துவிடுகின்றனர். அதன்பிறகு மூச்சைப்பிடித்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடி அடுத்ததரையை அடைந்துவிடுகின்றனர் இதில் ஆச்சரியப்படத்தக்கதோ ஆண்டவன் அருள் நிறைந்ததோ தெய்வ சக்தியோ ஒன்றும் காணோம் உதாரணமாக நமது கையில் சிறு நெருப்புக்கட்டியை எடுத்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் போடுகிறோம் நெருப்புக்கட்டியை இரண்டு கைகளிலும் மாற்றிக்கொண்டே சிறிது நேரமிருக்கலாம் அதனால் அத் தீ நம்மைத்தகிப்பதில்லை. அத் தீ நமது தேகத்தில் பலமாக ஒட்டினலொழிய நமக்கு எந்தவித உபத்திரவமும் உண்டாக்குவதில்லை தீ மிதிப்போர் ஓட்டமாக ஓடியே தீயைக் கடக்கின்றனர். இதில் முதலாவதாக வலதுகாலைத்தீயில் வைப்பதாக வைத்துக்கொள்ளுவோம் வலது காலை தீயில் வைத்ததும் அத்தீ காலில் ஒட்டி தகிப்பதற்குள் இடதுகாலை ஊன்றிக்கொண்டு வலது காலை எடுத்துக்கொள்கின்றனர். வலதுகாலில் ஒட்டி தகிப்பதற்குள் இடதுகாலை ஊன்றிக்கொண்டு வலது காலை எடுத்துக்கொள்கின்றனர். இவ்விதமாகவே ஓடி தீயைக்கடந்து விடுகின்றனர் இத்தகைய வழிகளால் தீ தகிப்பதற்கு வழியில்லை தீ மிதித்தலின் ரகசியம் இதுதான். தீ மிதிக்கும் நண்பர்களையும், அவர்கள் செயல் கடவுள் சக்தியினால் நடத்தப்படுகிறதென்று அறைகூவும் ஆத்திக நணபர்களையும் நாம் ஒன்றுகேட்க விரும்புகின்றோம்.

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

இராமராஜ்யத்தில்

ஐந்து நிமிஷம்!

(என் கனவு.)

(தோழர் அ. இரத்தினசபாபதி)

(கருத்தூன்றிக்கவனிக்க)

"மாலைசுமார் நாலுமணி இருக்கும், இருந்தாற்போலிருந்து 'மகாத்மா காந்திக்கு ஜே! மாளவியாஜீக்கு ஜே! (மாண்டுமடிந்துபோன) பண்டிதமோதிலால் நேருவுக்கு ஜே! ஜவகர்லால் நேருவுக்கு ஜே! (இறந்துபோன) லோகமான்யபாலகங்காதர திலகருக்கு ஜே! கோகலேமகரிஷிக்கு ஜே! சரோஜினிதேவிக்கு ஜே! கமலாதேவிக்கு ஜே! கமலாநேருவுக்கு ஜே! டாக்டர் மூஞ்சேய்க்கு ஜே! (மிக்க பலமாய்) ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரிக்கு ஜே! சீனிவாசய்யங்காருக்கு ஜே! சத்தியமூர்த்திக்கு ஜே! கிருஷ்ணமாச்சர்ரியாருக்கு ஜே! என்று இந்த டிபார்ட்மெண்டில்வரும் ஆண், பெண், தேசபக்த சிகாமணி (?) கள் ஒவ்வொருவரின் பெயரின் கடைசியிலும் ஒவ்வொரு 'ஜே' சேர்த்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெருங்கோஷமிட்டுக்கொண்டு வீதி வழியே சென்றதாலுண்டாய சப்தம் நானிருந்த மெத்தைவீட்டின் ஜன்னல்கள் வழியாக உள்நுழைந்து என் செவிகளில் பேரிடியின் ஒலிபோல் கேட்டது! நான் நின்ற இடத்திலேயே ஓர் துள்ளுத்துள்ளி எழுந்து தடபுடலாய் தெருப்பக்கமிருந்த ஜன்னலண்டை ஓடினேன்.

ஆ! அப்போது என்கண்கள்கண்ட காட்சியை எவ்வாறு விவரிப்பேன் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் ஒரே கும்பலாக அவ்வீதியில் அமைதியுடன் சென்றுகொண்டிருந்த அக்காட்சி என்மனதை வசீகரித்துவிட்டதென்ற உண்மையை நான் உங்களிடம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்! அக்கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரின் தேகத்திலும் தூயகதராடை இலங்கிற்று. எல்லோருடைய மண்டைகளிலும் ஒரேமாதிரியாக அதிகமானமயிரிருந்ததை நான் பார்க்கவில்லை. முதல் கூட்டமாக முன்னேசென்று கொண்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களின் தலை மொட்டையடிக்கப்பட்டிருந்தது! அந்த முண்டனப்பேர்வழிகள் பற்பலவகையான நாட்டுவாத்தியங்களை வாசித்த வண்ணம் ஆடிப்பாடிக்கொண்டு சென்றனர். அவர்கள் எல்லோருடைய இடுப்பிலும் ஒருமுழத்துணி ஒன்றைத்தவிர வேறெவ்வித ஆடையும் அணிந்திருந்ததை நான் பார்க்கவில்லை. அவர்களில் சிலர் கலப்பைகளையும் இன்னுஞ்சிலர் மண்வெட்டி கடப்பாரைகளையும் தோள்கள் தாங்கியிருந்தனர். இவர்கள் சூத்திரர்கள் என்றும் தங்கள் குலத்தொழில் ஆயுதங்களைப்போற்றிச் செல்கின்றனரெனவும் பின்னால் அறியலானேன்!

அதற்குப்பின்னாகவுள்ள வரிசையில்சென்று கொண்டிருந்த நபர்களின் தலைமயிர் முக்கால்பாகம் வளர்த்து சுற்றுக்குடுமியும்வைத்துப்பின்புறம் கொண்டை தொங்கி ஊசலாடிக்கொண்டிருந்தது. மார்பில் 'பூநூல்' இலங்கிற்று! இவர்கள் ஒய்யாரமாக--ஆனால் தெய்வ சந்நிதானத்தில் நிற்பவர்கள்போல் அடக்க ஒடுக்கமாய் கையில் தராசு, படிக்கற்கள், மரக்கால், நாழி, உழக்கு, ஆழாக்கு டிபார்ட்மெண்டுகளான வாணிப அளவைகளைத்தாங்கிச் சென்றனர். இவர்கள் வைசியர்கள்!

அதன்பின்னாலுள்ள மூன்றாவது வரிசையில் நின்றிருந்தோர் பெண்டிர்போன்று பூஞ்சிகையும் வளர்த்து மார்பில் 'பூநூ' லிலங்க கைகளில் யுத்ததளவாடங்களை ஏந்திய வண்ணம் சென்றுகொண்டிருந்தனர் (உடனே நண்பர்கள் துப்பாக்கிகளையும் மெஷின் பீரங்கிகளையும் எண்ணிவிட வேண்டாம்!) பண்டைக்காலத்து வில், அம்பு, கதை, தோமரம், கத்தி, கேடயம், முதலியவற்றைத் தாங்கிச் சென்ற அவ்வீரர்களின் முதுகில் அம்புகள் வைக்கும்படியான 'அம்பறாதூணி' சேர்த்துவைத்து கட்டப்பட்டிருந்தது! சிங்க நோக்குடன் நாற்புறமும் கம்பீரமாகப்பார்த்துச்சென்ற இவர்கள் க்ஷத்திரியர்கள்!

அதன் பின்னால் நான்காவதாகவுள்ள வரிசையில் பருத்துக்கொழுத்த உடம்புடனும், சற்றும் வாட்டமற்று 'தன் உடலைவிட்டு நெடுந்தூரம்முன்னால் பிரயாணம் வந்து மண்தாழியை குப்புறக்கவிழ்த்ததுபோன்று மற்ற அவயவங்களுடன் சேராது தனியாயிருந்த பெருந்தொந்திகளுடனும் நெற்குதிர்கள் உயிர்பெற்று நடந்துவருவதுபோல் ஆயிரக்கணக்கான உருவங்கள் ஒய்யாரமாக—ஆடம்பரமாக—சட்ட வட்டமாகக் கையையும், காலையும் ஆட்டி ஆட்டி நடந்து வந்தன. இவர்களுடைய உடம்பெங்கும், அத்தர், புனுகு ஜவ்வாது முதலியகலந்து நறுமணங்கமழ் சந்தனம் அரை அங்குலக்கனத்திற்கு அப்பப்பட்டிருந்தது. கழுத்தில் துளபமணிமாலையும், உருத்திராட்ச கெண்டிகைகளும், பிச்சிப்பூ ஆரங்களும் ஒய்யாரமாய் இலங்கின. நெற்றியில் துவாதசநாமம், விபூதிப்பட்டை முதலியன மகாதீட்சண்யமாய்த்துலங்கின! தலைமயிர் ஒன்றரை அங்குலம் முதல் ஒன்றரை அடி நீளம்வரையுள்ளவையான உச்சிக்குடுமிகளாக அலங்கரிக்கப்பட்டிருந்தது! எலிவால்போன்ற அதன் நுனியில் பூச்செண்டுகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. இடையில் வெண்பட்டாடை பஞ்சகச்சமாகக்கட்டப்பட்டு அதன்மேல் மிகவும் விலையுயர்ந்தபட்டு அங்கவஸ்திரங்கள் ஜரிகைக்கரைகள் வெளியில் தெரியும்வண்ணம் மடித்து அழகாகக்கட்டப்பட்டிருந்தது. பாதங்களில் சந்தனமரத்தால் செய்த 'பாதரட்சை, கள் துலங்கின. 'ஜில்?லென்ற மந்தமாருதம் வீசிக்கொண்டிருக்கும் அந்த மாலைவேளையிலுங்கூட இந்த பக்தர்கள் கையில் விசிறிபிடித்த வண்ணம் உல்லாசமாக நகர்ந்து சென்றனர். இந்த கோஷ்டியினரில் ஒருமெலிந்த மனிதரையாவது நான் காணவில்லையென்று கூறினால் நீங்கள் நம்புவீர்களோ என்னவோ! இவர்கள்தான் 'பிரமகுலத்தவர்கள் விப்பிரர்கள், பூசுரர், மமதேவதைகள் ஆனபிராமணோத்தமர்கள்! இவர்கள் ஒவ்வொருவரது கட்கத்திலும் தெர்ப்பைப்புல்லும், ஓலைச்சுவடிகளும் ஏராளமாகக்காணப்பட்டன.

இத்திருக்கோஷ்டியினரின் மத்தியில் சுமார் 18-வயதுடைய அழகிய பெண்மணியொருவள் ஆடம்பரமாக அணிபணிகள் பூண்டு காலில் சதங்கைகள் 'கலீர்கலீ' ரென ஒலிக்க கால்களையும் கைகளையும் அஷ்டகோணலாக வளைத்தும் கண்களை மேலுங்கீழும் அங்குமிங்குமாக வெட்டியும் 'நர்த்தனம்' புரிந்துகொண்டிருந்தாள்.

இவர்களின் பின்னால் மிகவும் விலையுயர்ந்த முத்துக்களும் இரத்தினங்களுமிழைக்கப்பெற்று நறுமணங்கமழும் மலர்மாலைகளால் சூழப்பட்டிருந்ததேஜோமயமான காந்தியுடைய ஓர் தந்தப்பல்லக்கில் ஓர் உருவம் வீற்றிருந்தது. பல்லக்கில் வெல்வட்மெத்தை, திண்டு தலையணை முதலியவை குறைவற இருந்தன. அவ்வுருவம் இடையில் பீதாம்பரம் புனைந்து மார்பில் வெண்ணிறப் பூநூலிலங்க தலையை நவரத்னகிரீடம் அலங்கரிக்க புன்னகை பூத்தவதனத்துடன் மிகவும் அடக்க ஒடுக்கமாக அமர்ந்து தக்ளியில் நூல்நூற்றுக்கொண்டிருந்தது!

நான் மிகுந்த சிரமத்துடன், என் கழுத்தை வளைத்துக் கொண்டு ஜன்னல் வழியாய் உற்று நோக்கிய போது அந்த உருவம் யாரென்பதைக் கண்டு கொண்டேன்! அது யாரென்றெண்ணுகிறீர்கள்? அது யாரென நான் அறிந்த அதே வினாடியில், 'மகாராஜ. ராஜபூஜித, ராஜபரமேஸ்வர, ராஜமார்தாண்ட, ராஜகெம்பீர, கோலாகல, விப்பிரர்பூஜித விஷ்ணு அம்ஸ ராஜாதி ராஜ, மகாராஜா ஸ்ரீலஸ்ரீ கரம்சந்திர மோகனதாஸ் காந்தி மஹாராஜ் ஜீக்கு ஜே! ஜே!! ஜே!!! என்ற கோஷம் வானமளாவ எழுந்து என் காதுகளைச் செவிடாக்கிவிடும் போலிருந்தது.— இப்பொழுது உங்கள் சந்தேகம் தீர்ந்து விட்டதல்லவா? ஆம்! நீங்கள் நினைக்கிறபடி 'தோழர் காந்தி' தான் அத்துணை ஆடம்பரத்துடன் பவனி வருபவர்!

அவருக்குப் பின்னால், முன் பக்கத்தைப் போன்று, பூசுரர் கூட்டம் கை கோர்த்து விசிறிய வண்ணம் 'ஏனோ, நே, ஹே, ஹே, நோ,— னோ, நந நந; நா, ந, நாநோ' என்று அன்னிய ராகத்தில் வேத பாராயணம் பண்ணிக் கொண்டு வந்தது. பல்லக்கைச் சுற்றி ஸ்ரீமான்களான, மாளவியா, ஜவஹர்லால், மூஞ்சே, இராஜ கோபாலாச்சாரி, எம். கே. ஆச்சாரி, சத்தியமூர்த்தி, முதலிய பிரமுகர்கள், இராஜாதிராஜ பரமேஸ்வர விஷ்ணு அம்ஸ விப்பிர பூஜித காந்திக்கு வெண்சாமரங்கள் வீசிக் கொண்டு வந்தனர். இந்தப் படைக்குப் பின்னால் மற்றொரு திருக்கோஷ்டி பஜனைபாடிக்கொண்டு வந்தது. 'வர்ணாச்சிரமமே வைகுண்ட மார்க்கம், விஷ்ணுவே வைஸ்யகுல காந்தி-பக்தி பண்ணக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே—கதராடை கட்டினால் கண்ணிய முண்டாமே, காந்திக்கு ஜே வாக்கியம் காதிற்கினிமை தரும் பாக்கியம்! என்பன போன்ற பாடல்களை, பாவரூப, தாள பவ்வியத்தோடு அந்தப் பக்தகோஷ்டி, வீணை, புல்லாங்குழல், கஞ்ரா முதலிய 'சுதேச' வாத்தியங்களுடன் சேர்த்து திவ்வியமாகப் பாடிக் கொண்டு வந்தது! இக் கூட்டத்தில் பார்ப்பனர் ஒருவரைக் கூட நான் பார்க்க வில்லை! சற் சூத்திரர் (நல்ல தேவடியாள் மகன்) என்ற சிறப்புப் பெயர் பெற்ற சைவர்களும் அவர்கள் டிபார்ட் மெண்டும், அதற்குப் பின்னால் 'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலையுண்ட பாலனை யழைத்ததும்' என்ற பாட்டையும் "மற்றுப் பற்றென கின்றிநின் திருபாதமே மனம் பாவித்தேன்" என்பது போன்ற தேவாரங்களையும் பண்ணிசைத்துப்பாடி ஆடி மகிழ்ந்து, மெய்சிலிர்த்து, நெஞ்சு நெக்குருகி ஆனந்தக் கண்ணீர் வடித்து, அங்குலம் அங்குலமாக ஊர்ந்து ஊர்வலத்துடன் சென்று கொண்டிருந்தனர்.

இவ்வளவும் ஊர்வலத்தின் சிறப்புகள். இக்காட்சிகளைக் கண்டு நான் திகைப்பிரமை கொண்டு சிற்கையில் 'மாண்டு மடிந்தனனே வெள்ளைக்காரன்' என்ற பல்லவியுடன் கூடிய பாட்டொன்று என் காதில் விழுந்தது. உடனே என்னைத் தூக்கி வாரிப் போட்டது; தடபுடலாய் கீழிறங்கித் தெருவுக்கு ஓடி வந்தேன். சமாச்சாரம் என்ன வென்று விசாரித்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

பூரண சுயேச்சைபெற இது தருணமா?

(செய்கோன் அறிவானந்தன்)

இஞ்ஞான்று உலக சரித்திரங்களை உண்மையோடு நோக்குவமேல் நாம் பூரண சுயேச்சை அதாவது இந்தியாவை நம் சுய ஆளுகையில் ஒப்பிவைத்தல் என்பது ஒரு பொறுப்புள்ள அறிவுத்தனமான காரியமாகுமாஎன்பது நன்கு விளங்கும். நமது காங்கிரசும், அதன் கர்த்தாக்களுமான தோழர் காந்தியாருள்ளிட்டஎல்லாத்தலைவர்களும் நமக்கு. கலப்பற்ற பூரண சுயேச்சைதான் வேண்டுமென்பது, உண்மையில் இது ஒரு தேசிய மக்கள் சுயராஜ்யமா? அல்லது தலைவர்கள் பித்தலாட்டமா? என்பது ஒவ்வொரு இந்தியனும் சிந்திக்கவேண்டிய முக்கிய விஷயமாகும்.

பள்ளியில் பயிலும் மாணவன் தன் தந்தையினிடத்தில் தனக்குப் பட்டத்தைச் சூட்டும்படி கேட்பனேல் ஆண்டு அக்குழந்தையின் தந்தையான அரசன் அப்பா குழந்தாய் அவசரப்படாதே, நீயோ பக்குவடையாத பாலகன். உனக்கு உலக வர்த்தமானங்களும், அரசு முறையும் இன்னதெனத்தெரியாது. உன்பால் நாட்டை ஒப்பிவைத்தால் பக்கத்திலுள்ள வல்லரசுகள் சும்மா இரார்கள். சமயம் பார்த்து நாட்டை அபகரித்துக்கொள்வார்கள். ஆனதால் நீ நன்கு கல்விபயின்று போர்வகைகளைத்தெரிந்துகொள். உலக சரித்திர முற்போக்கு வகைகளைச் செவ்வனே பழகிக்கொள். பின்னைக்குப் பட்டத்தைச் சூட்டுகின்றேன் என்று தான் ஒரு அறிவாளியான, பொறுப்பு வாய்ந்த தந்தையான அரசன் பதில் சொல்வான். அது தான்மனித செயலும் ஆகும். அவ்வாறின்றி நமது பிள்ளைதான் கேட்டுவிட்டதே என்று தன் பக்குவமடையாப் பாலகனுக்குப் பட்டத்தைச் சூட்டி, அவனது ஆளுகையில் நாட்டை ஒப்பிவித்து விடுவானேல். அவனைப் போன்ற ஒரு வடி கட்டின முட்டாள் உலகத்திலில்லை யென்று அயல் நாட்டரசர்கள் எள்ளிநகையாடுவதுடன், அவ்வரசைப்பிடுங்கிக்கொள்ளவும், கண்ணுங்கருத்துமாகத்தானிருப்பார்கள். இஃது இக்கால உலக தோரணை என்பது யாவருக்குந் தெரியாத விஷயமல்ல.

இவ்வாறு காலதேச வர்த்தமானங்கள் நடந்து வருகையில், நமது காங்கிரசும், அதன் கர்த்தாக்களும் கேட்கும் பூரண சுயேச்சை நமக்கு அளிக்கப்படுமேல் நாம் அப்பதவியை வகிக்கும் ஸ்தானத்திலிருக்கின்றோமாவென்று கவனிக்கவேண்டுவது முக்கிய விஷயம். அவ்வாறின்றி ஆத்திரபுத்தியில் எங்களுக்குப் பூரண சுயேச்சை தான் வேண்டுமென்றால் இதைப்போன்ற கடைந்தெடுத்த பைத்தியக்காரத்தனம் வேறொன்றில்லையென்றே கூறலாம்.

முதலாவது பூரண சுயேச்சை யென்ற இடத்துக்கு முதற்படிக்குக் கூட நாம் வரவில்லை என்று துணிந்து கூறலாம். இவ்வாறு யான் கூறுவதால் என்னையும் ஆத்திர புத்தியில் இந்தியாவின் துரோகி என்று கூட ஒருசில தன்னலக்காரத்தலைவர்களும், ஏனையோரும் சொல்வார்கள். அதைப்பற்றி எனக்கு கிஞ்சிற்றும் கவலையில்லை. உண்மையைச் சொல்ல எக்காலத்தும், எவ்விடத்தும், தயங்காதிருப்பதே உலக மனித சேவை. ஒரு தேசத்தை யாள்வதற்கு இக்காலத்தில் முக்கியமாகவேண்டுவது ஒற்றுமை, கூட்டுறவு, இராணுவப் பயிற்சி இவைகளே முதன்மையானது. இவைகளல்லாத எந்த அரசும் இக்கால வுலகில் தலைகாட்ட முடியாதென்று முடிவான உண்மை, மேற்கூறிய மூன்று விஷயங்களிலும் முடிவானவிடத்தில் சைனா இருக்கவில்லை யென்றுதானே ஜப்பான் அக்கிரமமாக அதன்மீது போர் தொடுத்து சின்ன பின்னப்படுத்தின. அவ்வாறில்லாது, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா இத்தேசங்களோடுபோர் தொடுக்க ஜப்பான் முன் வந்தனவா? காரணம் அத்தேசங்களில் போதிய இராணுவ பலமும், ஒற்றுமையும் நிரம்பிக்கிடக்கின்றன. நாம் இத்யாதி பொறுப்புள்ள விஷயங்களில் சைனாவைக்காட்டிலும் கீழான நிலைமையில் தானே இருக்கின்றோம்.

நமது நாட்டில் எண்ணற்ற மகாத்மாக்களும், தாகூர்களும், போஸ்களும், இராமன்களும் இருக்கலாம். இவர்களைப்போன்ற அநேக கவிஞர்களும், ஆராய்ச்சிக்காரர்களும், ஞானிகளும், இருந்தாலும், இவர்களின் துணை கொண்டு நாட்டை ஆளமுடியுமா? நாட்டையாள்வதற்கு ஒற்றுமையும் இராணுவமென்றோ முக்கிய துணை. இவ்விஷயத்தில், நாம் எந் நிலையிலிருக்கின்றோமென்று நன்கு சிந்தியுங்கள்.

ஒற்றுமை யென்பது நமதுநாட்டில் மருந்துக்குக்கூட கிடையாது. இராணுவப்பயிற்சியோ அதனிலும் பூச்சியம். இம்முறையில் நம்வசத்தில் நமது காங்கிரஸ் கேட்கும் பூரண சுயேக்சையை ஒப்பிவைத்தால் நமது கதி என்னவாகுமென்று நினைக்கின்றீர்கள். ஆத்திரப்பட்டு, எங்களுக்குப் பூரண சுயேச்சைதான் வேண்டுமென்று கேட்கலாம். கேட்டென் செய்வது. செயலிற்காட்ட நம்மிடையே போதிய ஒற்றுமையும், சகிப்புத் தன்மையும் ஆளுந்தன்மையும் இருக்கின்றனவா?

நமது இந்திய நாட்டில் ஒற்றுமையை நினைக்குங்கால் நெஞ்சங் குமுறுகின்றது. பல மதம், பற்பல ஜாதிகள், பல்வேறு கோள்கைகளாகவன்றோ நமது இந்தியர் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எதை நோக்கினும் முன்னுக்குப்பின் முரணாகவிருக்கும் நாட்டில் ஒற்றுமையைஎவ்வாறு காணக்கூடும் ஒற்றுமையாலல்லவோ ஒவ்வொரு நாட்டு மக்களும் தனித்தனி அரசு செலுத்தி ஏனைய நாட்டையும் ஆண்டுவருகின்றார்கள். இவ்வாறு தனி அரசு செலுத்திவரும் எந்நாட்டிலாவது நம்மிந்தியாவைப் போன்று பல மதங்கள், ஜாதிகள், கொள்கைகள் காணக்கிடக்கின்றனவா? நன்கு சிந்தியுங்கள்.

இராணுவத்தை எடுத்துக்கொள்வோம். நமது நாடு பரந்த நாடு, திரண்ட ஜனத்தொகை கொண்டது. இத்தகைய ஒரு பெரிய நாட்டிற்குப் போதிய இராணுவப்பயிற்சி நமக்கு இருக்கின்றனவா? இல்லை. இனிமேல் பெறுதற்கு ஏற்றசாதனங்களாவது நமது வாழ்க்கை முறையில் ஏதுவிருக்கின்றனவா? இல்லையே துப்பாக்கி என்றால் தூரநிற்கும் ஆண்மையற்றவர்களும், ஆகாயவிமானத்தைக்கண்டு கன்னத்தில் போட்டுக்கொள்ளும் ஐயாமார்களுமன்றோ நமது நாட்டில் ஏராளமாகவிருக்கின்றார்கள். இராணுவப் பழக்கம் பழக்குவதற்கு மேல்நாட்டிலெல்லாம் பட்டாளவிடுதியொன்றமைத்து அவ்விடுதியில் அமைச்சன் மகன் முதல், பிச்சைக்காரன் மகன் வரையிலும் பேதாபேதமின்றி பழக்கப்பட்டு வருகின்றார்கள். நமது நாட்டிலோ பாப்பானுக்குத் தனிவிடுதியும் சைவனுக்குத்தனி விடுயும் பறையனுக்குத் தனி விடுதியும் இவ்வாறு எண்ணற்ற ஜாதிகளுக்குக் கணக்கற்ற விடுதியன்றோ அமைக்க வேண்டும். காலையியெழுந்து பயிற்சி செய்யவேண்டுவது மேல்நாட்டார் கொள்கை. நமது நாட்டிலோ காலையிலெழுந்து கடவுளை வணங்க வேண்டுவது கட்டாயக்கடமை. இல்லாவிட்டால் மதாசாரங்கெட்டுவிடும், கடவுள் கோபித்துக் கொள்ளுவார், மோக்ஷவீடு கிடைக்காது. இம்மாதிரியான நன்னம்பிக்கை, ஆண்மை, வீரம், ரோசம் இல்லாத மக்களாலன்றோ நமது இந்தியா நிறையப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு உலக, மனிதக் கூட்டங்களின், பின்னுக்குப் பின்னே இருக்கக்கூடிய நாம், பூரண சுயேச்சை கேட்டால், இதைச்சிறுபிள்ளைகள் மண் வீடு கட்டி என் வீடு, உன்வீடு என்று சொல்லுவது போல வன்றோ, இருக்கின்றன. இம்முறையில் நாம் கேழ்ப்பதுபோல், இங்கிலீஷ்காரர்களும், நமக்குப் பூரண சுயேச்சை கொடுத்துவிட்டால், அவர்களை மற்றைய அரசாங்கங்கள் எள்ளி நகையாட மாட்டார்களா? அதோடல்லாமல், அவர்கள் நம்மையும் சும்மா விடுவார்களா! நன்கு ஆலோசித்துப் பாருங்கள் என்று தினம் நாமும் மற்றைய தேசங்களைப்போல், ஒற்றுமையோடு ஜாதிப்பிரிவினை, சமூகப்பிரிவினை, மூடப்பழக்க வழக்கங்களை யொழித்து, போதியபலம் பெற்றுவிட்டோமோ அன்றே நாம் கேழ்க்காமலே நமது கையில் இந்தியாவை ஒப்பிவைத்துவிட மாட்டார்களா! அவ்வாறில்லாமல் ஒருவனை ஒருவன்மிதித்துக்கொண்டு, எங்களுக்குப் பூரண சுயேச்சைதான் வேண்டுமென்று கேட்டால், இதை ஒரு பயித்தியக்காரத்தனமெனறு சொல்லாமல் வேறென் சொல்லுவது.

ஆனதால்தான் நமது சுயமரியாதை இயக்கம், மதத்தை யொழியுங்கள், ஜாதியைப் போக்குங்கள், அர்த்தமற்ற மூடப்பழக்க வழக்கங்களைப் போக்குங்கள் என்று, நமக்கு போதிக்கின்றது. இவைகளை யெல்லாம் கொஞ்சமுங் கவனியாமல், போலித் தலைவர்கள் பேச்சைக்கேட்டு, சுயராஜ்டம், சுயராஜ்யம், பூரண சுயேச்சை யென்று கத்தி வீணேஉதையும், அடியும் பட்டு, ஜெயிலுக்குப் போவதில் யாதுபயன். நமக்குள் அநேக ஊழல்களை வைத்துக்கொண்டு, கல்லுளிமங்கன் வேஷம் போட்டால், மற்றைய உலக மக்கள் நம்மைக்கண்டு எளனஞ் செய்யமாட்டார்களா!

நாமும் சுயராஜ்யம் அடையவேண்டியதுதான், நாமும் உலகத்தாரைப் போல் இந்தியாவை ஆளவேண்டியது தான். இவ்வெண்ணம், இந்திய மக்களாகிய ஒவ்வொருவன் மனத்திலும் உதிக்கவேண்டுவது மறுக்கமுடியாத உண்மைதான். உதித்தென் செய்வது. அதற்கென வழி கண்டல்லவோ உழைக்கவேண்டும் அவ்வாறின்றி "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்து........................" என்பது போல் நாமும் நம்மாலுள்ள ஊழல்களைப்போக்கிக்கொள்ளாமல், வீணே சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று கத்தினால் அத்தகைய சுயராஜ்யம் நமக்குக் கிடைத்தால் அது தற்கால இந்தியாவிற்கு ஒரு கொலைகார ராஜீயமாகவன்றோ முடியும். சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!!

நமது தலைவர்களோ, எங்கட்குப் பூரண சுயேச்சை தான் வேண்டுமென்பார்கள். கிடைத்துவிட்டாலோ, நமது இந்துமதந்தான் தலைமைவகிக்கவேண்டு மென்பார்கள். முஸ்லீம் தலைவர்களோ, தங்கள் மதந்தான் தலைமைவகிக்கவேண்டுமென்பார்கள். பின்னும் சீக்கியர், கிறிஸ்தவர் இவ்வாறு அவரவர்களும், அவரவர் மதத்துக்குத்தான் ஆக்கந்தேடுவார்கள். இவ்வாறே கடைசியில் அப்பம் பிரித்துக்கொண்ட பூனைகளைப்போன்று தான் நமது கதியும் முடியும். சமீபத்தில் கூடிய வட்டமேஜை மகாநாட்டைக் குட்டிச்சுவராக்கிய காரணம்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்.

எனது வேண்டுகோள்.

(காரைக்கால், தோழர். கோ. சௌரிராஜன்.)

நமது ஒப்பற்ற தூய தன்மதிப்பியக்கத்தின் தனித் தோழர் அ. இராகவன் அவர்கள் மக்கள் முன்னேற்றங்கருதி மேற்கண்ட கழகமொன்றை நிறுவப் போவதாக கடந்த குடியரசிதழ் ஒன்றில் அன்னாரால் வெளியிடப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களை அன்பர்கள் கவனித்திருக்கலாம். மக்கள் பகுத்தறிவு இழந்து அஞ்ஞானத்தில் ஆழ்ந்து மூடநம்பிக்கைகளையும் அர்த்தமற்ற பழய அநாகரீக பழக்க வழக்கங்களையும் கையாண்டு அறிவிற்குப் பொருத்தமற்ற சாஸ்திரங்களையும், புராணங்களையும் நம்பி பாழ்பட்டிருக்கும் இக்காலத்தே தோழர் இராகவன் அவர்களின் அரிய முயற்சிப் பெரிதும் போற்றற் குரியதே. தற்பொழுது ஆங்காங்கே பல நூற்பதிப்புக் கழகங்கள் இருக்கின்றதாயினும் அவை மதங்களைக் காப்பதாகவும், கடவுளைக் காப்பதாகவும், செத்துப்போன செல்லரித்த பழஞ் சுவடிகளைப் புதிப்பித்து மக்களின் அறிவைப் பாழ்படுத்துவதாகவும் இருக்கின்றதேயன்றி மக்களுக்காகவும், அவர்கள் முன்னேற்றத்திற்காகவும் எதுவுமில்லை என்றே துணிந்து கூறலாம். ஆகவே தோழர் இராகவனவர்களின் இவ்வறிய முயற்சி வெற்றியடைய விரும்புவதோடு அவர்கள் இக்காரியத்தை சித்தி பெற நடத்த வேண்டுமாயின் நமதியக்கத் தொண்டர்கள், அபிமானிகள், தோழர்கள் முதலியவர்களின் பெருத்த ஆதரவும் துணையும், தொண்டும், பொருளுதவியும் பெரிதும் இன்றியமையாதனவாகையால்' ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பணியை இப்பொதுச் சேவையில் ஈடுபடுத்தத் தயங்குதல்கூடாது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்..

யான் இது போன்ற கழகங்கள் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், சிறப்பாக நமது இயக்கத்திற்குப்பெரிதும் துணைசெய்யும் என்று பன்னாட்களாக ஆலோசித்திருந்ததோடு இம்மாதிரி கழகங்களை இப்பக்கங்களில் ஆரம்பிக்க முடிவும் முயற்சியும் செய்து வந்தேன். நான் ஆரம்பிப்பதற்கு முன் இதே நோக்கத்தில் ஈடுபட்டுஎனக்கு வழிகாட்டியாய் வந்த தோழர் இராகவன் அவர்கட்கு எனது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேனாதலாலும் அது சம்பந்தமாகஎனது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க ஆர்வங் கொண்டுள்ளேன்.

இக்கழகத்தின் சட்டதிட்டங்களும் நோக்கங்களும் வெகு , அழகாகவும் மக்கள் முன்னேற்றத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும், லாபத்திற்கும் ஒத்தவாறு அமைக்கப் பெற்றிருக்கின்றன என்பதில் ஆட்சேபனை யில்லை. ஆயினும் மேற்போட்டிருக்கும் காரியம் மிகவும் எளிதானதல்ல வென்பதோடு இதற்குத் தற்காலம் நல்ல பொதுச் சேவை அவர்வுள்ள பங்குதாரர்களைச் சேர்ப்பது பெரிதும் சிரமமாகவே தான் தோன்றும். நம் நாட்டில் அதுவும் தென் இந்தியாவில் எத்தனையோ இம்மாதிரியான சங்கங்களும், பாங்கிகளும் தோன்றி பொது ஜனங்களின் பணத்தை விழுங்கி விட்டதோடு அவைகளும் மறைந்தொழிந்தன. இன்னும்பெருத்த இயக்கத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட பொது மக்களின் நன்மைக்கென ஊரைக் கொள்ளையடித்து உலையில் போட்டு ஏப்பம் விட்டு விட்டார்கள் என்பதைப் பொது உலகத்தில் ஈடுபட்டவர்களுக்கு விபரமாகத் தெரிவிக்கத் தேவையில்லை. ஆகவே நமது கழகத்தையும் மக்கள் அவ்வாறு நினைக்கக் கூடும் என்பதை நாமே தெரிவித்துக் கொள்வதில் வெட்கமும் வருத்தமும் பட வேண்டிய அவல்ய மில்லை என்றே கருதுகிறேன். ஆகையினால் இப்பெரும் காரியத்தை ஈடேற்றுவதில் பெருத்த நாணயப் பொறுப்பும், ஜவாப்தாரித் தன்மையும், உண்மைப் பொது நோக்கமும் இதை நடாத்துபவர்கட்கு இருக்க வேண்டியது மிக்க அவஸ்யத்திலும் அவஸ்யம் என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயம். எத்துணைப்பொதுநல விருப்பமும் நோக்கமும் இருப்பினும் மனிதற்குப் பணம் என்றவுடன் சுயநலத்தைப் புகுத்தலும், பல்லைக் காட்டுதலும் மக்களின் இயற்கையும் குறைபாடும் ஆகும் என்பதையாரும் மறுக்க முடியாது. ஆகையினால் நமது கழகத்தில் அவ்விதமாக ஒன்றும் நிகழா வண்ணமும், சுயநலம் புகா வண்ணமும் பார்த்துக் கொள்வதோடு லாபத்தையே பெரிதெனக் கருதாது உழைக்குமாறு பெரிதும் வேண்டுகிறேன். மேலும் இக்கழக நோக்கங்களில் "இக்கழகத்தின் கொள்கைக்கு விரோதமில்லாத பிற சங்கங்களையும் அவைகளின் நிதிகளையும் இக்கழகத்துடன் ஒன்று சேர்த்தல்'' என்பது ஒன்று. இதில் பலருக்கு அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். பிற சங்கங்களை சேர்த்துக் கொள்வதென்பது மிக்க பொருத்தமும் முறையும் ஆகும். ஆனால் அவைகளின் நிதிகளைப் பறிப்பதானால் அச்சங்கத்தாரின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தடை செய்வதோடு அவர்களது சொந்த அபிப்பிராயத்தின்படி எதுவும் செய்ய முடியாது போய் விடும் என அபிப்பிராராயப்படுகின்றேன்.

இறுதியாக நம்மியக்க அபிமானிகள் யாவரும் ஒன்றுபட்ட மனப்பான்மையோடு இதில் ஈடுபட்டுழைக்க வேண்டிக்.கொள்வதோடு எம்மைப் பொருத்தமட்டில் மனப் பூர்வமான ஆதரவு தந்து, இடும் தொண்டை ஊதியம் விரும்பாது செய்ய சற்றும் தயங்கேன் என உறுதி கூறுவதுடன், எனது நண்பர்களையும் பிறரையும் இதில் கலந்துழைக்கப்பிரயத்தனப்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேய் உண்டா?

(ப. சி. அபிமன்னன்)

இந்தியாவில் பேய் பிசாசு உண்டு என்றும் மக்களை ஏமாற்றியும் பேய்ஓட்டுகிறேன் என்றும் பாமரமக்களிடத்தில் காசு பிடுங்குகிறார்கள்.

இறந்துபோனவர்களின் பிராணன் பேயாகத்திரிந்து கொண்டிருந்து உயிரோடியிருப்பவர்களைப் பீடிக்கிறதெனச் சொல்லுகிறார்கள். இறந்து போனவர்களின் உயிர் பின்னால் பேயாக விருந்து பல உருவங்களோடு கண்ணுக்குத்தென்படுவதென்பதும், மேலும் அவைகள் உயிரோடிருக்கும் மக்களைப்பிடித்துத்துன்புறுத்துவதென்பதும் கூடாத காரியம். உடலின்றும் உயிர்நீங்கியவுடன்பௌதிகசக்திஉயிருக்குஇல்லாமற் போய்விடுகிறது. இதனால் பௌதிகப்பிரபஞ்சத்தில் காணப்படவும், மனிதர்களை வருத்தவும்அதனால் முடியாது. இதைப்பற்றிப்பெரியோர்கள் எவ்வளவோ ஆராய்ச்சிகளோடு பேய்கள் மனிதரை வருத்துவதில்லையென்றும், அவ்விதம் அவை இருந்தும் மனிதர்களை வருத்துகிறதெனநம்புவதுவீண் என்றும், பேயே இல்லை என்றும் சித்தாந்தம் செய்து பலநூல்களை எழுதியுள்ளார்கள்;

சாதாரணமாக நமது நாட்டில் பேய்களைத்தாம் கண்டதாகச்சொல்லும் பலர்களேயன்றி, காணவேண்டுமென்பவர்களுக்குக்காட்டுகிறோம் என்பவர்கள் ஒருவரையுங்காணமுடியாது. இருட்டுக்காலங்களில் "மிரண்டவன் கண்ணுக்குஇருண்டதெல்லாம்பயம்'' என்றபடி மன மருட்சியால் குட்டிச்சுவரைக்கண்டுபேயே கழுதை போல் நிற்கிறதென்றும், எருமைபோல் நிற்கிறதென்றும் பயந்தவர்கள் பலர். பேய்களைப்பற்றிய பொய்யான குட்டிக்கதைகள் ஏராளமாக நமது நாட்டில் வழங்கிவருகின்றன. அதிலும் நமது பாட்டிமார்கள் சிறு குழந்தைகளுக்கு பன்னிப்பன்னிச்சொல்லி வரும் கட்டுக்கதைகள் பெரும்பாலும் இவைகளே. இவற்றால் நம்மவர்கள் சிறு வயதினின்றுமே பேய்களைப்பற்றிய பயங்கர விஷயங்களில் நம்பிக்கையுடையவர்களாகி சித்தம், மனோவலிமையிழந்து பயங்காளிகளாகின்றனர். பேய்களைப்பற்றிய நம்பிக்கையில்லாத பிற நாடுகளில் பேய்களின் தொந்தரவுகளில்லாமலிருத்தல் கவனிக்கத்தக்கது. உண்மையில், உலகில் பேய்களிருந்து மனிதர்களைப்பீடிப்பதுண்மையாயின் அத்தேசங்களிலுமிருக்க வேண்டுமல்லவா? நமது நாட்டுக்கே இஃது தனியாக உரியதென்பதை விட பரிகாசமான வார்த்தை வேறொன்றிருக்காது.

சிலர் பேய் பிடித்தாடுபவர்கள் பல பாஷைகள் பேசுகிறார்களென்கின்றனர். அவ்விதம் பேசுபவர்கள் ஏதோ தாம் கேள்வியுற்ற வேறு பாஷை சொற்கள் இரண்டொன்றைக்கூறுகின்றனர்களா? அல்லது அப்பாஷையில் முழுஞானத்தோடு செவ்வையாகப் பேசுகிறார்களா? என்பதை நம்மவர்கள் பரீக்ஷிப்பதில்லை. சாதாரணமாக நமது மூளைக்கு ஓர்விதமான சக்தியுண்டு அது அகஸ்மாதமாகத்தான் கேள்விப்படும் விஷயங்களைத்தன்னுள்பதித்துக்கொள்ளும் அறிவு மயங்கிப் பைத்தியமேற் கொண்டகாலத்தில் இவ்விதம் மூளையில்பதிந்த விஷயங்கள் தமது வாயினின்று தானாகவெளியாகலாம். இக்காரணத்தாலேயே வேறுபாஷையறியாத மாதர்கள்வாயினின்றும் வெளிவரலாம். இதைபேய்களின் சக்தியென்பது பேதமையே.

சுலபமாக மனிதர்கள் தமதுஅறிவால் அறியக்கூடாதபடி நிகழும் பௌதிகசக்திகளின் அற்புதச்செயல்கள்பலஉண்டு. அப்படிப்பட்டவற்றை நமதுநாட்டவர் பேய்களுடையவும், குட்டிசாத்தான் களுடையவும், தெய்வங்களுடையவும், சக்திகளென்றும், செயல்களென்றும் நம்புவது வழக்கம். அப்படியே இந்திர ஜாலம்கேந்திராஜாலங்களென்ற ஜாலவித்தைகளை குட்டிசாத்தான் களின்வேலையென நம்புகிறார்கள் ஆனால் மேல்நாட்டார் அத்தகைய பலவிநோதங்களைமேஜிக் என்று கூறிச்செய்யக்காண்கிறோம்.

கிராம்போன் என்னும் பாடும்கருவியை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். அதுசாமானியமாக ஜடப்பொருளாக

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

குடி அரசு.

ஈரோடு 1932 ஜூன்மீ 19-உ

சிறுபான்மையோர் ஒப்பந்தம்.

—:0:—

வாக்குரிமை சம்பந்தமாக இந்தியாவில் விசாரணை செய்த திரு. லோதியன் கமிட்டியின் அறிக்கையும் வெளியாகிவிட்டது. வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுத்தால் ஒழிய, தேசத்தின் கஷ்ட நிலைமையை அனுபவத்தில் உணர்ந்திருக்கும் ஏழை மக்கள் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் பெற முடியாதென்றும், ஓட்டுரிமையை நூற்றுக்குப் பத்துவீதமோ, பதினைந்து வீதமோ, இருபது வீதமோ, முப்பது வீதமோ, ஐம்பது வீதமோ அதிகப்படுத்துவதனால் ஏழைகளுக்கு ஒருவித நன்மையும் ஏற்பட்டு விடாதென்றும், இப்பொழுது இருப்பது போல், பணக்காரர்களும், ஜமீன்தார்களும், முதலாளிகளும்தான் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் பெற முடியுமென்றும் முன்பு எழுதியிருந்தோம். வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்கும் விஷயத்தைப்பற்றி லோதியன் கமிட்டியோடு ஒத்துழைத்த யாரும் கவலை எடுத்துக் கொள்ளவில்லையென்றும் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறே இப்பொழுது வெளியாயிருக்கும், லோதியன் கமிட்டி அறிக்கையிலும் ஓட்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப்பட்டிருப்பதைத் தவிர வேறு எந்த அபூர்வமான காரியமும் காணப்படவில்லை. ஆகவே ஏழை மக்கள் நிலை எப்பொழுதும் ஒன்றுதான். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களுக்கு வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டு வந்தார்கள். இவ்விஷயமும் லோதியன் கமிட்டியாரால் கவனிக்கப்படவில்லை.

அடுத்தபடியாகச் சட்டசபைகளின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக, எந்தெந்த வகுப்புக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதைப்பற்றியும், தனித்தொகுதி ஏற்படுத்துவதா? கலப்புத்தொகுதி ஏற்படுத்துவதா? ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதா? என்பதைப்பற்றியும், லோதியன் கமிட்டி அறிக்கையில் யாதொரு முடிவும் கூறப்படவில்லை. வகுப்புப்பிரச்சினை சம்பந்தமான இம்முடிவு, பிரிட்டிஷ் பிரதம மந்திரியினால் செய்யப்படவேண்டியிருக்கிறது. பிரதம மந்திரியோ எவ்வகையாக இவ்விஷயத்தில் முடிவு செய்யப்போகிறார் என்பது வெளிப்படவில்லை.

இங்கிலாந்தில் இரண்டாவது வட்ட மேஜை மகாநாடு நடந்தபோது, சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகளும், தாழ்த்தப்பட்ட வகுப்புப்பிரதிநிதிகளும் சேர்ந்து, "தங்களுக்குத் தனித்தொகுதியும், பாதுகாப்பும் வேண்டும்" என்று தீர்மானித்து கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு சட்ட சபைகளிலும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

ராஜாங்க சபை, மொத்த ஸ்தானம் இருநூறில், ஜாதி இந்துக்களுக்கு 101-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 20-ம், முஸ்லீம்களுக்கு 67-ம், கிறிஸ்தவர்களுக்கு 1-ம், சிக்கியர்களுக்கு 6-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 1-ம், ஐரோப்பியர்களுக்கு 4-ம் ஒதுக்க வேண்டும் என்றும்;

மத்திய தலைமைச் சட்டசபையில் மொத்தம் மூன்னூறு ஸ்தானங்களில், ஜாதி இந்துக்களுக்கு 123-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 45-ம், முஸ்லீம்களுக்கு 100-ம், கிறிஸ்தவர்களுக்கு 7-ம், சிக்கியர்களுக்கு 10-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 12 ஒதுக்கிவைக்கவேண்டும் என்றும்;

வங்காள சட்டசபையில் மொத்தம் 200 ஸ்தானங்களில், ஜாதி இந்துக்களுக்கு 38-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35-ம், முஸ்லீம்களுக்கு 102-ம், கிறிஸ்தவர்களுக்கு 2-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 20 ஒதுக்கிவைக்க வேண்டும் என்றும்;

பம்பாய் சட்டசபையில் மொத்த ஸ்தானங்கள் இருநூறில், ஜாதி இந்துக்களுக்கு 88-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 28-ம், முஸ்லீம்களுக்கு 66-ம், கிறிஸ்தவர்களுக்கு 2-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 3-ம், ஐரோப்பியர்களுக்கு 13-ம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்றும்;

சென்னை சட்டசபையில், 200 மொத்த ஸ்தானங்களில், ஜாதி இந்துக்களுக்கு 102-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 40-ம், முஸ்லிம்களுக்கு 30-ம், கிறிஸ்தவர்களுக்கு 14-ம், ஆங்கிலோ இந்தியர்களுக்கு 4-ம், ஐரோப்பியர்களுக்கு 8-ம், மலை ஜாதியார்களுக்கு 2-ம், ஒதுக்கிவைக்கவேண்டுமென்றும்;

பாஞ்சால சட்டசபையில் 100 மொத்த ஸ்தானங்களில், ஜாதி இந்துக்களுக்கு 14-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10-ம், முஸ்லீம்களுக்கு 51-ம், சீக்கியர்களுக்கு 20-ம், மற்றவர்களுக்கு 5-ம் ஒதுக்கி வைக்கவேண்டுமென்றும்;

சிந்து மாகாணத்தில் இந்துக்களுக்கும், எல்லைப்புற மாகாணத்தில் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்றும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இவ்வொப்பந்தத்தில், திருவாளர்கள், ஆகாகான், பன்னீர்ச்செல்வம், அம்பெட்கார், கிட்னிகார் முதலியவர்கள் கையெழுத்திட்டு, இதைப்பிரதம மந்திரி திரு. மேக்டனால்டு அவர்களிடம் அளித்திருக்கின்றார்கள். அவரும் இவ்வொப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டபோது "வகுப்புப்பிரச்சினையைப்பற்றி முடிவு கூறும்போது இவ்வொப்பந்தம் முக்கியமானதாகக் கவனிக்கப்படும்" என்று கூறினர். ஆனால் இவ்வொப்பந்தப்படி பிரதம மந்திரி முடிவு செய்யப்போகிறாரா? அல்லது இதைக்குப்பைத்தொட்டியில் போட்டு விட்டு வேறுவிதமாக முடிவு செய்யப்போகிறாரா என்பது பிறகுதான் தெரியும்.

ஆனால் இச்சமயத்தில், மேற்கண்ட ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாயிருந்த, முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்டவர்களும் எவ்வித அபிப்பிராயமுடையவர்களாயிருக்கின்றார்கள் என்பது கவனிக்கவேண்டியதாகும். அவ்வொப்பந்தத்தில் கண்டுள்ளபடி ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படும் எண்ணிக்கை விஷயமாக, முஸ்லிம்களுக்குள்ளும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குள்ளும் மாறுபாடான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், தனித்தொகுதியும், பாதுகாப்பும் கோரும் விஷயத்தில் முஸ்லிம்களுக்குள்ளும், தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளும், பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம், அவ்வொப்பந்தத்திற்குச் சாதகமாகவே இருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. இதனை ஆதி முதல் மௌலானா ஷௌகத்அலி அவர்கள், முஸ்லிம்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கவேண்டுமென்றே போராடிக்கொண்டிருப்பதைக்கொண்டும், சமீபத்தில் இந்தியாவில் உள்ள பிரபல முஸ்லிம் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, "லண்டன் டைம்ஸ்" என்னும் பத்திரிகையில் வெளியிட்டிருக்கும் ஒரு மகஜரில் "ஆங்கில அரசாட்சிக் தப்பாக இந்துக்களின் அரசாட்சி ஏற்படுவதாயிருந்தால், அப்பொழுது முஸ்லிம்கள், ஆங்கில அரசாட்சியே சிறந்ததென்று கருதுவார்கள். எனெனில் ஆங்கில அரசாட்சி பாரபட்சமற்றதாக இருக்கிறது. அல்லாமலும் ஆங்கில அரசாட்சி நீங்கிவிட்டால் பலசாலிகளான முஸ்லிம்களுக்கும், சதியாலோசனை இரத்த வெறி முதலிய கெட்ட குணங்களைக் காங்கிரசின் மூலம் கற்றுக் கொண்டிருக்கும் இந்துக்களுக்கும் ஓயாமல் சண்டை உண்டாகிக்கொண்டேயிருக்கும். ஆகவே பொறுப்பாட்சியுடன் ஐக்கிய அரசாட்சியை ஏற்படுத்தி எல்லா வகுப்பினர்க்கும், அதிகாரத்தைச் சமமாகப்பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எண்ணமாக இருக்குமானால் இரு சமூகங்களின் உரிமைகளையும் வரையறுக்கும் பொழுது ஒவ்வொரு சமூகத்தின் ராஜ விசுவாசத்தையும் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம்' என்று கூறியிருப்பதைக்கொண்டும் உணரலாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் இவ்வொப்பந்தத்தை ஆதரித்தும், தனித்தொகுதியையும் பாதுகாப்பையும் வற்புறுத்தியும் தீர்மானங்கள் செய்திருக்கின்றார்கள். 'தனித்தொகுதி வேண்டாம், பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படவேண்டும்' என்று கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்திருக்கும் திரு.எம்.சி. ராஜாவின் கூட்டத்தாருக்கு இந்து மகாசபைக்காரர்களின் ஆதரவும், தனித்தொகுதிக்கு விரோதமாயிருப்பவர்களின் ஆதரவும்தான் இருக்கின்றனவேயொழிய தாழ்த்தப்பட்ட சமூகத்தில் அதிக ஆதரவில்லை என்று சொல்லப்படுகிறது. மற்றைய சிறுபான்மை சமூகத்தினரும் தனித்தொகுதியை விரும்பிநிற்கின்றனர்,

ஆனால் இச்சமயத்தில் திரு. மாளவியா, திரு. மூஞ்சே முதலிய இந்து மகா சபைக்கூட்டத்தாராலும் காங்கிரஸ் அபிமானமுடையவர்களாலும் தனித்தொகுதிக்கு விரோதமாகப் பிரசாரம் பண்ணப்பட்டு வருகிறது. இப்பிரசாரத்தினால் முதல் மந்திரியார் மயங்கி தனித்தொகுதிக்கு ஆதரவளிக்காமல் விட்டுவிடுவாரானால்

அரசாங்கமும், சமூக சீர்திருத்தமும்.

:0:

மைசூர் சமஸ்தான சட்ட சபைக் கூட்டத்தின் முடிவில் திவான், சர் மிர்ஸா இஸ்மாயில் அவர்கள் செய்த பிரசங்கத்தில்,

"இந்தியாவில் சமுதாய சீர்திருத்தங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் பல கஷ்டங்கள் ஏற்படும். முதலில் பொது ஜனங்களிடம் சீர்திருத்தம் உண்டாக வேண்டும். இதனால் தான் எளிதில் சமுதாய சீர்திருத்தம் உண்டாகும். இவ்வாறு பொது ஜனங்களிடம் சீர்திருத்த உணர்ச்சி உண்டாகாத காரணத்தால் தான், அதிகமான பொதுஜன ஆதரவு ஏற்படும் வரையிலும் சீர்திருத்த சம்பந்தமான மசோதாக்களை ஆதரிக்க அரசாங்கத்தார் பின் வாங்குகின்றனர்" என்று பேசியிருக்கிறார்.

இப்பேச்சிலிருந்து பொதுஜன ஆதரவு இருந்தால் தான் அரசாங்கத்தார் சமூகச் சீர்திருத்த மசோதாக்களுக்கு ஆதரவு அளிக்கமுடியும். இன்றேல் அளிக்க முடியாது என்ற அர்த்தம் உண்டாகவும் இடமிருக்கின்றது. உண்மையில் இந்த அர்த்தத்தில் திவான் அவர்கள் பேசியிருப்பாரானால், இது "அலை ஓய்ந்த பின் கடலில் ஸ்நானம் செய்யலாம்" என்னும் முடிவைப் போன்றது என்று தான் நாம் கருதுகின்றோம்.

பொது ஜனங்கள் எப்பொழுதும், மூட நம்பிக்கையுடைய வைதீகர்களுடைய பேச்சுக்களுக்குச் செவி சாய்க்கக் கூடியவர்களாகத் தான் இருப்பார்கள். ஆகையால் அவர்களை சமுதாய சீர்திருத்தத்திற்கு ஆதரவளிக்க முன் வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறாகும். குற்றஞ் செய்கின்றவனை தானே குற்றஞ் செய்யாமல் திருந்தி வரட்டுமென்றுவிட்டுக்கொண்டிருந்தால் அவன் திருந்துவது எப்பொழுது? அவன் செய்த குற்றத்தை எடுத்துக் காட்டித்தண்டனையும்அளித்தால் தான் அவன் திருந்துவான் என்பது உண்மையல்லவா? அதுபோலவே, பழய நம்பிக்கையினாலும், குருட்டுப் பழக்க வழக்கங்களினாலும் பொது ஜனங்கள் கைக்கொண்டுவரும் சமூக ஊழல்களைப் போக்க அரசாங்கத்தாரே முற்பட்டு, சட்டங்களைச்செய்து, அச்சட்டங்களின் கருத்துக்களைப்பொது ஜனங்கள் உணரும்படி செய்வதன் மூலமே சமூகச்சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை.

சமீபத்தில் சமுதாய சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கும், துருக்கி முதலிய தேசங்களை எடுத்துக் கொண்டால், அங்கெல்லாம்பொது ஜனங்கள் சமுதாய சீர்திருத்த உணர்ச்சி பெற்றபிறகு தான் சமுதாய சீர்திருத்தச்சட்டங்கள் செய்யப்பட்டதா? அல்லது அரசாங்கத்தாரே முன்வந்து சமுதாய சீர்திருத்தச் சட்டங்களைச்செய்து அவைகளுக்குப்பொதுஜன ஆதரவைப்பெற்றார்களா? என்று பார்த்தால், இவ்வுண்மை விளங்கும். அரசாங்கமே தைரியமாகச்சமுதாயசீர்திருத்த சட்டங்களைநிறைவேற்றி அவைகளைப்பொது ஜனங்கள் அனுசரிக்கும்படி செய்தார்கள் என்பது யாவருக்கும் தெரியும்.

இப்பொழுது இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக்காட்டிலும், சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமாகக்கொஞ்சம் முன்னணியில் நிற்கும் சமஸ்தானங்களில் முதன்மை பெற்று பரோடாவும், இரண்டாவது மைசூருமாக இருக்கின்றது என்று புகழப்படுகின்றது. இந்த நிலைமையில் திவான் அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமான மசோதாக்கள் சட்ட சபையில் ஆலோசனைக்கு வரும் போது பொதுஜன ஆதரவு இருக்கிறது என்று தெரிந்தால்தான் நாங்கள் ஆதரிப்போ' என்ற பல்லவியைப்பாடிக்கொண்டிருப்பதுபோல மைசூர் அரசாங்கத்தின் சார்பாகவும் பாட ஆரம்பித்ததைப்பற்றி நாம் வருந்துகின்றோம். ஆயினும் திவான் அவர்கள் "அரசாங்கத்தார் ஆதரவு அளிக்கப் பின்வாங்குகின்றனர்" என்று தான் கூறுகிறாரே ஒழிய பிரிட்டிஷ் அரசாங்கத்தைப்போல ஆதரவு அளிக்க மாட்டோம் என்று கூறவில்லை என்பதைப்பார்க்கச்சிறிது சமாதானம் அடையவேண்டியிருக்கிறது. இவ்வாறு பின்வாங்கிய மனதுடனாவது சமூகச்சீர்திருத்த சட்டங்களுக்குக் கூடியவரையிலும் ஆதரவு அளித்துவரும் மைசூர் அரசாங்கத்தையும் திவான் சர். மீர்சா இஸ்மாயில் அவர்களையும் பாராட்டுகின்றோம். சென்றசட்டசபைக்கூட்டத்தில் 'பால்ய விவாகத்தடைச்சட்டம்' மைசூர்சட்டசபையில் நிறைவேறியிருப்பதும் அவ்வரசாங்கம் சமுதாய சீர்திருத்த விஷயத்தில் ஊக்கங்காட்டி வருகிறது என்பதற்கு ஒரு உதாரணமாகும் என்பதையும் இச்சமயத்தில் நினைப்பூட்டுகிறோம்.

பாராட்டுகின்றோம்.

எவ்வளவுதான் பழமை விரும்பிகளும், வைதீகர்களும், வர்ணாசிரமிகளும் தங்கள் சுயநலத்தையும், கொள்கைகளையும், பிடிவாதத்தையும் நிலைநாட்ட பகீரதப்பிரயத்தனப் பட்டபோதிலும், எவ்வகை சூட்சிகள் செய்ய முற்பட்டபோதிலும், எவ்வகை மறைமுகமான எதிர்ப்புகள் உண்டாக்கி வைத்தபோதிலும் நடைபெறுகின்ற சம்பவங்கள் அவர்களது மனமுவந்த எண்ணங்களையும் ஆகாயக்கோட்டைகளையும் தவிடு பொடியாக்குவதன்றி நேர்விரோதமாகவுமிருக்கின்றன. இதுகால சக்கரத்தின் வேகமேயன்றி பிறிதொன்றல்ல. உலகம் தினே தினே, நிமிஷத்திற்குநிமிஷம் முற்போக்கடைந்துகொண்டு நவீனமயமாகிக்கொண்டு வருவதுடன் ஒவ்வொரு நாளும் நடைபெறும் அதியற்புத செயல்களினின்று பழமையை மறந்துவிடுங்கள்! பழமையை மறந்துவிடுங்கள்! என்று அறை கூவியழைப்பதே போன்றிருக்கிறது.

இதற்கு உதாரணம் வேண்டுமாயின் இவ்வாரம் நமதியக்கத் தோழர் விருதுநகர் திரு. வி. வி. ராமசாமி அவர்கள் ராமனுதபுரம் ஜில்லா தேவஸ்தான கமிட்டி ஆலோசனை போர்டின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியே போதுமானதாகும். அன்பர் திரு. ராமசாமி அவர்கள் நாடார் என்று வழங்கப்படும் குலத்தவராவர். நாடார் குலத்தவர்கள் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் தாழ்ந்த ஜாதியார் எனக்கற்பித்து வைதிகர்களும், வருணாசிரமிகளும் நாடார் பெருமக்களுக்கு கோவில் நுழைவு உரிமை மறுக்கப் பட்டிருப்பது நேயர்கள் அறிந்ததொன்றாகும். அவ்வாறிருந்தும் அத்தகைய "புனித தெய்வீகம்" பொருந்திய கோவில்களின் கமிட்டி ஆலோசனைத் தலைவராகத் தோழர் ராமசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டது கண்டு மகிழ்வதோடு அவரைப் பெரிதும் பாராட்டுகிறோம். வைதிக உலகத்திற்கிதுவோர் நல்ல பாடமாகும்.

மகிழ்ச்சியுரியதாகுக

நமது நண்பர் ஆனந்த போதினி உதவியாசிரியர் திரு.வி. ராமசாமியவர்களின் துணைவியார் திருமதி அரங்கநாயகியம்மையார் இவ்வாண்டு சென்னை சர்வகலாசாலை தமிழ் வித்வான் பரீட்சையில் தேர்ச்சி பெற்றதறிய சந்தோஷிக்கிறோம். திருமதி அரங்கநாயகி பல பாஷைகளின் ஞானம் பெற்றிருப்பதோடு தமிழில் நிறைந்த புலமையும் பெற்றவராவார் என்பதற்கு பல பத்திரிகைகளில் அன்னார் எழுதி வந்த கட்டுரைகளே சான்று கூறும். அறிவும், ஆற்றலும் பெற்ற திருமதி அரங்கநாயகியார் பெண் மக்கள் விடுதலையிலும், சீர்திருத்தத் துறையிலும், சமூக ஊழியத்திலும் முன்னணியில் நின்று தக்கதோர் வழிகாட்டியாய் விளங்குவார் என்றே நம்புகிறோம்.

லால்குடி சுயமரியாதை மகாநாடு

ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று திருச்சி முனிசிபல் சத்திரத்தில் லால்குடி தாலூகா 4வது சுயமரியாதை மகாநாட்டின் சப் கமிட்டிக்கூட்டம் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. அது போது தோழர்களான எஸ். வி. லிங்கம், குருசாமி பி. ஏ, குஞ்சிதம் பி. ஏ, எல். டி., "போர் முரசு" ஆசிரியர், ச. ம. சி. பரமசிவம், செல்வக்கணபதியார், பூமிநாதம், டி. எம். முத்து, கூத்தபெருமாள், எசனைகொமை பிச்சையா, என். எஸ். சதாசிவம், பி. வி. துரைசாமி, என். விராஜன், கோவை எ. ஆர். சிவானந்தம் தம்பதிகள், ஸ்ரீரங்கம் துரைசாமி தம்பதிகள், அன்பில் செல்லப்பா முதலியோர் விஜயம் செய்

பொதுத்தொகுதிக்கு ஆதரவு அளித்து அவ்வாறு முடிவு செய்யும்படி விட்டுவிடுவாரானால் இந்தியாவில் எப்பொழுதும் இந்து முஸ்லீம் கலகம் மாத்திரம் அல்லாமல் மற்றும்பல வகுப்புக்கலகங்களும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. இப்பொழுது இருக்கும் மதச்சண்டை போதாமல் தேர்தல் சண்டைகளும் முளைத்து விடும் என்பது நிச்சயம். ஆகையால் தேசத்தில் வகுப்புக்கலகங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் பிற்போக்கான சமூகங்களுக்குத்தனித்தொகுதி ஏற்படுத்துவதே சிறந்தது என்பதை எடுத்துக்காட்டவிரும்புகின்றோம்

...திருந்தனர். பெரும்பான்மையான தோழர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க, ஜூன் மாதம் 26-தேதி நடக்கவிருந்த சுயமரியாதை மகாநாட்டை ஜூலை மாதம் (24—7—32) தேதி ஞாயிறன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டதாக விளம்பர அதிகாரி பி. எம். முத்துசாமி அறிவிக்கிறார்.

புதுவை வாலிபர் மகாநாடு.

19-6-32 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குக் கெப்ளே தியேட்டரில் ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள் [illegible]த் தலைமையின் கீழ் வாலிபர் மகாநாடு ஒன்று நடைபெறும். அதுபோது சென்னை சட்ட சபை அங்கத்தினரும் நகரபரிபாலன சபை அங்கத்தினரும், ஆகிய ராவ்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார். என வரவேற்புக்கமிட்டித் தலைவர் அறிவிக்கிறார்.

கோவை தேசிய மாதர் சங்கம்

ஸ்ரீமதி ரா. ரங்கநாயகியாருக்கு உபசாரம்.

கோவை தேசிய இந்தியர் சங்கத்தைச் சார்ந்த மாதர் சங்கத்தார் 11-5-32ல் சனிக்கிழமை மாலை 5-மணிக்கு கார்னேஷன் பார்க்கில் இவ்வாண்டில் சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப்பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பூளைமேடு ஸ்ரீமதி ரா. ரங்கநாயகி அம்மையாருக்கு ஓர் தோட்ட விருந்து நடத்தி உபசாரப்பத்திரம் அளித்தனர். இவ்விழாவில் தலைமை வகித்தவர் ஸ்ரீமதி ஜேக்கேப் அம்மையார் கோவையில் பிரபல குடும்பங்களைச்சேர்ந்த பெண்மணிகள் ஏராளமாக விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விருந்துக்குப்பின்னர் புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு தலைவர் வேண்டுகோட்படி ஸ்ரீமதி கணேசய்யரால் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. ஸ்ரீமதி ரா. ரங்கநாயகி அம்மையார் அழகிய செந்தமிழில் உபசாரப்பத்திரத்திற்குத் தக்கபடி விரிவாகப்பதில் அளித்தனர். பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கோவை நகரசபை.

திரு. ஆர். கே. வெங்கடாசலம் உபதலைவர்.

கோவை நகரசபை விசேஷக்கூட்டமொன்று 15-6-32-ந்தேதி தலைவர் திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. அவர்கள் தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் காலஞ்சென்ற உபதலைவர் திரு. வி. அருணாசலம் செட்டியார் அவர்கள் வகித்திருந்த வைஸ் சேர்மென் ஸ்தானத்திற்கு உயர்திரு. ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. அவர்களுடைய சகோதரர் உயர்திரு. ஆர். கே. வெங்கடாசலம் அவர்கள் பெயரை உயர்திரு. எஸ். என். பொன்னையகவுண்டர். அவர்கள் பிரரேபிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாய்த்தெரிந்தெடுக்கப்பட்டது.

(ஒரு நிருபர்.)

சுயமரியாதைச் சங்கம் நாகப்பட்டணம்.

12—6—32 மாலை 6 மணிக்கு இவ்வூர் கொடிமரத்து மேடையில் தோழர் எம். எஸ். இராஜ கோபால் தலைமையில் கூட்டம்ஒன்று கூடிற்று. சங்கக் கட்டிட மாற்றத்தைப் பற்றியும், தலைவர் இராஜிநாமாவைக் குறித்தும் கலந்தாலோசிக்கப் பட்டபின், தலைவர் தோழர் எஸ். பி. கிருஷ்ணசாமியின் இராஜிநாமாவை ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. சங்கத் தலைவராகத் தோழர். ஆர். வி. கோபால் தேர்ந்தெடுக்கப்பட்டார். காலியான ஸ்தானத்திற்கு தோழர். ஆர். பார்த்தசாரதி நிர்வாக அங்கத்தினராக நியமனம் பெற்றார். தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தன்னைத்தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு தனது நன்றியைத்தெரிவித்து விட்டு, சங்கத்தின் முற்போக்கான விஷயங்களைப் பற்றி எடுத்துக் கூறியதும் இரவு 8 மணிக்கு கூட்டம் முடிவுற்றது. (ஒரு நிருபர்.)

மதுரையில்

சுயமரியாதைத்திருமணம்.

மதுரை சுயமரியாதைச் சங்கத்தைச்சேர்ந்த சி. பால்சாமி அவர்கட்கும், திரு நிறைசெல்வி அமிர்தம் அம்மையாருக்கும் சென்ற மே, மீ 8-ந்தேதி புதன்கிழமை திரு எ. எஸ் அருணாசலம் அவர்களால் சுயமரியாதைக்கொள்கைப்படி சீர் திருத்த திருமணம் நடந்தது. அதுசமயம் தோழர்கள் எஸ். வி. தொந்தி, அருப்புக்கோட்டை கருப்பையா, மதுரை சுயமரியாதைச் சங்கக்காரியதரிசி எ. என். வெங்கிடசாமி, அமிர்தலிங்கம் முதலியவர்கள் சுயமரியாதைத் திருமணங்களின் அவசியத்தைத் தெளிவாக விளக்கிப்பேசினார்கள். பின் தலைவர் முடிவுரை கூறியபின் வந்திருந்தவர்களுக்குச் சமபந்திவிருந்தொன்று நடந்ததும் திருமணம் முடிவுற்றது.

மற்றொரு திருமணம்.

இன்று பகல் 10-30 மணிக்கு மதுரை டவுன்முனிச்சாலையில் தோழர் தெய்வநாயகம்அவர்கட்கும் செல்வி ஆக்கம்மாள் அவர்களுக்கும் சுயமரியாதைக்கொள்கைப்படி ஒரு திருமணம் திரு. எ. எஸ். அருணாசலம் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது தோழர் ப. ரா. முத்துசாமி அவர்கள் சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப்பற்றிப்பேசினார்கள். மதுரை சுயமரியாதைச் சங்கம் ஏற்பட்டபின்னரே மதுரையில் சுயமரியாதை உணர்ச்சி பரவுகிறதென்பது நன்றாக தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

அழகியநல்லூர் ஆதிதிராவிட வாலிபர் சங்கம். 4-வது கூட்டம்.

12—6—32 இன்றிரவு 7 மணிக்கு சுயமரியாதைப் பாவலர் தி. அ. வேங்கடசாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடை பெற்றது. "கல்வி" யைப் பற்றி திருஞானசுந்தரம் விரிவுரை நிகழ்த்தினார். அது சம்பந்தமாக திரு. குமரவேல், ஆந்திரேயா, நடராஜன் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். ஷை ஊர் வாலிபர் செந்தமிழ்க் கலாசாலைத் தலைவர் திரு அ. முத்துத் தேவரவர்கள் விஜயம் செய்து கூட்டத்தை மிக உற்சாகப் படுத்தினர். பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

எதிர்ப்பைப் பொருட் படுத்தாது ஊக்கத்துடன் உழைத்து தொண்டாற்றி வரும் உயர்திரு அ. முத்துத் தேவர் அவர்களுக்கு இச்சங்கமானது தனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதாகவும்,

பெருங்கருணைப் பெருங் கொடை வள்ளலாராய அறுப்புக் கோட்டை உயர்திரு. வீர. சு. பு. வீரய்யா (முதலாளி) அவர்களுக்கு இச்சங்கமானது தனது, மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிலையும் தெரிவித்துக் கொள்வதாகவும்,

சங்கத்திற்குக் கருணையும் கண்ணியமும் வாய்ந்த பத்திரிகாசிரியர்கள் தங்கள் பத்திரிகைகளை இலவசமாக அனுப்பி ஊக்கப்படுத்தும்படி இச்சங்கமானது வந்தனத்துடன் கேட்டுக் கொள்கிறது எனவும்,

ஷை தீர்மானங்களை பத்திரிகாசிரியர் முதலியோர்க்கு காப்பிகள் எடுத்து அனுப்பும்படி காரியதரிசி அவர்களுக்கு இச்சங்கமானது அதிகாரம் கொடுக்கிறது எனவும் தீர்மானிக்கப் பட்டது. (ஒரு நிருபர்.)

3-ம் நெம்பர் நமூனா.

கீழ்க்கண்ட விளம்பரமானது ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஆபீஸ் நோட்டீஸ் போர்டில் 14—6—32ல் பிரசுரிக்கப்பட்டது.

ஈரோடு டவுன் பிளானிங் ஸ்கீம்.

"எ" விளம்பரம்.

1930-ஹு மே-மீ 30-தேதிய மீட்டிங்கில் ஈரோடு முனிசிபல் சங்கத்தார் 1920-ஹுத்திய மதராஸ் டவுன் பிளானிங் ஆக்ட் 10-வது பகுதி 1-வது உட்பிரிவின்படிக்கு பிரசுரப்படுத்துகிறார்கள்.

30—5—32தேதிய 84 நெ. தீர்மானம்.

கீழ்க்கண்ட 3 இடங்களில் டவுன் பிளானிங் ஸ்கீம்களைத் தயாரிக்கும் நோக்கத்துடன் சென்னை டவுன் பிளானிங் ஆக்ட் 10 (1) வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்க ஏற்பாடு செய்யும்படி டவுன் பிளானிங் டைரக்டர் அவர்களின் அபிப்பிராயக் குறிப்புகள்.

1-வது ஸ்கீம்.

மேற்கும் வடக்கும் எல்லை—முனிசிபாலிட்டியின் எல்லை.
கிழக்கு எல்லை—காவேரி ரோட்டு எல்லை.
தெற்கு எல்லை—சத்தியமங்கலம் ரோட்டும் மில் வீதியும்.

2-வது ஸ்கீம்

வடக்கு எல்லை—பெருந்துறை ரோட்டு எல்லை.
கிழக்கு எல்லை—பூந்துறை ரோட்டு எல்லை.
தெற்கு எல்லை—தென்னிந்திய ரயில்வே எல்லை.
மேற்கு எல்லை—மேட்டூர் ரோட்டு எல்லை.

3-வது ஸ்கீம்.

வடக்கு எல்லை—தெற்கு வள்ளுவர் வீதியும் வார்டு நேப்பியர் வீதியும்
கிழக்கும் தெற்கும் எல்லை—தென்னிந்தியா ரயில்வே.
மேற்கு எல்லை—பூந்துறை ரோட்டு எல்லை.

கவுன்சில் தீர்மானம் நெ. 84.

இந்தக் கவுன்சிலார் ஷை 3 விஸ்தீர்ணங்களில் டவுன் பிளானிங் ஸ்கீம்களை தயார் செய்யவேண்டி மதராஸ் டவுன் பிளானிங் ஆக்ட் 10 (1) வது பிரிவின்கீழ் விளம்பரம் பிரசுரிக்கத்தீர்மானிக்கிறார்கள்.

2. ஸ்கீமில் சேர்க்க பிரேரேபித்திருக்கும்விஸ்தீரணத்தின்பிளான் காப்பி ஒன்றை ("எ" படம்) 1—7—32-லிருந்து 60 நாள் வரைக்கும் முனிசிபல் ஆபீஸ் நேரங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

3. பிரரேபிக்கப்பட்டஸ்கீமினால்பாதகம்ஏற்படும்என்று நினைக்கிற எந்த நபரும் பிரேரேபிக்கப்பட்டிருக்கிற ஸ்கீம் விஷயமாக 1—9—32க்குள் தங்களுடைய ஆக்ஷேபணைகளையோ, அல்லது அபிப்பிராயங்களையோ எழுத்து மூலியமாய சேர்மன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

ஈரோடு முனிசிபல் ஆபீஸ், 13—6—32. (ஒப்பம்) K. A. Sheik Dawood, Chairman.

வைதீக சின்னமா? மாட்டு மலமா?

(என். டி. முத்துசாமி)

யாரை ஐயா இப்படிச் சொல்லுகிறீர்கள்? என்றால், ஐயா, ஐயா நீர் கோபிக்க வேண்டாம்! உம்மைப்போன்ற உண்மை அறிவாளர்களை யான் சொல்லவில்லை! பின் யாரை சொல்லுகின்றீர்கள் என்றால், தன் அறிவைத் தவிரவிட்டு குருவின் அறிவை கும்பிட்டு வாங்கின குருடர்களுக்குத் தான் சொல்லுகின்றேன்! என்? குருவின் அறிவை கும்பிட்டு வாங்கினால் என்ன? அதற்காக என் அவர்களை குருடர்கள் என்று சொல்லவேண்டும்? என்றால், இல்லை ஐயா அவரை மட்டுமா சொல்லுகின்றேன்? அந்தகுருவென்று சொல்லிக்கொள்ளும் குருடனையும்தான் சொல்லுகின்றேன் என்கின்றேன். ஐயா, நீர் குருவை அப்படி பேசாதீர்! நீர் பாடசாலையில் வாசிக்கும்போது மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வாசித்ததை மறந்துவிட்டீரா? என்றால், நான் மறக்கவில்லை, ஆனால் மாதா பிதாவைவிட குருவைதான் சதா ஞாபகத்தில்வைத்திருப்பேன் என்கின்றேன், என் அவரைமட்டும் சதா ஞாபகத்தில் வைத்திருப்பீர்? என்றால் எங்கள் மூதாதையருடைய குரு ஒருவர் வந்தார். அவரைக்கண்டதும் எங்கள் மூதாதையார் அவர் பாதத்தில் விழுந்து அதிகநேரம் தூங்கியவர் தன் அலுப்பை ஆற்றுவது போல் தங்கள் கரங்களை நீட்டியும் மடக்கியும் எழுந்தார்கள். உடனே குருதான் கொண்டுவந்திருந்த சுட்ட சாணத்தை கொடுத்தார். அதைவாங்கி அவர்கள் தங்கள் மண்டையில் பலமாக பட்டை அடித்துக் கொண்டார்கள். பின்பு அவர்களுக்கு சில பொய் நிறைந்த புராணக் கதைகளை சொல்லி பின்பு

> ஆபத்துக்குதவாபிள்ளை அரும்
> பசிக்குதவா அன்னம்,
> தாகத்தைத்தீராத்தண்ணீர்
> தரித்திரமறியா பெண்டிர்,
> கோபத்தை அடக்கா வேந்தன்
> குருமொழி கொள்ளாச்சீடன்
> பாபத்தைத்தீராத்தீர்த்தம்
> பயனில்லை எழுந்தானே.

என்று சொல்லினதும் உடனே அந்த வைதீகர்கள் எங்களுக்கு தாங்கள் உபதேசம் செய்யவேண்டுமென, அவர் ஒரு ஜோடிக்கு 10 ரூபாய் கொடுத்தால்தான் உபதேசம் செய்யமுடியும் என்றார். உடனே அவ்வாறே கொடுத்து ஒரு பத்து ஜதைபேர் உபதேசம் கற்றுக்கொண்டார்கள், ஜதை என்பது ஒரு ஆணும் பெண்ணும். பின்பு குரு தனக்கு வரவேண்டிய நூறு ரூபாயையும் பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அன்று முதல் உபதேசம் கற்றுக்கொண்டவர்கள் தாங்கள் போஜனம் செய்யப்போகும் போதெல்லாம் சுத்தமான திரேகத்தில் சுட்டசாணத்தைப்பூசிக்கொள்வார்கள். அவர்களை என் இவ்வாறு தினந்தோறும் சாம்பலால்பட்டை அடிக்கின்றீர்கள்? இதனால் உங்கள் திரேகத்திலுள்ள கீல்பிடிப்பு, கிறுகிறுப்பு, கிறக்கை, வயிற்றுவலி, வாந்தி, வயிற்றுப்பல் எதற்காவது அனுகூலம் உண்டா என்றால் ஐயோ அதுவிந்த பயனுமில்லையே என்கிறார்கள். அப்படிபயன்ற்ற காரியத்தை என் செய்கிறீர்கள் என்றால் அதற்கு அவர்கள் எங்கள் குரு இதை ஒருபோதும் விடப்படாது அப்படி விட்டால் நரகத்திற்கு நான் போகவேண்டுமென்கிறார்கள், ஆனால் ஒரு தினமும் விடாமல் பூசினால் மோக்ஷத்திற்கு போகலாம் என்கிறார்கள். ஐயா எந்த சாணத்தை பூசினால் மோக்ஷத்திற்கு போகலாம். என்றால் பசுவின் சாணந்தான் சிறந்ததென்கிறார்கள், இதிலிருந்து இதை ஆராய்ந்து பாருங்கள்.

நம்மைப் பெற்றமாதாவோ எவ்வளவு ஆசையுடன் நம்மைப்பெற்றாள்? பின்பு நம் பசி அறிந்து பாலூட்டினாள், நமக்கு வேண்டிய உதவிபுரிந்தாள், நாம் கழியும் மல ஜலங்களையும அள்ளினாள்? நம்மை இவ்வாறு காப்பாற்றியமாதா ஏதோ உடல் நலிவினாலோ, அல்லது வயது முதிர்ந்த காலத்திலோ, அல்லது நடக்கசக்தியற்ற காலத்திலோ, அவர்கள் இருக்கும் இடத்தில் மலஜலம் கழித்துவிட்டால் அதை அப்புறப்படுத்தாமல் அவர்களை மிக மிக இழிவாக நினைத்தும் சொல்லியும்வைகிறார்கள். நம்மை காப்பாற்றிய மாதாவின் மலத்தை அப்புறப்படுத்தினால் அவர்கள் மாண்டாவிடுவார்கள்? அவ்வளவு நன்றிகெட்ட தன்மையுடையவர்கள் மாட்டின் மலத்தை என் மண்டையில் பூசுகிறார்கள்? இவர்களுக்குமாதாவைவிட மாடு செய்த நன்றி என்ன? இவர்கள் தக்க பருவமடைந்து தானாகவோ அல்லது தாய்தந்தையாலோ, தேடிய மாட்டிற்குப்புல்லும் பிண்ணாக்கும் கொடுத்து அதனால் கிடைக்கும்பாலை அருந்துகிறார்கள். இதிலிருந்து மாடு இவர்களை காப்பாற்றியதா? பெற்ற மாதா இவர்களை காப்பாற்றினாளா? இதையோசித்துப்பாருங்கள்! இவ்வாறு நன்றிகெட்டதனத்தால் நாசமடைவதற்குக் காரணமென்ன? இதற்கெல்லாம் காரணம் குருவான குருடன் சொன்னதல்லவா? நீங்கள் மாட்டின் மலத்தை பூசினால் மோக்ஷத்திற்கா போவீர்கள்? இல்லை, இல்லை மோசத்திற்குத்தான் போவீர்கள்! அப்படி நீங்கள் மோக்ஷத்திற்கு போவது உண்மையானால் நீங்கள் தினந்தோறும் அடிக்கும்பட்டையில் என் உங்களுடைய நோய் கூடத் தீரவில்லை? இதை அறிந்தால் மோக்ஷமென்பது மோசமென்றுணருங்கள்! நம்மை மாட்டின்சாணி மோக்ஷத்திற்கு ஏற்றிக்கொண்டு போவது உண்மையானால் அயல் ஊருக்குப்போக அன்னியநாட்டார்என்ஜின்கள் பூட்டிய வண்டியில் என் ஏறவேண்டும்? நம் குருசொன்னபடி சுட்ட சாணத்தை மூட்டையாகக் கட்டி அந்த மூட்டையின்மீது ஏறிக்கொண்டால் நாம் குளித்த இடத்திற்கு அது நம்மைக்கொண்டுபோய் சேர்த்துவிடாதோ? இதை உண்மையாக ஆராய்ச்சி செய்துபாருங்கள்! இதை ஆராய்ச்சிசெய்யச்செய்யதான் குருவின் மூடத்தனத்தை உணர்ந்து வியப்படைகின்றேன்! இதனால்தான் குருவை யான் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருப்பேன் என்று சொன்னேன்.

நண்பர்களே சுட்ட சாணத்தினால் மனிதர் அடையும் துன்பத்தை சொல்லவும் வேண்டுமோ? அதனால் வரும் துன்பங்கள், அந்த சுட்டசாணத்தை யார் பூசுவது? பார்ப்பான் பூசுவதா? பறையன் பூசுவதா? சைவன் பூசுவதா? சாம்பான் பூசுவதா? இந்தக் கடவுளுக்குரியதா? மகமதியக் கடவுளுக்குரியதா? வீரனுக்குரியதா? சக்கிலி வீரனுக்குரியதா? திருப்பதிக்குரியதா? திருவண்ணாமலைக்குரியதா? அந்த சுட்ட சாணியை முதலில் யாருக்குக்கொடுப்பது? சக்கிலிக்குக் கொடுப்பதா? உடையானுக்கு கொடுப்பதா? நாவிடையனுக்கு கொடுப்பதா? நாட்டானுக்கு கொடுப்பதா? கோட்டானுக்கு கொடுப்பதா? ரெட்டிக்கு கொடுப்பதா? மட்டிக்கு கொடுப்பதா? கொடுத்தவுடன் தலையில் பூசுவதா? காலில் பூசுவதா? முதுகில் பூசுவதா? முழங்காலில் பூசுவதா? பூசினவுடன், நீரில் கையை கழுவுவதா? நிலத்தில் துடைப்பதா? நீரில் கழுவினால் அந்நீரை, கூரையில் ஊற்றுவதா? குடித்து விடுவதா? பறையன் பூசினால் பல் உதிருமா? கள்ளன் பூசினால் கள் கெட்டுப்போகுமா? என இந்த வீணான பேச்சைப் பேசிப் பேசி, இந்த வீணான சாணத்திற்காக சண்டைசெய்வோர் எத்தனை பேர்? மண்டை உடைவோர் எத்தனை பேர்? எனப்பா இவ்வளவு கஷ்டம்! அந்த சுட்ட சாணி உங்களை மோக்ஷத்துக்கு கொண்டுபோவது உண்மையானால் நீங்கள் அந்தச் சாணியால் என் இவ்வளவு துன்படையவேண்டும்? உண்மையில் அந்த சாணி உங்களை மோக்ஷத்திற்கு கொண்டுபோவதல்ல. அப்படி நம்பி அது உங்களை மோக்ஷத்திற்கு கொண்டுபோகும் என்று அதை மண்டையில் பூச பூச அது உங்களை மாளாத மோசத்திற்குத் தான் கொண்டுபோகும் என்பதை நிச்சயமாய் சொல்லுவேன். நண்பர்களே, சாணியை நம்பினோர் சபலமடைவார், கல்லை நம்பினோர் தொல்லை அடைவார், என்பதை ஞாபகத்தில்வைத்து குருட்டுத்தனத்தை குடியோட்டுங்கள், முட்டாள்தனத்தை முடுக்கிவிடுங்கள் என்று நான் சொல்லுகின்றேன்.

விழுப்புரத்தில் பார்ப்பனர் ஒழிந்த திருமணம்.

சென்ற 1932ம் வருஷம் ஜூன் மாதம் 12ந்தேதி விழுப்புரம் பென்ஷன் சிவில்கோர்ட் அமீனாவும், முனிசிபல்சானிடரி மேஸ்திரியுமான திருவாளர் நாராயணசாமிநாயக்கர் அவர்கள் குமாரர் திருவளர்ச் செல்வன் கலிவரதநாயக்கருக்கும், விழுப்புரம் திருவாளர் நடேசநாயக்கர் அவர்கள் செல்வப்புதல்வி திருவளர்ச் செல்வி கன்னம்மாளுக்கும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

சுயமரியாதை இளைஞர்சங்கத்தின் மூன்றாவது கூட்டம் இரவிபுதூர் சண்முகானந்த வாசகசாலையில் தோழர். வள்ளிநாயகம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோழர். எஸ். கிருஷ்ணன், தோழர். எஸ். சுடலைமுத்து முதலியவர்கள் பேசியபிறகு தலைவரின் முடிவுரையின் பின் காரியதரிசியின் நன்றி கூறலுடன் கூட்டம் 3-30 மணிக்கு முடிவுற்றது. தோழர். எஸ். கிருஷ்ணன் முதலியோர் இரவிபுதூர் வாசகசாலையில் நடந்த சிற்றுண்டிவிருந்து கழித்த பின் அடுத்த நாள் காலை ஊர் போயினர். ஒரு நிருபர்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தாலும் மனிதர்கள் பாடுவதைப் போல் திருப்பபாடுகிறது ஆச்சரியமல்லவா? இதை உண்மையில் நம் நாட்டவர்கள் கண்டுபிடித்துச்செய்திருப்பார்களாயின் இதற்கும் ஒரு பேயையோ, குட்டிச்சாத்தானையோ அல்லது தெய்வத்தையோ காரணமாக் கிருப்பார்களென்பதற்குச்சந்தேகமில்லை.

பேய்களுண்டெனவும் அவற்றினால்பல கொடுமைகளுண்டெனவும் சாதிக்கவேண்டி நயவஞ்சகர்களாகிய சில கட்டு கதைகள் பலவற்றை பண்டைய நூல்களுள்ளும் புகுத்தி எழுதியிருக்கின்றனர். நமதுநாட்டில் இப்படிப்பேய்களின் மூடநம்பிக்கையால் பலகுடும்பங்கள் துன்புறுகின்றன. பணநஷ்டங்கள் பலநேரிடுகின்றன. நயவஞ்சகர்களாகிய வேஷதாரிகளின் பகற்கொள்ளைக்குச் சாதனமேற்பட்டது. நம்மவர்களுக்குத் தைரியமும், உற்சாகமும் போய்பயங்காளித்தனமுண்டாயிற்று. வாசகர்களே பேய்என்னும் நயவஞ்சகத்திற்கு ஏமாறுதீர்கள்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

தறிந்த போது எனக்கேற்பட்ட திகைப்பால் அப்படியே ஸ்தம்பித்துப் போனேன்! விஷயம் என்னவெனில் நான் அமெரிக்கா கண்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்த காலத்தில் இங்கு நடந்த மாறுதல்களொன்றும் எனக்குத் தெரியாது. அந்த மாறுதல்களில் மகத்தானதெதுவெனில், 'காங்கிரசார் எப்படியோ வெள்ளைக்காரனை மூட்டை முடிச்சுகள், பெண்டு பிள்ளைகளுடன் இந்நாட்டை விட்டுத்துறத்தி விட்டு சுயராஜ்யம் ஸ்தாபித்திருக்கிறார்களென்பதும், அதற்கு காந்திதான் அரசராக முடி சூட்டப்பட்டிருக்கிறார். அவர் மகாவிஷ்ணுவின் அவதாரம் தான் என நம்பப் படுகிறது; நாஸ்திகம் என்பது அடியோடு மாண்டுபோய் - மனுதர்ம ராஜியம்--இராமராஜ்யமாக எம்பெருமான்காந்தியடிகளால் ஆளப்பட்டுவருகிறது' என்பதுவுமே யாகும்!—நான் மேலே விவரித்துள்ள ஊர்வலத்தில் வருணாச்சிரம தர்மத்தின் சிறப்புகள் ஒருவாறு விளங்குகின்றனவல்லவா?

இதையறிந்தவுடன் எனக்குச் சரியாக மூச்சுக்கூட விட முடியவில்லை. எனது நன் மதிப்பிற்குரிய எனது இயக்க தோழர்களின், கதி யாதாயிற்றோ என எண்ணிய என் மனம் பதைபதைத்தது! பைத்தியம் பிடித்தவன் போல் அங்குமிங்கும் ஓடினேன். விபரமாகச் செய்தி தெரிவிக்க யாரையும் அங்கு நான் காணவில்லையாதலால்; அடுத்த தெருவிலிருக்கும் சகோதரி நீலாவதியார் வீட்டிற்கு ஓடினேன். போகிறவழியில் நான் கண்ட இரண்டொரு ருசிகரமான விஷயங்களை உங்களுக்குக் கூறாமல் போக என் மனம் இசையவில்லை. சற்றுகேட்டு விடுங்கள்!—அந்த வீதியில் எங்கு நோக்கினும், 'ஹே, ஏஹ ஹோ, ஹோ ஹே, ஹே,' என்ற இசையுடன் வரட்டுத்தவளைகள் கத்துவது போன்று வேத பாராயணம் பண்ணும் மாணவர்களின் சப்தம் தான் பிரமாதமாகவிருந்தது! தெருவில் ஆண் பிள்ளைகளைத் தவிர ஒரு பெண் பிள்ளையின் நடமாட்டத்தைக்கூட காணமுடியவில்லை. பெண்கள் அவர்களுக் குரிய நாணம், அச்சம், மடம், பயிர்ப்பென்னும் நால்வகைக் குணங்களையும் காத்துக் கொள்ளும் பொருட்டுவீட்டு அடுப்பங்கரைகளிலேயே இருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறார்களென்றும், ஜன்னல் வழியாகவேனும்எட்டி வீதியில் போவோர் வருவோரைப் பார்த்து விடுவதால் கூட கற்பு கெட்டு விடுமாதலால் வீடுகளுக்கு ஜன்னலே வைப்பது கிடையாதென்றும் பின்னர் அறிந்து கொண்டேன். ஆண் பிள்ளைகளில் கூட நண்பர்களான, ஜான், ஆரோக்கியசாமி, அந்தோணிமுத்து, கருப்பன், மாசிலாமணி முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பு சகோதரர்களில் ஒருவரைக் கூடக் காணோம்! என்ன அதிசயமென எண்ணமிட்டுக் கொண்டே செல்கையில், அங்கோர் பெரிய வீட்டின் முகப்பில், 'மகா-ா-ா-ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் அன்ன சத்திரம்' என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருந்தது உடனே என் வயிற்றிலுங்கூட பசி உண்டாவது போல் தெரிந்தது- மறுபடி நிமிர்ந்து பார்த்தேன். மற்றொரு போர்டு பலகை தொங்கிக் கொண்டிருந்தது அதில் 'பிராமணர்களுக்கு மட்டும் சாப்பாடு போடப்படும்.' என அதை விடப் பெரிய கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருந்ததானது என் கண்களில் 'சுரீர்' எனப்பட்டது. வாயைப் பிளந்த வண்ணம் இரண்டடி தூரம் சென்றேன்.

அங்கோரிடத்தில் 'மஹாராஜா இலவசப் பாடசாலை' என்ற போர்டு காணப்பட்டது. சற்று நின்றேன் ஓர் உபாத்தியாயர் பெரியதுவாதலை நாமத்துடன் காணப்பட்டார். உயர்ந்த ஆசனங்களில் பிராமணப் பிள்ளைகளும், அதை விடச் சற்றுத் தாழ்ந்த ஆசனங்களில் க்ஷத்திரியப் பிள்ளைகளும். இன்னும் தாழ்ந்த பலகைகளில் வைசியப் பிள்ளைகளும், கடைசியில் வெறுங் கட்டாந்தரையில் சற்சூத்திர பிள்ளைகளுமாக வர்ணாச்சிரம தர்மப்படி உட்கார வைக்கப்பட்டிருந்தனர். 'இந்தப் பள்ளிக்கூடத்தில் ஆதிதிராவிடப் பிள்ளைகள் கிடையாதோ?! என என்னைத் தானே தெரியாத்தனமாய் வாய் விட்டுக் கேட்டு விட்டேன். அவ்வளவு தான் வந்தது அனர்த்தம்! நான் கூறியது ஆசிரியப் பிரபுவின் காதில் என்ன விதமாகத் தைத்ததோ நானறியேன். ஓர் பார்வை பார்த்து 'யாரடா அவன் நீசப்பதர்' என்று உறுமினார். அதற்குள்ளாக, அங்கோர் மூலையில் உட்கார்ந்த வண்ணம் உறங்கிக் கொண்டிருந்த அரசாங்கக் காவலன் ஒருவன் கையில் கயிருடன், என்னைப் பிடித்துக் கட்ட ஓடி வந்தான். ஆபத்தை உணர்ந்து கொண்ட நான் 'அம்மாடி' எனக்குடுமியைக் கையில் பிடித்துக் கொண்டு குதிகால் பிடரியில் அடிபட ஆரம்பித்த ஓட்டத்தை சகோதரி நீலாவதியார் வீட்டினுள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்ட பின்னர் தான் நிறுத்தினேன்!—அதென்ன அப்படி ஏளனமாக நகைக்கிறீர்கள்? நான் இப்படி சாமர்த்தியமாகத் தப்பியிராவிட்டால் என் கதி என்னவாயிருக்கும் தெரியுமா? (பின்னால் தெரிந்து கொள்வீர்கள்.)

எனது படபடப்பையும், மேல்மூச்சையும் பார்த்தவுடன் அவ்வீட்டிலிருந்தோர் நடுங்கினர். பின்னர் சகோதரி நீலாவதியார் அருகில் வந்தார். அதன்பின்னர் தான் எனக்கு மூச்சுவிட முடிந்தது! சகோதரியார் என்னைநோக்கி "அமெரிக்காவிலிருந்து இப்பொழுதுதான் வந்தீர்களோ? என்று கேட்டார். பதிலாக நான் ஆம்! சற்று முன்னர்தான் வந்தேன், அதிருக்கட்டும் இது வெல்லாம் என்னமாறுபாடுகள்? இராமராஜ்யம்வந்துவிட்டதாமே! நம்மவர்கள் என்னவானார்கள்? அவர் எங்கே? இவர் எங்கே? என்று மட மடவெனப்பல கேள்விகளைப் போட்டேன். சகோதரியார் ஒன்றுக்கும்பதில் கூறாமல் பெருமூச்சுடன் என்னை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றார்கள். அங்கு சென்றதும் இங்குள்ள செய்திகள் ஒன்றும் நீங்களறியீர்கள் போலும்? என்றார். நான் தெரியாதென்று தலையை அசைத்தேன் பின்னர் இப்பொழுது சட்டமாகவிருக்கும் மனுதர்மம் அக்கிரமமானது என, நமது தோழர்கள் இராமசாமியும், இராமநாதனும், நேர்முகமாக் எதிர்த்துக்கூறினார்கள், என்று சகோதரியார் கூறியதும் அப்புறம்? என்று அலறிக்கொண்டு கேட்டேன். அப்புறமென்ன! அதோபாருங்கள் என்று கூறியவண்ணம் ஜன்னலின் வழியாய் ஓர்பக்கத்தைக் காட்டினார் சகோதரியார். அப்பக்கமாகப் பார்த்தேன். ஆ! என்மேல் சிலிர்த்தது, வியர்வைகொட்டிற்று, சர்வாங்கமும் வெட வெடவென ஆடிற்று, நிற்கச்சக்தியற்று நிலத்தில்சாய்ந்தேன்!

என்னை அவ்வித நிலைமைக்குக் கொண்டு வரத்தக்க எதை நான் அங்குகண்டேனென எண்ணுகிறீர்கள்? ஐயோ! அதை எவ்வாறு கூறுவேன்; நாவெழும்ப மாட்டேனென்கிறதே! எப்படியேனும் கூறிவிடுகிறேன்; உங்கள் மனதைத்தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். நான்பார்த்த இடத்தில் இரண்டு கழுமரங்கள் நிறுத்தப்பட்டிருந்தன கழுமரமென்றால். என்னவெனத்தெரியுமா? கூரிய ஈட்டி போன்ற பெரிய ஆயுதமொன்றை பூமியில் நட்டு வைத்திருக்கும்கழுபோடுவேண்டிய மனிதனை அச்சூலாயுதத்தின் மேல் உட்காரவைத்து ஆசனத்துவாரத்தின்வழியாய் அவ்வீட்டிமுனை உடலிற்பாய்ந்து சிரசின் வழியாய் வெளிப்படியாக மனிதனை அதில் அழுத்தி விடுவதுதான் கழுவேற்றுதல் என்பதாகும். இந்தபயங்கரமான கழுமரத்தில் நமது இயக்கப்பெரியார்களான இராமசாமியும், இராமநாதனும் போடப்பட்டிருப்பதை நான் என்கண்களால் கண்டால் நான் அவ்விதநிலைமையை அடைந்தது ஆச்சரியமாகுமா? அத்தோழர்களதுஉயிர் இன்னும் போகவில்லை அச்சமயத்தில் இரண்டு பரம தடியர்கள் அவ்விருவரது நாவையும் கத்திகொண்டு அறுத்தார்கள். ஆ! என்ன கோரமான காட்சி! என்ன கோரமான காட்சி!!

திரும்பிச் சகோதரியாரைப் பார்த்தேன் அவரது முகத்தில் ஓர்வித வீரம் ஜொலித்துக் கொண்டிருந்ததைக்கண்டேன். அவர் ஒன்றும் பேசாது என்னை அழைத்துக்கொண்டு வெளியில் வந்தார். அருகிலிருந்தஓர். வீட்டினுள் நுழைந்தோம். அங்கு தோழர் முருகப்பாபடுக்கையில் படுத்திருந்தார். அவரது காதுகளில் ஈயத்தையும், அரக்கையும் உருக்கி ஊற்றியிருந்தது! ஏன்? எவனோ ஓர் பார்ப்பான் வேதமோதுவதைக் கேட்டு விட்டதுடன் அவனையும் திட்டினாராம்; அதற்காக மனுநீதிப்படி அவருக்குஅத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. வெளியில் வந்தோம்.

(தொடரும்)

[8ம் பக்கத்தொடர்ச்சி]

மதப்பிரச்சினையல்லவோ காரணம். மதப்பயித்தியம் நமக்கு இல்லாவிட்டால், கனம் மக்டொனல்டு அவர்கள், உங்களுக்குள் ஒற்றுமையாக வாருங்கள் இல்லையேல் எங்கள் முடிவுக்குக் கட்டுப்படுங்கள் என்று சொல்லி யிருப்பாரா! இத்தகைய மானங்கெட்ட தன்மையில் நாம் சிக்கும் போது பூரண சுயேச்சை கேட்பது ஆற்றுநீரை அடிமடியில் கட்ட ஆசிப்பதையன்றோ ஒக்கும்.

ஆனால் சுயராஜ்யம் கிடைத்து எங்கள் ஆளுகைக்கு வந்து விட்டால், நாங்கள் யாவற்றையும் சரிப்படுத்திக் கொள்வோமென்று தோழர் காந்தியாருள்ளிட்ட சில தலைவர்கள் சொல்லுகின்றார்கள். இது ஒரு அறிவுத்தனமான பொறுப்புவாய்ந்த செயலாகுமா!

இவ்வாறு தங்கள் ஆதிக்கத்திற்கு வந்த பிறகு ஒழுங்கு செய்து கொள்வதை ஏன் இப்பொழுதே செய்து கொள்ளக்கூடாது! அவ்வாறு செய்து கொள்ள எந்த இங்கிலீஷ் அரசாங்கம் இவர்கள் கையைப்பிடித்துக்கொண்டது. எந்த இங்கிலீஷ் அரசாங்கம் இவர்கள் மதத்தையொழிக்கவேண்டாமென்றும், ஜாதியையொழிக்கவேண்டாமென்றும் தடைப்படுத்தினது. இம்மாதிரி சூழுரை கூறி மக்களை ஏமாற்றும்; தலைவர்களைப்பின்பற்றி, அடியும், உதையும்பட்டு ஜெயிலுக்குப் போனால், நம்மைப்போன்ற புத்திசாலிகள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள்.

அன்பர்களே! வீணைககாங்கிரஸ்,காங்கிரஸ்என்றுஅதனால் பிழைக்கும் போலித்தலைவர்கள் பேச்சைக்கேட்டு, பூரணசுயேச்சை, பூரணசுயேச்சைஎன்று வெட்கங்கெட்ட வார்த்தையைப்பேசி அதனால் படாத பாடு பட்டு ஜெயிலுக்கும் போகாதீர்கள். நாமும் உலகத்தாரைப்போல் சுயேச்சை பெற்று நாட்டையாளவேண்டுமானால், மதத்தையொழிப்போம். ஜாதியைப்போக்குவோம், அறிவை விசாலப்படுத்துவோம், ஆண்மையோடு இராணுவப்பயிற்சி பயிலுவோம். அதனால் வரும் எத்தகைய துன்பங்களையும் பொருட்படுத்தாது ஒற்றுமையை நிலை நாட்டுவோம். 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்' என்னும் பாரதியார் சொற்படி செயலில் காட்டுவோம். இவற்றின் முடிவு கண்ட மாத்திரத்தில் வெள்ளைக்காரர்களை நாம் வேண்டிக்கொண்டாலும்அவர்கள் நம் நாட்டில் இருக்கவேமாட்டார்கள். அக்காலத்தில் நாம் கேக்கும் பூரண சுயேச்சை நாம் கேட்க்காமலே நமக்கு கொடுப்பார்கள். நாமும் ஒற்றுமையுடனும், ஒழுங்குடனும், அறிவுடனும் அவ்வாட்சியை நடததலாம். இதைத்தான் நமது சுயமரியாதை இயக்கம் நமக்குப்போதிக்கின்றன.

தென்னிந்திய மார்த்தீன் லூதர்.

(எம். என். கோவிந்தசாமி)

உலகத்திலே மனித சமூகத்தின்வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பது மதம்தான். முன்னேற்றத்தின் முதற்படியில் காலைவைக்கும் போதே மதம் என்னும் பேய் தான்காலை இழுத்துதள்ளி விடுகிறது. இப்பேயை எதிர்க்கத்துணிவு கொண்டவர்களுக்குத்தான் மேலே செல்லுவதற்குச் சாத்தியப்படும். இன்றைக்கு நாம் ஐரோப்பிய சரித்திரங்களை ஆராயப்புகுவோமானால் அங்குமார்டின்லூதர் [Martin luther] ஸ்விங்கிளி [Zwingli] கால்வின் [Calvin] விக்ளிப் [wycliffe] ஜான்ஹஸ் [Johnhuss] முதலானவர்கள் கிறிஸ்துமதத்தை எதிர்த்து அதிலுள்ள ஊழல்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் எடுத்துக்கூறியதின் பிறகுதான் அங்குள்ளவர்களுக்கு சுயேச்சை யுணர்ச்சிஏற்பட்டு நாளடைவில் தங்கள் உரிமைகளைநிலைநாட்டினார்கள். அதுவரையில் அதாவது கிறிஸ்து மதத்திற்கு எதிர்ப்பாகிய [Protestant] மதம் ஆரம்பிக்கும் வரையில் கிறிஷ்துவிக்குப்பின் சுமார் 1500 ஆண்டுகள் வரையிலும் ஐரோப்பாவிலுள்ள எல்லாநாடுகளும் தங்கள் உரிமையிழந்து நாடுசீர்கேடான முறையில் இருந்து வந்தது.

மதஎதிர்ப்புகள் தோன்றிசுமார் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்குள்தான் எல்லாநாடுகளும் சுயேச்சைப் பெற்றிருக்கின்றன. ஆகவே மதம் என்னும் பெயரால் நம்நாட்டில் மக்கள்படும் துயரம் கொஞ்சமல்ல. மதம் என்னும் சட்டதிட்டங்களை மனிதனுடைய வாழ்க்கை நலத்திற்காக மனிதனே ஏற்படுத்திக்கொண்டது என்பதையும், அதைசமயோஜிதம் போல் காலத்திற்கு ஏற்றவாறு திருத்தியோ, புதுப்பித்தோ அமைத்துக்கொள்ளலாம் என்பதையும் அறியாத மனிதஜென்மங்கள் இன்னும் இருக்கிறார்களென்று எண்ணும்போதுதான் நமக்கு வருத்தமாக இருக்கிறது. பண்டுதொட்டு இன்றுவரையில் நம்நாட்டை பாழ்படுத்தியதுமதமென்னும் பேய்தான் இப்பேயைஎதிர்ப்பதற்குப் பலர்தோன்றி அதை எதிர்த்து வெற்றிக்கொடியை நாட்டாமல் விட்டுச்சென்றவர்கள் சிலர். அதற்குக்காரணம் அக்காலத்திலுள்ள அரசாங்கமும், மக்கள் போதியஉணர்ச்சியின்றி இருந்ததேயாகும். ஆனால் சென்ற எழு, எட்டு ஆண்டுகளாக இவ்வியக்கம் அறிவிச்சுடர் விட்டு மக்களின் மனதில் எரிந்துகொண்டிருக்கிறது என்பதைஎவரும் மறுக்க முடியாது. இவ்வியக்கத்தை நினைக்கும்போது இதைத்தோற்றுவித்த தென்இந்தியா மார்த்தீன்லூதரான நமது மாபெருந்தலைவர் ஈ. வெ. ரா. வைப்போற்றுமலிருக்க முடியாது. இவர்பெயரால் நடத்தப்படும் பத்திரிகையாகிய "குடியாசு" ஒருகுடியரசாகவே விளங்குகிறது. என்பதற்கு ஐயமில்லை.

ஆதலின் எமது அருமைத்தோழர்களே ஒருசமூகமோ, அல்லதுநாடோ முன்னேற்றம் பெறவேண்டுமாயின் அது இளைஞர்களின் இயக்கத்தால் தான் முடிவுபெறும். சீனம், துருக்கி ஜப்பான், இட்டாலி முதலிய தேசங்கள் அங்நாட்டின் இளைஞர்களுடைய விடாமுயற்சியாலே முன்னேற்றமடைந்தன. தேசவிடுதலைக்கோ, சமூகவிடுதலைக்கோ முயற்சிக்கும் வாலிபர்கள்சத்தியம், தூய்மை, விடாமுயற்சி, தியாகம் முதலியவற்றை யுடையவர்களாக இருக்கவேண்டும். அளவிலாக் கஷ்டங்களையும்அமிர்தமாகக்கொள்ள வேண்டும்.

சீனதேசத்துக் குடியரசுத்தலைவராயிருந்த சன்யாட்சன் சீனத்தின்விடுதலைக்காக அடைந்துள்ள துன்பங்களை அளவிட்டுரைக்க முடியது. துருக்கையில் கமால்பாட்சா எடுத்துக்கொண்ட முயற்சியையும், தியாகத்தையும் இன்று துருக்கியடைந்துள்ள சுதந்தரத்தையும் நாம் பத்திரிகையின் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆகவே தியாகமின்றி எந்நாடும் எந்த சமூகமும் முன்னேற்றம்பெறாது என்பது நிச்சயம். ஜர்மனியர் பிறநாடுகளைக் கைக்கொள்ள ஏராளமான பொருள்களையும், உயிர்களையும் தியாகஞ் செய்தனர். இவ்விதமாக ஒவ்வொருநாடும், ஒவ்வொருசமூகமும் தங்கள் உரிமையையும் சுதந்தரத்தையும் நிலைநாட்ட எவ்வளவோ கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவித்தார்கள். எக்காரியத்தை செய்வதற்கும் மனஉறுதிவேண்டும். ஊக்கத்துடன் யாவரும் ஒன்றுகூடிஒரே நிலையினின்று உழைக்க வேண்டும். ஆங்காங்கு இளைஞர்களின் இயக்கங்கள் இருக்கவேண்டும்.

பலஇடங்களுக்கும் சென்று மக்களுக்கு நல்லுணர்வு ஊட்டவேண்டும்.

அவர்களின் அடிமை விலங்கைஉடைத்தெரியவேண்டும் அன்றே நாம் விடுதலை பெறுங்காலம்.

மதிப்புரை.

திருக்குறள் ஆராய்ச்சியும், ஜைனசமய சித்தாந்த விளக்கமும்.

இந்த ஆராய்ச்சி நூல் காஞ்சீபுரம் தி. அ. அனந்தநாத நயினார் அவர்களால் எழுதப்பெற்றது. இப்புத்தகம் எழுதியதின் நோக்கம் திருக்குறள் ஆசிரியர், ஜைன சமயத்தைச்சேர்ந்தவர்என்பதும், திருக்குறளின் கருத்துக்கள்ஜைன சமயத்தின் கோட்பாடுகளை உடையது என்பதுமேயாகும். திருவள்ளுவர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவர் என்னும் வாதம் வெகுநாளாகவே தமிழ் நாட்டில் ஒரு சாராரிடை இருந்து வந்ததாகும். இதில் திருக்குறளில் உள்ள பல பாடல்கள் ஜைன சமயக்கருத்தை விளக்குவதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சரிதமும் வேறுவிதமாகக்குறிக்கப்படுகிறது. தற்போது திருவள்ளுவரைப்பற்றி வழங்கிவரும் கதை ஆதாரமற்ற பொய்க்கதையென்பதை யாரும் அறிவார்கள். ஆனால் இந்நூலாசிரியரால் எடுத்துக்காட்டப்படும் கதையும் ஒரு புராணக்கதையாகவே காணப்படுகிறது. இன்னும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் செய்திருக்கும் மாறுபாடான உரைகளை எடுத்துக்காட்டியிருப்பதும் திருக்குறள் அதிகார அமைப்பும், மாறுதல்களும் பரிமேலழகரால் செய்யப்பட்டன என்று கூறுவதும் குறிப்பிடத்தகுந்ததாகும். உண்மையில், திருவள்ளுவர் எந்தசமயத்தைச்சேர்ந்தவராயினும் இந்நூலாசிரியர் எழுதியிருக்கும் ஆதாரங்கள் அவர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுவதற்குப்போதுமானதாகும் என்பதே நமது கருத்தாகும்.

இந்நூலாசிரியரைப்போலவே சைவர்களும், வைணவர்களும் புத்தர்களும் திருக்குறள் நூல் தங்கள் மதக் கோட்பாடுகளுக்கு இசைந்ததாயிருக்கிற தென்று காட்டுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு மதத்தினரும் திருவள்ளுவரைத் தமது சமயத்தினர் என்று கூறிக் கொள்ளும்படியான சமரசமான வழியில் திருக்குறளை இயற்றியிருப்பதைப் பாராட்டுவதற்கு தற்போது வெளிவந்திருக்கும் இவ்வாராய்ச்சி நூலும் ஒரு சான்றாகும்.

திருக்குறள் மூட நம்பிக்கைக்கான விஷயங்களையும், பார்ப்பனப்புரட்டுகளையும் போதிக்காத தனித்தமிழ் நூல் என்று சொல்லிக் கொண்டிருக்கும் புலவர்களுக்கு, இந்த ஆராய்ச்சி நூல் ஒரு சூடு கொடுத்தது போல இருக்கிறது. இந்நூலிற் கூறப்படும் ஜைனமயக் கோட்பாடுகளும் ஏறக்குறைய இந்து மதக் கோட்பாடுகளைப் போன்றே, புராணக் கதைகளையும், புரோகிதங்களையும் அவதாரங்களையும், மோட்ச நரகங்களையும், பாவபுண்ணியங்களையும், ஆதாரமாகக் கொண்டுள்ள தென்பதையும், இக்கொள்கைகளை அனுசரிக்கும் நாலே திருக்குறள் என்பதையும் நம்பினால், திருக்குறளின் மேல் தற்போது வைத்திருக்கும் ஒரு மதிப்பும், அன்பும் குறையும் என்பதே நமது அபிப்பிராயமாகும். ஆதலால்பல மதஸ்தர்களாலும்,பலஜாதியினராலும் போற்றப்படும் ஒருநாலைஒருசாதியிலும், ஒரு மதத்திலும் சேர்ந்ததாகக் கீட்டமுயலும் முயற்சியைநாம்போற்றமுடியாது. நிற்க இந்நூலின் நோக்கம் எப்படியானாலும்,ஆராய்ச்சியாளர்களால் படிக்க வேண்டிய ஒரு நூலாகு மென்றே நாம் கூறுவோம். இந்நூலைப் படிப்பதின் மூலம், ஜைனமதக் கோட்பாடுகளை நன்கு உணரமுடியும். ஆகவே மதங்களையும், அவைகளின் புரட்டுக்களையும் கண்டிப்போர்க்கும் துணை செய்யும்.

இந்நூலாசிரியரின், தமிழ் சமஸ்கிருத நூல் ஆராய்ச்சித் திறனையும் இதனால் அறியலாம். இதன் விலை ரூபா 2—0—0 இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்.

தி. ஆதிநயினார்,
21-பாரிஷ் வெங்கடாசல அய்யர் தெரு,ஜி. டி. சென்னை.

தி. அனந்தநாத நயினார்
அண்டு சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை, காஞ்சீபுரம்.

உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனேதேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.
திண்டுக்கல்.

விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்.

கிறிஸ்துவ மக்கட்கோர் எச்சரிக்கை.

(திரிசிபுரம் கே. துரைராஜ்)

பகுத்தறிவியக்கம் தோன்றி ஆண்டுகள் ஏழு கழிந்தன. ஆரம்பகாலத்தில் இயக்கம் தம் முழு உருக் கொண்டு தோன்ருவிடினும், உலகப் பொது விதிக்கேற்ப காலத்தினூடே அது தன் உயரிய கொள்கைகளை மக்களிடையே புகுத்தி மாந்தர் தம் மதியை மாண்புடைத்தாக்கி வருவது கண்கூடு. பார்ப்பனீயத்தை அது தாக்கிய காலை சாதிக்கு நம்மிலும் சமயப் பித்திலும் வைதீகக் கொடுமையிலும் தமக்குமிக்காரில்லை யென மார்தட்டிக் கொண்டும், சமூக அரசியலில் பார்ப்பனர் அடித்த கொள்ளையைத் தாம் அடிக்கலாம் எனக்கருதியும் இவ்வியக்கத்தை நீர் நிறைந்த தடாகத்தே வந்தடையும் பறவைகள் போன்று பார்ப்பனரல்லாதார் பலர் இறுகத்தழுவினர். பிற்கால் இப் புனிதர்கள் தங்கள் வீண் எண்ணங்களுக்குச் சுயமரியாதை உலகில் இடமில்லையெனக் கண்டு அதை விட்டேகினர். இது ஓர் பால் கிடக்க.

இந்து மதத்தின் ஊழல்களை ஒருவாறு மக்கட்கு எடுத்துக்காண்பிக்கையில்பிற மதஸ்தர்களான முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும்பழம் நழுவிபாலில்வீழ்ந்ததெனஇறுமாந்துமதத்தை பரவச் செய்யும் தங்கட்கு இவ்வியக்கம் மதக் கண்காணி போன்றுநின்று இந்து மக்களை தங்கள் மதத்தில் விழ உறு துணை செய்யும் என்றுஎண்ணி அன்னோர்களும் இதை ஆதரிக்க முன் வந்தனர்.

ஆனால் அந்தோ! இறுதியில் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதே போன்று ஏமாற்றமடைந்தனர். தாங்கள் தெளித்த விதைகளெல்லாம் கற்களிலும், முட்களிலும் விழுந்ததாகக் கண்டனர். தம் மனத்தகத்தே கட்டியுள்ள பிரமாண்டமான கோட்டைக்கொத்தளமெல்லாம் இயக்கம் அவ்வப்போது கிளப்பும் வெடி குண்டினுல் துகளாயிடியக் கண்டனர். என் செய்வர்! பாவம்! சு.ம. இயக்கம்என்ன சொல்கிறதென்பதை மதக்கொழுப்படைந்த இவர்கள் கண்களால்காண முடியவில்லை. வேத கோஷம் தொனிக்கு செவிகளால் ஆண்டவன் தியான மேலிட்ட மனதால் நினைக்கக் கூடவில்லை. ஆனால் என்றைக்கேனும் உண்மை வெளிக்கிளம்பப் படுவது ஆச்சரியமில்லையல்லவா அஃதே போன்று இவ்வியக்கம் ஓர் சமதர்ம இயக்கம் என்றும் ஒரு மதத்தின் மாண்பைக் கருதியோ, மற்றொரு மதத்தின் தாழ்வைக் கருதியோ ஒரு சிலரின் இழிவான செயலை பொருட்படுத்தியோ செல்வச் செருக்கைக் கருதியோபணியாற்றவில்லை என்பதையும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும்,அவர் தம் முன்னேற்றத்திற்கும் முரணாக நிற்பவை எவையேனும் சரியே அவை எம்மதமோ, எச்சாதி சமய கோடிகளோ, எப்புராணேதிகாசங்களோ, எக்குரான் கித்தாப்புகளோ, எவ்விவிலிய ஆகம ஏற்பாடுகளோ யாவையாயினும் அவைகளை இப்புவியிலுள்ள மனித உருக்கொண்ட எப்பிராணிக்கும் அஞ்சாது உடலுயிர் ஆவியை உவந்தளித்து மடியச் செய்வதே தொண்டர் தம் கடமை என்பதை உணர்ந்தார்கள். அவ்வளவே! அங்கு மிங்கும் சுற்றி தமக்கே உலைவைக்கத் துடங்கிய வுடன் இதை கைநழுவவிட்டு தம் மத பிரசாரவேலைகளுக்கு ஆக்கம் தேட ஆரம்பித்தனர்.

இஃதிவ்வாறாக சின்னுட்களுக்கு முன் தோழர் குருசாமி எழுதிய 'பரமசிவனுக்கும்' ஏசுவுக்கும் சம்பாஷணை' என்ற கட்டுரையை கண்ணுற்ற திருச்சியிலுள்ள கிறிஸ்துவ சிறப்பாக ஆதிதிராவிட மக்கள் மனக்கொதிப்படைந்ததாகவும் கிறிஸ்துவ உலகிக்கே ஓர்பெரும் இழுக்கேற்பட்டதாகவும் அதற்கு மறுப்பு எழுத வேண்டுமென்று எண்ணியதாகவும் நமக்கு தெரியவந்தது. என்னவேடிக்கை! எனக்கென்றால் ஒன்றும், பிறர்க்கென்றால் பிறிதொன்றுமா? இவர் தம் சேசுநம்பிக்கையும், வேத நம்பிக்கையும் இருந்தவாறு என்னே. நன்று! வெகு நன்று!!

ஏசுகிறிஸ்துவ (குறிப்பாக ஆதி திராவிட) சோதரர்கள் ஏனோ நுங்கட்கு இவ்வெண்ணம் அயலானை கேளிகை செய்வதில் மட்டும் இன்புறும் தாங்கள் தான் சேசுவின் சீடர்களோ சேசுவின்? சுவிசேஷங்களும், அவ்வாறுதான் தமக்குள்ளகுண தோஷங்களை வெளிக்காட்டாது பிறனை தூஷிப்பதைமட்டுமே கொள்கையாக கொள்ளும்படி போதிக்கின்றதோ அப்படி வேதம் சொல்லுமானால் அதையே நீங்களும் வழக்க தர்மமாகக்கொண்டால் இதைவிட பைத்தியக்காரத்தன்மை பிறிதொன்றில்லை எனலாம். தங்கள் மதத்தை இழிவாகக்கருதும்பொழுதுதங்களின் மனம் காரணமின்றி, பொருளின்றி எவ்வாறுதுன்புறுகிறதென்பதை தெரிவிக்கின்றீர்களோ அம்மாதிரியேதான் பிறனுக்கும் (இந்துமதபக்தர்களுக்கும்) தோன்றுமென்ற ஒத்தமனப்பான்மை இல்லாததேனோ

கடவுளன்பர்களின் குருட்டு நம்பிக்கைப்படி பரமபிதா ஒன்றுளதேல் அதை அடையும் ஞானமார்க்கம் ஒன்று உளதேல் அஞ்ஞான இருளைக் கடந்து பரலோகசாம்ராஜ்யத்தை அடையச்செய்வது மதமெனக்கொண்டால் ஆம்மதம் அன்பு மதம் தனிநபருக்குசுயேச்சை மதமென எடுத்தாண்டால் இத்தகையெனவெல்லாம் ஒருங்கேதிரண்டபெருமைஇந்துமதத்திற்கே முதற்கண் உண்டென்பதை பிற சமயவாதிகளே ஒத்துக்கொள்கின்றனர். ஆனல் தற்கால மனித சமூகநிலைக்கு ஒவ்வாத பலமாசுகள் படிந்த அம்மதத்தையே ஒழிக்க சு. ம. காரர்கள் வேலை செய்யும் பொழுதுபுரோகிதப்புரட்டிலும், மூடபக்தியிலும் செம்மறியாட்டுக்கொள்கையிலும் அடிமைத்தன்மையிலும் தீண்டாமையிலும் மதச்சடங்கிலும் பகுத்தறிவிற்கு இடங்கொடாமையிலும் முன்னணியில் நிற்கும் நுங்கள் மதத்தை தாக்காது புறங்காட்டி ஓடுவது பேடிக்கொள்கையல்லவா? தாங்கள் கற்றும் கல்லாதான் செய்கையே தங்களிடம் காண்பதுபற்றி மிகவருந்த வேண்டியிருக்கிறது.

உங்கள் மதம் பரவுவதற்கு காரணமாயிருந்தது மேல்நாடும் அதனின்று இவண் போந்த மதபோதகர்களின் ஊழியமும் என்பதை தாங்கள் அறிவீர்கள். அந்நாட்டில் உள்ள ஸ்பெயின் ரஷியாபோன்ற இடங்களில் தற்போது நடக்கும் மதப் புரட்சிகளை பத்திரிகை உலகத்தில்அறியலாம்.மந்திரசக்தியால்தான் காற்று அடிக்கிறதென்று எண்ணியிருந்த ஆங்கிலேயர் வாழும் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் 18ம் நூற்றுண்டிற்கு முன்னர் மத ஆதிக்கமே தலைதூக்கியாடியது. இந்திய பிராமணர்களைப் போன்று மதக்குருக்களே உண்மையில் நாட்டை ஆண்டனர். தலையாட்டி மன்னர்களெல்லாம் போப்பின் [Pope] லக பதுமைகளாக இலங்கினர். டியூடர் [Tudor] வம்ச அரசர்கள் ஆளுகையில் போம் பிறக்கும், அரசருக்கும் நடந்த வாக்குவாதமே இதற்கு அத்தாட்சி ஆகும். மதக்கிறுக்கர்களான மேரி [Mary] போன்றவர்களால் லேட்டிமர், கிரேன்மெர், ரிட்லிபோன்ற முற்போக்காளர்கள் கொல்லப்பட்டனர். இத்தகைய மதக் கொடுமையை மக்கள் நாளாவட்டத்தில் உணர ஆரம்பித்தனர். லூதர். கால்வின், நாக்ஸ், வெஸ்லி, சின்கின் போன்ற மதசீர்திருத்தவாதிகளுடையவும், வால்டையர் ரூசோ போன்ற மிகதீவிர வாதிகளான அறிஞர்களுடையவும் உணர்ச்சியான பேச்சும், எழுத்தும் மக்களை தட்டி எழுப்பின. தொடர்ந்து பல சமூகப்புரட்சிகள் நடைபெற்றன. அதன் பயனாய் எவான் ஜெலிகல், மெத்தடிஸ்ட் போன்ற சங்களும் பிரஸ் பிடீரியன் போன்ற சங்கங்களும் உண்டாயின. ஆலயந்தொழுவது சாலவும் தீது. அரசியல் வேறு, மதம் வேறு என்ற கொள்கை [voluntary princip e] யுடைய நான்கன்பர்மிஸ்ட் [Nonconfirmist] என்பவர்கள் தோன்றினர்.

ரிஜிஸ்டர் மணமும்அக்காலத்தேவுண்டாயின. மதசம்பந்தமான கட்டாயக்காணிக்கையும், பரிகையும் ஒழிந்தன. இவைபோன்ற பலநிதானமான [Moterale] சமூகமுன்னேற்ற முண்டாகி சமூகத்திற்குபுத்துயிர் அளித்தது. இவ்வாறு 18-ம் நூற்றுண்டில் அடைந்தமாறுதலே பிற்கால மார்க்ஸ், லெனின் போன்றவர்கள் ஆரம்பித்த இயக்கத்திற்கு பெரும் ஆதரவு நல்கியதும் நடைமுறையில் நடைபெற்று வருவது தாங்களறிந்ததே. பாதிரி மார்களும் கூட அத்தகைய மதஒழிப்பார்களுக்குஆசீர்வாதம் செய்தும் வருகின்றார்கள். இதைக்கண்டு நீங்கள் புன்னகைகொள்ளலாம். ஆனலும் அவசியமில்லை. அடித்த காற்று பலதிசை நோக்குதல் சகஜமே. அந்நாள் தங்களுக்கும் அருகாமையில் உள்ளதே என்று சேசுவிற்கு முன் வழியை ஆயத்தம் செய்த யோவான்ஸ் தானகனைப்போன்றும் சு. ம. இயக்கம் இயம்புகின்றது. அதற்கு தாங்கள் செவிசாய்க்கப்போகிறீர்களா ஆயின் இயக்கத்தில் கலந்து உண்மை தெளிந்து பனியாற்றுங்கள். நுங்கள் அறியாமைக்கு பிற்காலத்தில் பார்த்திரா வான் னெனக்கூடுமென இப்பொழுத இயக்கத்தின் சாகபாக எச்சரிக்கை செய்கின்றோம்.

(6ம் பக்கத்தொடர்ச்சி)

தீ மிதிப்போர் அத்தீக்குழியின் மத்தியபாகத்தையடைந்து குறைந்தது ஒரு நிமிஷமாவது இரண்டுகாலையும் சேர்த்துவைத்துக்கொண்டு நிற்க முடியுமா? அப்படி நிற்பார்களா? ஓட்டததில் தீ தகிக்காமல் காப்பாற்றும் கடவுள் நிற்கையில் ஏன் தகிக்காமல் காப்பாற்றக்கூடாது அப்படி நின்று எவ்வித தகிப்புமின்றி வெளியேறுவார்களாயின் அவர்களது தூய்மையான பக்தியையும் அவர்களைக் காப்பாற்றும் தெய்வ சக்தியையும் நம்பலாம்.

சுயமரியாதை நேயர்களுக்குஒன்று நினைப்பூட்ட விரும்புகிறோம் இதிகாச புராணங்களால் வயிறுவளர்க்கும் கூட்டத்தார் எத்தகைய தந்திரமான வழிகளில் பாமா மக்களிடையே கடவுள் சக்தி பரிணமிப்பதாக நம்பும்படி செய்திருக்கின்றனர். இத்தகைய புரட்டுகளையும், அவற்றின் சூழ்ச்சிகளையும் நாம் உடைக்கவேண்டுமாயின் எவ்வளவுபாடுபட வேண்டியிருக்கிறது என்பதை உணருங்கள் அதன் என்பதே யாகும், சகோதரர்களே! நம் நாட்டில் கடவுள் சக்தி பரிணமிப்பதாகச் சொல்லும் ஒவ்வொரு காரியங்களும் இததகைய சூழ்ச்சி நிறைந்ததென்பதை உணருங்கள்,

உணர்ந்து அதை பாமர மக்களுக்குத் தெள்ளந்தெளிய எடுத்துச்சொல்லுங்கள். அதுவே ஒவ்வொரு சுயமரியாதை வீரர்களின் கடமையாகும்.

நம் தென்னாட்டுக்கோவில்களில் மிகுந்த மகிமை பொருந்தியதும் மக்களுக்கு நேருக்குநேர்சாக்ஷியளிப்பதாகச் சொல்லப்படுவதுமான பழனி க்ஷேத்திரத்திற்கு நாம் ஒரு முறை போக நேர்ந்தது. பழனி க்ஷேத்திரத்திற்குப் போகும் பக்தர்கள் கோழிகளையும், சர்ப்பம் மீன் முதலியவைகளையும் துண்டு துண்டாக அறுத்து சமைத்துக்கொண்டு காவடிகளில் வைத்து கட்டிக்கொண்டு ஆட்டபாட்டத்துடன் பழனியையடைந்ததும் அவைகள் உயிர் பெற்றெழுந்து ஆடுவதாகவும், கூவுவதாகவும் மணலை ஓர்பாண்டத்தில் நிறப்பி காவடிகளில் வைத்துகட்டிக்கொண்டுபோனால் அங்கே போனதும் சர்க்கரையாகி விடுவதாகவும் இன்னும் இது போன்ற அறிய செயல்கள் நடப்பதாகவும் கேள்விப்பட்டு காவடி தூக்கிக்கொண்டாடும் பக்தர்கள் கூட்டத்திடையே ஓடிஓடி துருவித்துருவி கண்களை கசக்கிக்கொண்டும் பார்த்து அங்கே ஆண்டவனருளாவது தெய்வ சக்தியாவது வேறு எந்த சக்தியாவது நமது கண்களுக்குத் தோன்றவில்லை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை இதைக் குறித்து நம்முடன்வந்திருந்தஆத்திக நண்பரொருவரைக் கேட்டதில்சந்தேகப்பேர்வழிகளுக்குஆண்டவன் புலப்படமாட்டானென்றும் நம்பினோர்க்கே காக்ஷியளிப்பதாகவும். குழந்தையும், தெய்வமும்கொண்டாடின பக்கமென்றும் இன்னும் இதுபோன்ற ஒப்பமுடியாதநொண்டிச்சாமாதானங்களைச் சொல்லிதப்பித்துக்கொண்டார். ஆஸ்தீக நண்பர்கள், சொல்லும் சமாதானம் இதுவேயாகும்.

நண்பர்களே? யோசித்துப்பாருங்கள் நமது இராஜாங்கம் அரசாக்ஷி நடத்துவதுஎதற்காக மக்களைசமாதானத்துடனும். கண்ணியவாகவும் குழப்பமின்றியும் காப்பாற்றவல்லவா அப்படியின்றி கண்ணியமாகவும், ஒழுங்காகவும். நீதியாகவும். நடந்துகொள்ளும் பிரஜைகளுக்குத்தான் அரசாங்கமென்றும் கொள்ளைக்காரர்களுக்கும் குழப்பக்காரர்களுக்கும் கொலைகாரர்களுக்கும் அரசாங்கம் தன்கடமையைச செய்யாது என்றால் அவ்வரசாங்கம். இருந்தென்ன அழிந்தென்ன? நம்புபவர்களுக்கே தனது காக்ஷியை அருளை கருணையைக் கொடுத்து சற்று பகுத்தறிவுடன் விசாரணைசெய்பவர்களிடம் தன்சக்தியைக்காட்டக்கூடாதென்றே, காட்டமுடியாதென்றே பயந்து ஓடும் ஒரு கடவுள் இருப்பதில் யாருக்கென்ன பிரையோஜனம். இல்லாமல் அழிவதில்யாருக்கென்ன நஷ்டம்.

நமது நாட்டில் ஒருபுரம் பல்லாயிரக்கணக்கான மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி பரதவிக்க ஒருபுரம். நாட்டின் இரண்டிலொருபாகமான பெண் மக்கள் போதியபடிப்பின்றி. பலவந்த மணத்தாலும், பால்ய மணத்தின் கொடுமையாலும். விதவைத்தன்மையாலும் அடிமைப்பட்டு சுதந்தரமிழந்து பிறப்புரிமையை அடையமுடியாமல் பரதவிக்க. ஒருபுரம் பணக்காரர்களெல்லாம் ஏழைகளைத்துன்புறுத்த முதலாளிகளெல்லாம் தொழிலாளிகளை உழைப்புக்குத்தகுந்த ஊதியம்கொடுக்காமல் வருத்த. ஒருபுரம் ஜாதிக்கொடுமை தலைவிரித்தாடி பல்கோடி மக்களைத் தாழ்த்தப்பட்டோரென்றும்,தீண்டாதாரென்றும்கொடுமைப்படுத்த மதவேற்றுமையால் பல்லாயிரம் மக்கள் உயிர்துறக்க இன்னும் இதுபோன்ற கொடுமைகள் மல்கிக்கிடக்க சர்வசக்தியும் நிறைந்த எல்லாம்செய்ய வல்ல, எங்கும்வியாபித்திருக்கிற ஒருகடவுள். நரியைப்பரியாக்குவதிலும் கழுதையைக் குதிரையாக்குவதிலும். மாட்டை ஆடாக்குவதிலும். தன் அறியசக்தியைச் சில வழித்துக்கொண்டு கல்கத்தா இருட்டறைப்போன்ற கோவில்களில்உட்கார்ந்து கொண்டு தினம்ஐந்துவேளைசாப்பிட்டுக்கொண்டு வெள்ளியிலும், தங்கத்திலும். செய்யப்பட்ட ரதத்தில் ஊர்சுற்றிக்கொண்டு இருப்பானகில் அவனது உலகாளும் திறமையைஎன்னென்று கூறுவது.

முடிவாக நமது ஆத்திக நண்பர்களுக்கு ஒன்றுகூறி நமது கட்டுரையை முடித்துக்கொள்ளுகின்றோம். ஆஸ்தீகர்களே? புராணமரியாதைக்காரர்களே? குருக்களே? மடாதிபதிகளே அர்ச்சகர்களே? உங்கள் கடவுளுக்கும் சுயமரியாதைக்காரர்களுக்கு. விரோதமோ பகைமையோ கிடையாது. அடுத்த நிமிஷம் எந்த ஆஸ்தீகராவது கடவுளின் அறிய சக்தியையும் அவர் பக்தர்களை சமாதானத்துடன் காப்பாற்றுகிறாரென்பதையும் இன்னும் சுயமரியாதைக்காரர்கள் எதிர்க்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும். பகுத்தறிவின் ஆராய்ச்சியில் ஒப்புக்கொள்ளக் கூடியதும் தகுந்த ஆதாரத்துடனும் சமாதானம்கூறினால் அதை சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் ஒன்றுக்கொன்று முரணாகவும். மேல்கண்ட கொடுமைகளுக்கெல்லாம். ஆதரவுகொடுக்கும் ஒருதெய்வத்தை கருங்கடலில்போட்டுக்கொன்றுவிடவேண்டுமென்று சுயமரியாதைக்காரர் சொல்லுவதில் என்னதவறு இருக்கிறது.

ஆகையால் சோதர சோதரிகளே? இத்தனைகாலமாக நாம் கொண்டுவந்த தெய்வநம்பிக்கை, மதசாஸ்திரபுராண நம்பிகை அவதாரநம்பிக்கை முதலிய நம்பிக்கைகளே நம்நாட்டின் தற்கால அடிமைநிலைக்குக்காரணம் என்பதைஉணர்ந்து உங்கள் பகுத்தறிவின் துணைகொண்டு வீரத்துடன் அவைகளைத் துலைத்து விடுதலையடைய முயலுங்கள். இதுவே நமது வேண்டுகோளாகும்-

---

[5ம் பக்கத்தொடர்ச்சி]

மரிஷம் [Hypnotism) என்றால் என்னவென வினவுகின்றார். மெஸ்மரிஸமென்ற வார்த்தை, தற்போது வழங்குவதில்லை. கை ஜாடையால் தூங்கவைப்பதற்கு இப்னாடிஸமென்று சொல்வார்கள். இதில் ஒன்றும் விசேடமில்லை. பிள்ளைகளைப் பெற்ற தாய்மார், அனுதினம் தங்கள் குழந்தைகளை "இப்னோடைஸ்" செய்து தூங்க வைக்கின்றார்கள். "எலா, லலா, லலயை" என்ற பாட்டு பாடியும், "ஆராரோ, ஆராரிரோ" என்னும் பாட்டாலும், நமது பிள்ளைகளை தூங்கவும் வைக்கின்றோம். அதன் அழுகையும் தணிக்கின்றோம். அதே மாதிரியாகவே சில நோயாளிகளின், சிற்சில கை ஜாடையால் நோயின் பாதை சற்றுத் தணியச்செய்கின்றார்கள். இது Suggestion என்ற சிகிச்சை என வழங்கும் தேள் கடித்தால், கோழி இறகைக் கொண்டாகிலும், வேப்பிலையைக்கொண்டாகிலும், தொடப்பக்குச்சியைக் கொண்டாகிலும் அடுத்தடுத்துத்தொட்டால், சற்று பாதை நீங்குமென்று சொல்கின்றார்கள். இதனுடன் அர்த்த மில்லாத சில வார்த்தைகளையும் சொல்கின்றார்கள். இந்த வார்த்தைகளின் சத்தமும், தொடும் ஸ்பரிசமும் சேர்ந்து, கடிப்புள்ளோனுக்கு ஓர் வித ஆறுதலை உண்டாக்கினும் உண்டாக்கலாம்— ஆனால் எனக்குப்பலதடவை தேள் கொட்டிய போது, மந்திரமும் பயன்படவுமில்லை. தந்திரமும் பயன்படவுமில்லை: இரவு எல்லாம் கஷ்டப்பட்டே தொலைந்தது, சிலருக்கு Suggestion பயன்படுவதில்லை என்கின்றார்கள். இதன் விஷயமாக 50, 60 பாதிரிமார்கள் சேர்ந்து ஒரு, ரிபோர்ட்டு, அறிக்கை இட்டிருக்கின்றனர். [Spiritual Healing-by a Committee Mac Billas. s1914]. இதில் கண்டுள்ள விஷயங்களால். மந்திரம், தந்திரம்என்றவை,Suggestion என்ற சிகிச்சையால் இருக்கலாமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

நமது நிருபர்களுக்குக்கடைசியில் தெரிவித்துக்கொள்வதென்ன வெனில், தரித்திரம், பஞ்சம், நோய், அறியாமை, கல்வி இன்மை நிறைந்துள்ள நமது நாட்டில், இவைகள் குறையுமாறு உழைப்பது சிறந்ததாகுமென தெரிவித்துக்கொள்ளுகின்றேன். பொய் நம்பிக்கை, துர்பழக்கம், அடிமைத்தனம், சுதந்தர மில்லாமை, சமத்துவமில்லாமையால் துன்புறும் நமது தோழர்களை, கைதூக்கி, அவர்களை ஒளிவுபெறச் செய்வதை விட சிறந்த பணி இவ்வுலகில் இல்லை என அறிந்து உழைப்பார்களெனவும் கோருகின்றோம்.

நாகர்கோவில்

சுயமரியாதை இளைஞர் சங்கம்,

ஷை சங்கத்தின் மூன்றாவது பொதுக்கூட்டம் 11—6—32 சனிக்கிழமை அன்று மாலை 5-மணிக்கு இரவி புதூர் சண்முகானந்த வாசிப்புச்சாலையின் முன்பக்கத்தில் தோழர் வள்ளிநாயகம்பிள்ளை அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் எஸ். கிருஷ்ணன், கே. ராமய்யா, எஸ். சுடலைமுத்து ஆகிய அன்பர்பள் சுயமரியாதை மதம் மூடபழக்க வழக்கம் தீண்டாமை என்பதுபற்றி பிரசங்கித்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோட்டாறு சுயமரியாதை வாசகசாலை.

ஷை வாசகசாலையில் 10—6—32 வெள்ளி அன்று காலை 10-மணிக்கு திரு. ஆ. இ. பெருமாள் அவர்கள் தலைமையில் வழக்கம்போல் மாதாந்தக்கூட்டம்நடைபெற்றது. அவ்வமயம் தோழர் எஸ். சுப்பிரமணியம், கே. ராமய்யா, எஸ். பூதலிங்கம், ஆர். மாடசாமி, எஸ். கிருஷ்ணன் ஆகியவர்கள் பேசியபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்.)

லால்குடியில் தீண்டப்படாத கிறிஸ்தவர்களின் பொதுக்கூட்டம்.

13-6-32-ந்தேதி காலை 8-30 மணி முதல் 12-30 மணிவரையில் லால்குடியில் தீண்டப்படாத கிறிஸ்துவர்களின் பொதுக்கூட்ட மென்று நகர் திரு எஸ் ஆரோக்கியசாமி அவர்களின் தலைமையில் கீழ்நடந்தேறியது. அவ்வமயம் லால்குடி திரு எஸ் உபகாரம், எம். விசுவாசம் ஆகிய இருகத்தோலிக்க வாலிபர்களுக்கு பாதிரியாரின் சடங்கின்றி சிக்கன முறையில் இருசீர்திருத்த திருமணங்கள் நடந்தேறின. (ஒருநிருவர்)

சாத்தன் குளம்.

கைரிய்யா சங்கம்:— இச்சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் உபதலைவர் ஜனுப் அ- யி. முகமத்யூசுப் சாஹிப் அவர்கள் தலைமையில் 6-6-32 மாலை 4மணிக்கு கூடியது. வரவு செலவு கணக்குகள் சரிபார்த்துவிட்டுப்பின் பல தீர்மானங்கள் விவாதத்திற்குஎடுத்துக்கொள்ளப்பட்டன. இடை இடையே அத்தீர்மானங்களுக்கு.விரோதமாய் ஜனுப் அ. யி. யூசுப் சாஹிப் அவர்களால் கேட்கப்பட்ட எல்லாக் கேள்விக்கும் தக்க பதில் சங்கத்தின் ரூல்ஸ் புத்தகங்களிலிருந்தே கொடுக்கப்பட்டு இறுதியில் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. (ஒரு நிருபர்)

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கொடூரமானதாயு மிருந்திருக்கிறது. அமெரிக்காவில் ஜியார்ஜியா பகுதியில் உள்ள மக்களை அன்பும் தயாளமும் உடையவர்களாகச் செய்திருக்கிறதா? மனிதர்களை உயிரோடு தோலையுரித்து வதை செய்பவர்கள் கல்லாலும், மரத்தாலுமாகிய தெய்வங்களைக் கும்பிட்டாலும்கூட இதனினும் கொடூரமானவர்களாகி விடுவார்களா?

மதமின்றி மக்கள் முன்னேற்றமடைய முடியாதா? மதத்தைக்கட்டி அழுதாய் விட்டது. மதத்தைப் பரிசோதனை செய்தாய் விட்டது. எந்த தேசத்திலும் எந்த காலத்திலும் அது தவறிவிட்டது. அதனால் உபயோகமில்லை.

மதம் ஒரு பொழுதும் மக்களை தயாள சிந்தையராக்கியதில்லை. மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டதையும், கழுவேற்றப்பட்டதையும் மறந்துவிடாதீர்கள்............மதம் எப்பொழுதும் கலைகளுக்கும், விஷய பரிசீலனைகளுக்கும், அறிவிற்கும் விரோதியாகவே இருந்து வருகிறது.

மதம் மனிதனை எப்பொழுதும் விடுதலை செய்யவில்லை. அது ஒரு பொழுதும் மனிதனை ஒழுக்கமும், பரிபக்குவமும், சுறுசுறுப்பும், சக்தியும் உடையவனாகச் செய்வதில்லை. கிறிஸ்துவர்கள் 'நாகரீகமற்ற நாட்டு மனிதர்களைப்பார்க்கிலும் பரிபக்குவமுடையவர்களென்றாவது தாயசிந்தையரென்றாவது, உண்மையாளரென்றாவது சொல்லமுடியுமா? காட்டு மனிதர்களிடத்து காணப்படும் தீய குணங்களுக்கும், கொடுமைகளுக்கும் அவர்களுது மூட நம்பிக்கைகளே காரனமல்லவா? இயற்கையின் முழுஐக்கிய ஒழுங்கில்(Uniformity நம்பிக்கையுடையவர்களுக்கு மதம ஏற்றுக்கொள்ள முடியாததாகும். உலகப்பொருள்களின் இயற்கையையும், குணங்களையும் நமது பிரார்த்தனைகள் மூலம் மாற்றமுடியுமா? நமது வேண்டுகோளின் பிரகாரம் கடலின் வெள்ளலைகளைக் கூட்டவேனும், குறைக்கவேனும் கூடுமா? தியாகத்தால் காற்றுகளை மாற்றமுடியுமா? மண்டியிட்டு வணங்கினால் செல்வம் கிட்டுமா? தெய்வத்தினிடம் முறையிடுவதால் வியாதி குறையுமா? சடங்குகள் நமது அறிவை வளர்க்குமா? ஒழுக்கமும், விழுப்பமும் பிச்சையாகப் பெறமுடியுமா? பொருள் உலக நிகழ்ச்சிகளைப் போன்றே சித்தக்கடல் சம்பவங்களும் உறுதியானவைகளையும் அவசிய காரணமாய் உண்டாக்கப் படுகின்றனவாயுமில்லையா? தமது சரீரத்தைப்போலவே சித்தமென்று சொல்வதும் இயற்கையானதல்லவா? இயற்கையை ஆளும் ஒரு கர்த்தா வேண்டுமென்றும் இக்கர்த்தா பிரார்த்தனைகளுக்கு மனமிரங்குகிறாரென்றும் வெகுமதியும், தண்டனையும் செய்கிறாரென்றும், இவர் வாழ்த்து தலையும், முகஸ்துதியையும் விரும்புகிறாரென்றும் வீரமுள்ளவர்களையும், சுதந்திரமுள்ளவர்களையும் புறக்கணிக்கிறாரென்றும் எண்ணுகிறார்கள். இவ்வெண்ணத்தின் பேரிலேயே மதம் அமைகிறது.

(தொடரும்)

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

களும், குருக்கள் பரிவாரங்களும் போ போ வென்னும் சப்தத்துடன் தள்ளியும், இடித்துக்கொண்டு போவார்கள். சன்னதி சன்னதியென்று பண்டாரங்களும், அவர்கள் படையும், சத்தம்போட்டு அவரவர் கட்டளைக்காரர்களை முன்னிறுத்தத் தள்ளிக்கொண்டிருப்பார்கள். இந்த சமயம் உள்ளூர்காரர்களோ, அசலூர்காரர்களோ, குருக்களோ, பண்டாரங்களோ, இவர்கள் சிப்பந்திகளோ, தேவஸ்தானமோ, அவர்கள் சிப்பந்திகளோ, மலையிலிருக்கும் வானரங்களோ, பாடசந்நியாசிகளோ போகரோ, இடும்பனோ, கடம்பனோ, பஞ்சாமிர்தமோ, பாம்புக்காவடியோ, வேலாயுதமோ, கோழிக்கொடியோ, மயில்வாகனமோ, திருப்புகழோ, அமர்களோ, முருகன் திருவருள் கடாட்சமோ, அல்லது தண்டபாணிதானோ யாரோ சுவாமி தெருசனைக்கு அவதிப்படும் பெண்களை மாரைப்பிடித்து அமுத்துவதும், முத்தம் கொடுக்க வாயை முகத்தில் அமுத்துவதும், இடிப்பதும், பிடிப்பதுமாக நடக்கும் அக்கிரமங்கள் பலருக்குத்தெரியும், பலர் சொல்லக் கேட்டோம், பெண்கள் போடும் சத்தம் இரைச்சலாலும், இருட்டாலும், அரகரா முருகாவென்னும் தெய்வ கோஷிப்பாலும் யாருக்கும் கேட்பதில்லை கையைத்தட்டி ஆளைப்பார்ப்பதற்குள் பெண்களைத்தொட்டகை பெருமாளைக் கும்பிட்டுக்கொண்டிருக்கிறது. வாயைத்தள்ளி முகத்தைப்பார்ப்பதற்குள் வாய் அரகரா போடுகிறது, பெண்ணைப்பிடித்த கை ஆளை விலக்குகிறது. வெளியே சொல்லவோ வெட்கம். ஆணகளிடம் சொல்லவோ ஆளைக்காணோம். எல்லாம் பக்தர்களாக விளங்குகிறார்கள். பெண்களிடம் சொன்னாலோ நாசமாகப்போகட்டும், துலைந்துபோகட்டும், வெளியே சொல்லாதே தெய்வமே பார்த்துக்கொள்ளட்டு மென்கிறார்கள். இந்த நிலையில் சந்நதி பலமாக திருவருள் அமுதூட்டிவந்து கொண்டேயிருக்கிறது அப்படியிருக்கையில்

சென்ற மாசிமாதம் தஞ்சாவூரைச் சேர்ந்த ஒரு கூட்டம் பழனித்தெரிசனைக்கு வந்தார்கள். அவர்கள் சந்நதிக்குள் சாமி தெரிசனம் செய்துகொண்டிருக்கையில் அதில் ஒருபெண்ணை ஒருபண்டாரம் கட்டிப்பிடித்து துராக்கிரகம் செய்தான் அவனுடைய இந்திரியம் பெண்ணின் புடவையெல்லாமாய்விட்டது. சந்நதிஇருட்டாயிருந்ததினால் இரைச்சலாலும், பக்தர்களின் அர்ச்சனை கட்டளை அபிஷேகம் முதலிய பணத்தால் கொழுத்திருந்த பண்டாரத்தின் பலத்தாலும் பெண் தப்பிக்கப்போட்ட சத்தமும், பிரயத்தனமும்உடனே பலிக்கவில்லை. பின் தன்னுடன் வந்திருக்கும் ஆண்களிடம் இவன் வெகு தொந்தரவு செய்துவிட்டான் என்று ஆளையும் காட்டினாள். சத்தம் உண்டாயிற்று. சந்நதியோ ஞானமும்அருளும் விளங்குமிடம். அங்கிருப்பவர்களோ மோக்ஷத்திற்குப் போய்க்கொண்டும், அனுப்பிக்கொண்டு மிருக்கிறவர்கள். குற்றவாளியைப்பிடித்து அவனுக்குத்தண்டனை கொடுக்கஏற்பாடு செய்யும் மனிதக்குணமுடைய மனிதர்கள் அங்கில்லையே அங்கிருப்பாரெல்லாரும் கடவுள் கைங்கிரியம் செய்கிறவர்களல்லவோ? ஆனதால் குற்றவாளி ஓடிவிட்டான். அந்தப் பெண்ணை தேவஸ்தான அதிகாரிகள் விசாரித்தார்கள். புடவையைப்பார்த்தார்கள். உண்மை தெரிந்தார்கள், செய்தவன் எங்கே என்று கேட்டார்கள், ஓடிவிட்டான் என்றார்கள் யார் என்று கேட்டார்கள் பண்டாரமென்றார்கள் எந்தப் பண்டாரமென்று கேட்டார்கள் பக்கத்தூர் பண்டாரமென்றார்கள் இங்கே எதற்காக வந்தான் எங்கே இருந்தான் என்று கேட்டார்கள் அந்த பண்டாரத்துவீட்டில் இந்த குருக்களுக்குக்கையாள் எந்தப் பண்டாரத்திற்கோ சொந்தக்காரன் என்றார்கள் கோவில் அதிகாரி. சில பண்டாரங்கள் மலையேரப்படாதென்று உத்தரவு போட்டார்கள். அதற்குப்பின் பங்குனி உற்சவத்தில் தடைபட்ட பண்டாரங்களின் வரும்படி கெட்டுவிடுமென்கிற கருணையால் பழனிமலையை பழயபடியே ஏறிக்கொள்ளுங்கள் என்கிற மறு உத்தரவும் போட்டார்கள். கனம் வெள்ளக்கிணத்து வெள்ளியங்கிரிக் கவுண்டரும் அங்கே போயிருந்தார். அவர் கோவில் அதிகாரத்தின் முக்கியபாகத்தை உடையவரானதினால் அவரும் அந்த விவகாரத்தில் கலந்திருந்தார் என்று சொன்னார்கள்.

என் அன்பான அண்ணா! பாம்பு கோவிலுக்குள் புகுந்தது, கோழி பறந்தது, மீன் குதித்தது, மண் சர்க்கரையாயிற்று என்கிற அருள் ஒரு பெண்ணின் மேல் குதிக்கவேண்டாமா? துஷ்டனுடைய கை அப்படியே நிற்கவேண்டாமா? அப்பொழுதானே அருள் சக்திக்கு யோக்யதையாயிற்று. தெய்வத்தை நம்பி அவர் சந்நதியில் வணங்கிக்கொண்டிருக்கும் ஒருபெண்ணை காப்பாற்றாத சக்திக்கு ஆயிரம் அபிஷேகமும், இங்கிருந்து அனுப்பப்படும் கட்டளையும்உபயோகப்படுமா? நீங்கள் ஆலோசித்துப்பார்க்கும் அறிவுடையவர்களாயிற்றே அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள். கடவுளைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்று மட்டும் சொல்லி எல்லாக்கொடுமையும் கடவுளைக்காட்டி அவர்பேரில் செய்யும் பாவியா நீங்கள், வட்டிமேல் வட்டிவாங்கி ஜனங்களை வதைத்துவரும் பாவத்திற்குப் பால்காவடி கட்டும் பணக்காரரல்லவே நீங்கள் தெய்வத்தை நம்பி கோவிலுக்கு வந்து சந்நதியில் தெரிசனம் செய்யும் பெண்ணை தெய்வமே காப்பாற்ற வேண்டும் அது அங்கிருந்தாலும் இல்லாவிட்டாலும் குருக்களும் பண்டாரங்களும் காப்பாற்றவேண்டும் அதுவுமில்லாவிட்டால் கோவில் அதிகாரிகள் காப்பாற்றவேண்டும், அதுவுமில்லாவிட்டால் பக்தகோடிகள் காப்பாற்ற வேண்டும். முதலை யானையைப்பிடித்த சத்தம் கேட்டு பெருமாள் எத்தினையோ கோடி மைலுக்கு அப்பாலிருந்து சக்கரத்தை விட்டாரும் இதுபத்தடி தூரங்கூட இல்லையே தெய்வத்தின் கண்ணிற்கு முன்னால்தானே வேலை நீட்டினால் போதுமே.

வெள்ளையர்கள் கரும்புத்தோட்டத்தில் கற்பழிக்கிறார்கள் என்று தேசீயவாதிகளெல்லாம் கூப்பாடு போட்டார்களே கோவிலில் கண்ணுக்கு முன்னால் நடப்பதை கடவுள் செயலென்று விட்டுவிட்டார்களோ? கோவிலைப்பற்றிக்குற்றம் சொல்லாதீர்கள் சில சீர்திருத்தம் செய்வதை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம் என்ற பண்டிதர்களெல்லாம் இப்பொழுது எங்கே?

என்னண்ணா! மின்சார விளக்குகள் கோவில்களில் போட்டிருப்பது உங்களுக்குத்தெரியும். சந்நதிக்கு முன்னாலும் போட்டுவிட்டால் இவ்வித அக்கிரமங்களுக்கு ஒருதடையாகும். சந்நதியில் மின்சாரவிளக்கு போட்டால் தெய்வத்தின் அருள் சக்திபோய்விடுமென்று கோயமுத்தூர் சைவப்பண்டிதர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் சொல்லுகிறாரும். இவர் சைவப்பண்டிதர். கோவில்களுக்குத்தரும கர்த்தாவாக விருந்திருக்கிறார். தேவஸ்தான அனுபோகமுண்டு இவர்கையை அசைத்தால் சுவாமி ஆகாசம் போய்விடுமோ, பாதாளம் போய்விடுமோ, செத்துப்போய்விடுமோ, செத்துப்போனால் பின் அவதாரம் பண்ணுமோ, பண்ணாதோ என்று நினைத்து சுவாமியை வெகு ஜாக்கிரதையாகக் காம்பாற்றிவருகிறவர். அதனால் சுவாமி விஷயத்தில் வெகு சந்தேகம். சுவாமி . சந்நதி முன்னால் மின்சார விளக்குப்போட்டால் அருள் சக்திபோகாது பெண்களை அமுத்தும் சக்தி போய்விடுமென்பதை அவருக்குத்தெரியப்படுத்தி கோவில் விபசார விடுதியென்று மகாத்மா காந்தி . சொன்னதோடு நில்லாமல் துராகிரதத்திற்கும் விடுதியாகவிருக்கிறது இனிமேலாவது நீங்களெல்லாம் கவனியுங்கள்.

கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால்அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஞு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0.   வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.எ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம்,தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கரமத்எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

உங்கள் கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St.   Calcutta.

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual intercourse. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

மதனகாமேஸ்வர லேகியம் (*Regd*)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனும். (ரிஜிஸ்டர்)

சித்தஔஷதசாலை
கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி,
தென்மலையாளம்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உளள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0,

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.